Registered as a News Paper in Sri lanka
விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
10% வீத சாதாரண போட்லான்
சிமெந்து (O.P.C) ராம்கோ சிமெந்து
(C/1460)


முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 சித்திரை 30 சனிக்கிழமை (12.05.2012) பக்கங்கள் 20 ஓசை – 224













# இலங்கையை பிளவுபடுத்த தமிழகம் முயலக்கூடாது

## சுஷ்மா சுவராஜ் தெரிவிப்பு



(மதுரை)

இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தமிழீழம்தான் தீர்வெனக் கூறி இலங்கையைப் பிளவுபடுத்த தமிழக அரசியல் தலைவர்கள் முயற்சி செய்யக்கூடாதெனவும், ஆனால் இலங்கையில் வாழ்கின்ற தமிழ் மக்கள் தமிழீழம் கேட்கவில்லை எனவும் இந்திய மக்களவையின் எதிர்க்கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ் தெரிவித்துள்ளார்.

மதுரையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பாரதீய ஜனதாக் கட்சியின் மாநில மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கைத் தமிழ் மக்களின் நிலைமைகள் குறித்து அறிந்து கொள்ள அண்மையில் எனது தலைமையில் அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு இலங்கைக்கு விஜயம் செய்தது. இலங்கைக்கு செல்வதற்கு முன்னரே நாங்கள் விரும்பும் இடங்களுக்கு எங்களை அழைத்துச் செல்ல வேண்டும் என

19 ஆம் பக்கம் பார்க்க

## புலிகளுக்கு நிதி திரட்டிய அமெரிக்க தமிழருக்கு சிறை



அமெரிக்காவில் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு நிதி திரட்டியதாக குற்றஞ் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்ட நபருக்கு கடூழியச் சிறைத் தண்டனை வழங்கப்படும் என அமெரிக்கப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட கருணாகரன் கந்தசாமி என்பவருக்கு 20 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்படலாம் என தெரிவிக்கப்படுகிறது. 55 வயதான இந்நபர் 6 வருடங்களுக்கு முன்னதாக

19 ஆம் பக்கம் பார்க்க

## யாழ். நகரில் திருடிய மோ. சைக்கிள் கண்டியில் பொலிஸாரால் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகர்ப் பகுதியில் கடந்த மாதம் காணாமற்போன மோட்டார் சைக்கிள் கண்டியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த மோட்டார் சைக்கிளின் உரிமையாளர் கடந்த 3 ஆம் திகதி இரவு யாழ். பஸ் நிலையப் பகுதியில் நிறுத்தி விட்டு நித்திரை கொண்டுள்ளார். மறுநாள் காலை எழுந்து பார்த்த வேளை மோட்டார் சைக்கிள் திருடப்பட்டது தெரியவந்தது. இது தொடர்பாக அவர் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

மோட்டார் சைக்கிளை திருடிச்சென்றவரென சந்தேகிக்கப்படுபவர் கண்டி கடுகஸ்தோட்டப் பகுதியிலுள்ள மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் மோட்டார் சைக்கிளை பதிவு மாற்றம் செய்ய முற்பட்ட வேளை அது யாழ். மாவட்ட பதிவுகளுடன் காணப்பட்டது. இதனையடுத்து மோட்டார் போக்குவரத்து அதிகாரிகள் அப்பகுதி பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து சந்தேகநபர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டு கண்டி நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்த வழக்கு நேற்றைய தினம் யாழ். நீதவான் நீதிமன்றில்

19 ஆம் பக்கம் பார்க்க

## விசுவமடு சூட்டுச் சம்பவம் கைதான சிப்பாய்க்கு பிணை

(கிளிநொச்சி)

விசுவமடு குமாரசாமிபுரம் எனுமிடத்தில் இளைஞர் ஒருவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட சம்பவம் தொடர்பாக நேற்றைய தினம் இராணுவச் சிப்பாய் ஒருவரை கைதுசெய்த பொலிஸார் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்திய வேளை அவரை 2 இலட்சம் பெறுமதியான 2 ஆட்பிணையில் நீதவான் விடுதலை செய்தார்.

நேற்றுக்காலை குறித்த சிப்பாய் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட வேளை சூட்டுச் சம்பவத்தின் இரண்டாவது நபரின் முன்னிலையில் அடையாள அணிவகுப்பு நடத்தப்பட்டது. இதன்போது அவர் குறித்த சிப்பாயை அடையாளம் காட்டத் தவறியதையடுத்து நீதவான் கைதுசெய்யப்பட்ட

19 ஆம் பக்கம் பார்க்க



புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சின் ஏற்பாட்டில் புனர்வாழ்வளிக்கப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்க முன்னாள் போராளிகள் குழுவொன்று நேற்றைய தினம் காலி முகத் திடலுக்கு சுற்றுலா சென்றது. அங்கு முன்னாள் போராளிகள் ஒருவரையொருவர் கட்டித் தழுவுவதைக் காணலாம்.

## பரந்தன் படுகொலை விசாரணை வேண்டும்

### கடும் தொனியில் கனடா



(கொழும்பு)

கிளிநொச்சி - பரந்தன் பகுதியில் கடந்த வாரம் ஒரு கனடிய பிரஜை கொலை செய்யப்பட்டமை குறித்து இலங்கை முழுமையான விசாரணை நடத்த வேண்டும் என தாம் எதிர்பார்ப்பதாக கனடா கூறியுள்ளது.

போர்க்காலத்தில் தாம் இழந்து போன தமது குடும்ப சொத்துக்களை மீளப் பெறும் நோக்கத்துடன் கனடாவின் பிரஜையான அந்த இலங்கை தமிழ் வம்சாவழியைச் சேர்ந்தவர் அங்கு வந்திருந்தபோது கொல்லப்பட்டதாகச் செய்திகள் கூறுகின்றன.

கிளிநொச்சி நகருக்கு சற்று வெளியே அந்தோனிப்பிள்ளை மகேந்திரராஜா என்னும் அந்த நபர் ஒரு குழுவினால் கொல்லப்பட்டிருக்கலாம் என்று இலங்கைக்கான கனடாவின் தூதுவர் புரூஸ் லெவி பி.பி.சியிடம் கூறியுள்ளார்.

பல வருடங்களாக விடுதலைப் புலிகளின் தலைமையகமாக திகழ்ந்த இந்தப் பகுதி தற்போது இலங்கை இராணுவத்தின் கடுமையான பாதுகாப்பின்

19 ஆம் பக்கம் பார்க்க

## ஈ.பி.ஆர்.எல்.எவ் பத்மநாபா அணி கூட்டமைப்புடன் இணைய முடிவு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இயங்கி வரும் ஈ.பி.ஆர்.எல்.எவ் பத்மநாபா அணி சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையில் இயங்கும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியுடன் இணைந்து கொள்ளத் தீர்மானித்திருப்பதாகவும், இதன் மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து தமிழ் மக்களின் ஒற்றுமையை பலப்படுத்த முடியும் என்றும் அந்த அணியின் தலைவரும், கிழக்கு மாகாணசபை உறுப்பினருமான இரா.துரைரத்தினம் தினமுரசுக்குத் தெரிவித்தார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## ரணில் சந்திப்பு நடத்திய வேளை விடுதியில் கைக்குண்டு மீட்பு

### மட்டக்களப்பில் சம்பவம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று மாலை கலந்து கொள்ளும் நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்ட கட்டடத் தொகுதியில் குண்டொன்று கண்டு பிடிக்கப்பட்டதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பிற்கு விஜயம் மேற்கொண்ட ரணில் விக்கிரமசிங்க தனது கட்சி பிரதிநிதிகளையும் சிவில் சமூக பிரதிநிதிகளையும் தனித் தனியாகச் சந்தித்து

19 ஆம் பக்கம் பார்க்க

## நீதிமன்றில் பணம் திருடிய சிப்பாய்க்கு ஆறு மாத சிறை

(பருத்தித்துறை)

நீதிமன்றில் வைத்து பணத்தை களவாடிய இராணுவச் சிப்பாய்க்கு பருத்தித்துறை நீதிமன்றம் 6 மாத சிறைத்தண்டனை விதித்தது.

கடந்த 2 வாரங்களுக்கு முன்னர் பருத்தித்துறை நீதிமன்றில் ஊடகவியலாளர் ஒருவரின் பின்னால் நின்ற இராணுவச் சிப்பாய், ஊடகவியலாளரின் ஜீன்ஸ பொக்கட்டிலிருந்து குறித்த பணத்தை களவாடியுள்ளார். இது தொடர்பாக உடனடியாகவே நீதிமன்றிலுள்ள பொலிஸாரிடம் முறையிடப்பட்டது.

இதனையடுத்து குறித்த சிப்பாயை சோதனையிட்ட பொலிஸார் அவரின் உள்ளாடைக்குள் இருந்து திருடப்பட்ட 10 ஆயிரத்து 20 ரூபா பணத்தை மீட்டதுடன் நீதிமன்றிலும் முன்னிலைப்படுத்தினர். இதனையடுத்து

19 ஆம் பக்கம் பார்க்க

# கடற்கரையில் காத்திருக்கும் அபாயம்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு தலைக்கிரியில் (கிரிமுனங்கு) கடற்கரையோரமாக வெடிக்காத வெடிபொருட்கள் காணப்படுவதாக அப்பகுதி கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கடற்கரையில் மணல் பகுதியில் இவ் வெடி பொருட்கள் புதைந்த நிலையில் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இக்கடற்பரப்பில் கடற்றொழிலாளர்கள் கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. 1990 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இப்பகுதியில் நடைபெற்ற யுத்த நடவடிக்கைகளின் போது குறித்த பகுதி நோக்கி ஏவப்பட்ட வெடி பொருட்களே கடற்கரை மணல் பகுதிகளில் வெடிக்காது புதைந்து காணப்படுவதாகவும் அப்பகுதி மக்களால் தெரிவிக்கப்படுகிறது. (பா)

# தடம்புரண்டது ஆட்டோ மூவர் படுகாயமடைந்தனர்

(யாழ்ப்பாணம்)

ஆட்டோவுக்கு குறுக்கே நாய் பாய்ந்ததில் ஆட்டோ தடம் புரண்டு விபத்துக்கு உள்ளாகிய சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

ஐந்து சந்திப் பகுதியில் நேற்றுக் காலை 9.30 மணிக்கு இடம்பெற்ற இவ்விபத்துச் சம்பவத்தில் கொக்குவில் பகுதியைச் சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

சுபா விஜிகரன் (வயது-30) கை முறிந்த நிலையிலும், எம். ஜெசி (வயது-22) கால் முறிந்த நிலையிலும், விஜிகரன் (வயது-31) சிறு காயங்களுடனும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் இரு சகோதரிகளும் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஆட்டோவும் பலத்த சேதம் அடைந்தது. (எஸ்)

# புத்தக தினமும் பரிசளிப்பும்

(ஜெயபுரம்)

உலக புத்தக தினமும், பரிசளிப்பு விழாவும் பூநகரி பொது நூலகத்தில் நேற்று வெகு சிறப்பாக நடைபெற்றது.

கழிவுப் பொருட்களில் இருந்து மாணவர்களால் மேற்கொள்ளப்பட்ட உற்பத்திகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு பரிசளிக்கும் வைபவமும் இங்கு இடம்பெற்றது.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் பிரதேச அமைப்பாளரான தி.றொபின், வண.பிதா லூக் மற்றும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியான அமரதுங்க ஆகியோர் மங்கள விளக்கேற்றி மேற்படி நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர்.

நிகழ்வு மண்டபத்தை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கிளிநொச்சி மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கோ.ஜக்சின் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் இராணுவ அதிகாரிகளான கப்டன் ஹேரத் மற்றும் அமரதுங்க ஆகியோரும் பாடசாலை அதிபர் நா.நடேசமூர்த்தி, கிராம அலுவலர் கோ. அரியநாயகம், நூலகர் திருமதி சிவதர்சினி ஆகியோர் கலந்து கொண்டனர். (149)

# செயலமர்வு

(பருத்தித்துறை)

வடமராட்சி வலய பிள்ளை நேயப் பாடசாலைகளுக்கான செயலமர்வில் தரம்-3 இற்கு இன்றும், தரம் - 4 இற்கு நாளையும், தரம்-05, தரம்-1,2 மருதங்கேணி கோட்டத்திற்கு எதிர் வரும் 16ஆம் திகதியும் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வுகள் அந்தந்த நாட்களில் காலை 8.30 மணி முதல் புலோலி மெ.மி.த.க. பாடசாலையில் நடைபெறவுள்ளது. (109)


## சிறு விளம்பரங்கள்

### காணி விற்பனை

சுதுமலை தெற்கில் சிறிய வெறும் காணி ஒன்றும் ஆறு பரப்பு தென்னங்காணியும் விற்பனைக்கு உண்டு. இவை கோவில், தபாற்கந்தோர், பாடசாலை என்பவற்றை அண்மித்த ஒழுங்கைப் பகுதியில் நல்ல சுற்றாடலில் உள்ளன.

தொடர்பு : க.சீவறட்ணம், றிஜிஸ்ரார் சம்பந்தர் ஒழுங்கை, சுதுமலை தெற்கு. (R/133)


# நடமாடும் மருத்துவ சேவை வடமராட்சி கிழக்கில் தொடரும்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்குப் பகுதிகளுக்கு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.கிளையினரால் வழங்கப்பட்டு வரும் நடமாடும் மருத்துவ சேவை எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் வரை நீடிக்கப்பட்டிருக்கிறது.

மருதங்கேணி வைத்திய சாலையின் நிர்மாணப் பணிகள் முழுமையாக முற்றுப் பெறாததை அடுத்து இந்நடமாடும் சேவை நீடிக்கப்பட்டிருக்கிறது.

ஏற்கனவே இவ்வைத்திய சாலை முழுமையாக முற்றுப் பெறாததை அடுத்து அதன் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவு வேலைகள் முடிவடைந்த நிலையில் அந்தப் பிரிவின் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இருந்தும் அங்கு நிரந்தரமாக வைத்தியர் தங்கியிருந்து சேவையாற்றாத நிலையிலும், நோயாளர் விடுதி நிர்மாணப் பணிகள் முற்றுப்பெறாத நிலையிலும் தொடர்ந்து ஒகஸ்ட் மாதம் வரை இந்த நடமாடும் சேவையினை வழங்கத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

நிதிப் பிரச்சினை காரணமாக ஏற்கனவே இந்த நடமாடும் சேவையை மே மாதத்துடன் நிறுத்திக்கொள்வதாக இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (பா)

## அதிபர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

தீவகக் கல்வி வலயத்தில் யா/அனலைதீவு வடலூர் அ.த.க. வித்தியாலயத்தில் அதிபர் பதவி வெற்றிடம் ஏற்படவுள்ளது.

இப்பதவிக்கு தீவகக் கல்வி வலயத்தில் கடமையாற்றும் இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களின் விண்ணப்பங்கள் கிடைக்காதவிடத்து இலங்கை ஆசிரியர் சேவை தரம் 1, தரம் 2-1, தரம் 2-II இனைச் சேர்ந்த தீவகக் கல்வி வலய ஆசிரியர்களின் விண்ணப்பங்கள் கவனத்தில் கொள்ளப்படும்.

விண்ணப்பப் படிவங்களை தீவகக் கல்வி வலயத்தில் பெற்றுக்கொள்ள முடியும். விண்ணப்ப முடிவு 2012 யூன் 10 ஆம் திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது.

## வீதி விபத்து இருவர் காயம்

யாழ்.இரண்டாம் குறுக்குச் சந்தியில் நேற்று மாலை 5.00 மணியளவில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்கள் சிறு காயத்துக்கு உள்ளானதுடன், மோட்டார் சைக்கிள் பலத்த சேதமடைந்தது.

இவ் விபத்தின் போது சம்பவ இடத்திற்கு வந்த யாழ்.போக்குவரத்துப் பொலிஸார் விபத்துத் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டனர். (எஸ்)

# எரிகாயமடைந்தவர் மரணம்

குப்பை எரிக்கும் பெயின்ற் பேணி வெடித்துச் சிதறியதில் தீக்காயங்களுக்கு இலக்காகி சிகிச்சை பெற்று வந்தவர் உயிரிழந்துள்ளார்.

நவாலி சென்.பீற்றர்ஸ் வீதியைச் சேர்ந்த அருள்ப்பு அன்ரன் குரோஸ் (வயது-68) என்ற வயோதிபரே உயிரிழந்தவராவார்.

கடந்த 6 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு வீட்டு வளவுக் குப்பையை எரிக்கும்போது பெயின்ற் பேணி வெடித்து எரிகாயங்களுக்கு இலக்காகிய நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்தார். தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட போதிலும் சிகிச்சை பலனளிக்காது நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (எஸ்)

# உயர் கல்விக்கு ஊக்குவிப்பு சந்நிதியான் ஆசிரமம் நிதியுதவி

(வடமராட்சி)

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆசிரம சைவ கலை பண்பாட்டு பேரவையினால் வறுமைக்கோட்டின் கீழ் கல்வி கற்கும் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காகப் பல்வேறு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்த வருடத்தில் வறுமைக் கோட்டின் கீழ் கல்வி கற்று பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட வறுமையான மாணவர்கள் 25 பேருக்கு அவர்களின் மேலதிக கல்வி வளர்ச்சிக்காக உள்ளூரில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு தலா ஆயிரத்து 500 ரூபாவும், வெளி மாவட்டத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு 2 ஆயிரம் ரூபா வீதமும் ஒவ்வொரு மாதமும வழங்கப்பட்டு வருகின்றது.

இதில் 15 பெண் மாணவிகளும், 10 ஆண் மாணவர்களும் அடங்குகின்றனர். அத்துடன் ஏனைய ஆரம்ப மற்றும் இடைநிலை கல்வி கற்கும் மாணவர்களின் குடும்ப நிலையைக் கருத்தில் கொண்டு அவர்களுக்காகப் பல்வேறு திட்டங்கள் ஆச்சிரமத்தால் வழங்கப்பட்டு வருகின்றது.

இதன் நிமித்தம் அந்தந்த கிராம அலுவலர் கல்வி கற்கும் பாடசாலை அதிபர், குடும்ப நிலைமை ஆகியவற்றின் சிபாரிசில் உதவித் தொகை வழங்கப்படுவதாகவும் கடந்த காலத்திலும் வறுமையில் வாழும் மாணவச் செல்வங்களுக்காக கல்விப் பயணத்துக்கான கொடுப்பனவுகள் மற்றும் நிவாரண உதவிகள் வழங்கப்பட்டது என ஆசிரம மடாதிபதி செ.மோகனதாஸ் சுவாமிகள் தினமுரசுக்குத் தெரிவித்தார். (116)


# விபத்தில் சிக்கிய குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)

கன்டர் வாகனம் மோதியதில் படுகாயம் அடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வந்த குடும்பஸ்தர் உயிரிழந்துள்ளார்.

சுதுமலைப் பகுதியைச் சேர்ந்த விஜயரட்ணம் அம்சமாலன மூர்த்தி (வயது-49) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார்.

கடந்த வாரம் கொக்குவில் பகுதியில் சைக்கிளில் சென்று கொண்டிருக்கும் போது கன்டர் வாகனம் மோதியதால் இவர் தலையில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலை அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.(எஸ்)



யாழ்.எய்ட் நிறுவனமானது நேற்று யா/கரம்பைக்குறிச்சி அ.த.க. பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு கற்றலுக்கான உதவிப் பொருட்களை வழங்கியது. இந்நிகழ்வில், மாணவர்களால் விருந்தினர்கள் மாலை அணிவித்து வரவேற்கப்படுவதையும், சமூக சேவையாளரும், பிரபல வர்த்தகருமான செ.ரஜனி மாணவர் ஒருவருக்கு கற்றலுக்கான உதவிப் பொருட்களை வழங்குவதையும் காணலாம்.


## யாழ்ப்பாணம் மாநகரசபை

### குருநகர் சந்தைக்கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல் - 2012

மாநகரசபைக்குச் சொந்தமான கீழ்வரும் இலக்கங்களைக் கொண்ட கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான விண்ணப்பங்கள் யாழ்.மாநகர சபையால் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| கேள்விப் படிவக் கட்டணம் | - ரூபா 500.00 (வற்வரி நீங்கலாக) |
| கேள்வி பிணைப்பணம் | - ரூபா 3,000.00 |
| கேள்விப் படிவம் விநியோகித்தல் | - 14.05.2012 - 31.05.2012 மு.ப. 10.00 மணி வரை |
| கேள்விப் படிவம் ஏற்றுக் கொள்ளல் | - 31.05.2012 நண்பகல் 12.00 மணி வரை |
| கேள்வி திறத்தல் | - 31.05.2012 பி.ப. 2.30 மணிக்கு |

| கடைகள் விபரம் | ஏற்றுக்கொள்ளப்படும் ஆகக்குறைந்த கேள்வித்தொகை (தலா ஒரு கடைக்கு) |
|---|---|
| குருநகர் சந்தைக் கடைகள் (மேல்தளம்) (28) | |
| 25 தொடக்கம் 27 வரை 03 கடைகள் | - 22,000.00 |
| 39 தொடக்கம் 40 வரை 02 கடைகள் | - 22,000.00 |
| 55 தொடக்கம் 60 வரை 06 கடைகள் | - 22,000.00 |
| 65 தொடக்கம் 70 வரை 06 கடைகள் | - 22,000.00 |
| 72 தொடக்கம் 82 வரை 11 கடைகள் | - 22,000.00 |

மேலதிக விபரங்கள் தேவைப்படின் மாநகரசபை நானாவித இறைவரிப் பகுதியில் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

**திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா,**
**மாநகர முதல்வர்,**
**மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்.**

(C/1488)

அடிக்கடி தவறு செய்கிறவன் அப்பாவி. ஒரே தவறைத் திரும்பத் திரும்பச் செய்கிறவன் மூடன். ஒரு தவறுமே செய்யாதவன் மரக்கட்டை. தன்னையறியாமல் தவறு செய்து, தன்னையறிந்து திருத்திக் கொள்கிறவனே மனிதன்.
- பொன்மொழி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## சாதாரண தேசியமும் தீவிரத் தேசியமும்!

மரங்கள் ஓய்வை விரும்பினாலும் காற்று அதனை விடுவதில்லை என்று மாவோ சொன்ன மாதிரி, காணும்... இனி சிங்கக் கொடியை விட்டுவிடலாம் என்று பார்த்தால், சிங்கக் கொடியோ சம்பந்தன் ஐயாவை விடுவதாயில்லை. ஏலாக்கட்டத்தில், "சிங்கக் கொடி எங்கட தெய்வம் காளியின் கொடிதானே" என்றும் நைஸாக ஒரு போடு போட்டுப் பார்த்தார். அதைக் கேட்டு, கட்சிக்காரர்களே வெகுண்டெழுந்து விட்டார்கள்.

அவர்களால் தேர்தல் வாக்குகளுக்காக வளர்த்து விடப்பட்ட தமிழ்த் தீவிரவாத தேசிய பக்தி வெறி, காளி போல ஆக்ரோசமாகவே சம்பந்தன்மீது சூலத்தை ஓங்கி ஏவியபடி இருக்கிறது. அந்த வெறுப்பு எங்குவரை சென்றிருக்கிறது என்றால், நாடாளுமன்றத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உரையாற்றும் போது, "சிங்கக்கொடி சம்பந்தன் அவர்கள்" என்று விளித்துப் பேசியதையெல்லாம் "சபாஷ்" என்று தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர்களே பாராட்டும் நிலையாகி விட்டது.

இது உண்மையில் நாம் முன்னரும் குறிப்பிட்டிருந்தது போல, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள்ளே உள்ள 'சாதா' தமிழ்த் தேசியவாதத்திற்கும் 'ஸ்பெஷல்' தீவிரத் தேசியவாதத்திற்கும் இடையிலான முரண்பாட்டின் விளைவுதான். சம்பந்தன் அவர்கள் மூன்றாண்டுகளுக்கு முன்பும் கூட, அவர் சாதாரண தமிழ்த் தேசியமாக இருக்கையில், அதற்கும் மேலான தீவிரத் தமிழ்த் தேசியத்தைக் கடைப்பிடித்தவர்களின் கொலைப் பட்டியலில் தான் இருந்த கதையை இந்தியத் தூதுக்குழுவினர் முன்னிலையில் கூறியிருக்கிறார்.

இப்போது, அவர் ஏந்திய சிங்கக் கொடியை முன்வைத்து, தீவிரத் தேசியத்தின் ஊடகத் தாக்குதலுக்கு ஆளாகி வருகிறார். "தம்பி டக்ளஸ் சரியாய்க் குடுத்தான்" என்று தமிழரசுக் கட்சியின் தலைமைப் பெரிசுகளே பூரித்துப் பாராட்டுமளவுக்கு சம்பந்தன் சுமந்திரன் போன்ற 'சாதாரண' தமிழ்த் தேசியவாதிகள் நிலை கூட்டமைப்பிற்குள் பரிகாசமுற்று அலங்கோலமடைகிறது.

ஆனால், நாட்டின் சின்னங்களை எல்லாம் விரோதித்து வெறுக்கச் செய்யும் இந்தப் போக்கு தமிழ் மக்களுக்கு நல்லதல்ல. நம் பிரச்சினை தீர உதவப் போவதுமல்ல. கொடியின் மீது என்ன விமர்சனங்கள் இருந்தாலும், அதை இந்த சமயத்தில் வெறுப்பை வளர்ப்பதற்காய்த் தூக்கிப் பிடிப்பவர்கள், கருணாநிதியின் தனிநாட்டுச் சூளுரை போல பிரச்சினை தீர்வதற்கு எதிரான சூழ்நிலைகளையே திட்டமிட்டு உருவாக்குகிறார்கள்.

இங்கு தனிநாடு ஒன்று அமைவதற்கான சாத்தியங்கள் இருப்பதாகக் கதைகளை உருவாக்குவதும், அதனடிப்படையில் இனங்களிடையேயான பிளவை மேலும் மேலும் வளர்த்து வருவதும், வெறுப்பை அள்ளி வீசிக் கொண்டிருப்பதும், இங்கு வாழும் – வாழப்போகும் தமிழ் மக்களுக்கு எந்த நன்மையும் பயக்காது; இடர்களைத்தான் தந்து கொண்டிருக்கும்.

பேச்சுவார்த்தையை நடத்தி அதை வெற்றிகரமாக்கும் திட்டங்களோ, இந்த நாட்டிலுள்ள சிந்திக்கக் கூடிய தரப்புகளுக்கு – நியாயவுணர்வுள்ள பேரளவிலான மக்களுக்கு நமது நிலையை விளக்கி வென்றெடுக்கக் கூடிய உழைப்போ மேற்கொள்ள இவர்கள் தயாராயில்லை.

இப்படியே நமது இன்றைய வாழ்வை வலிந்து வதைபடவிடும் இவர்களது ஏமாற்றை நீடிக்க அனுமதிக்கக் கூடாது. நாம் மீள்வதற்கான வழிகளை அடைத்தபடியே சுயவிருப்ப வீம்பு அரசியலைத் தொடர்ந்து நடத்தும் வீரப் பாவனைகளை இனி நாம் நிறுத்த வேண்டும்.

- ஆசிரியர் -

# கருத்துக்களை வெளியிடுவதற்கு மக்களுக்கு சந்தர்ப்பம் இல்லை

## பல்கலைக்கழக ஆசிரியர் சங்கப் பேச்சாளர்

(கொழும்பு)

பல்கலைக்கழக பேராசிரியர்கள் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் ஜனநாயக உரிமை மறுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், பொதுமக்கள் தமது கருத்துக்களை வெளியிடுவதற்கு எவ்வாறு சந்தர்ப்பம் இருக்கும் என்ற கேள்வியை ஆட்சியாளர்களிடம் முன்வைப்பதாக பல்கலைக்கழக ஆசிரியர் சங்கப் பேச்சாளர் மகின் மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

கல்வி முறைமை குறித்து கல்வி அமைச்சின் செயலாளருடன் பேச்சு நடத்தப்பட்டது. இதில் தர்க்கம் ஏற்பட்டதால் அமைச்சிலிருந்து வலுக்கட்டாயமாக பல்கலைக்கழக ஆசிரியர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். இவர்கள் வீதியில் ஊடகவியலாளர் சந்திப்பை நடத்திய போதே மேற்கண்ட கருத்து தெரிவிக்கப்பட்டது.

பல்கலைக்கழக ஆசிரியர் சங்க சம்மேளனம் முன்அனுமதியைப் பெற்றிருந்தது. எனினும், பல்கலைக்கழத்தினுள் ஊடகவியலாளர்கள் செல்வதற்கு பல்கலைக்கழக அதிகாரிகள் அனுமதிக்கவில்லை. இதனால், பல்கலைக்கழகத்திற்கு வெளியே சந்திப்பு நடத்தப்பட்டது.

எமது கேள்விகளுக்கு செயலாளர் பதிலளிக்கவில்லை. பல்கலைக்கழகங்கள் குறித்து தனக்கு அக்கறை இல்லை என அவர் கூறினார். எம்மை வெளியே செல்லுமாறு அதட்டினார். பின்னர் எம்மை வெளியே துரத்துமாறு சிலரிடம் கூறினார். இதனையடுத்து சிலரால் நாம் பலவந்தமாக வெளியேற்றப்பட்டோம் என பல்கலைக்கழக ஆசிரியர் ஒருவர் தெரிவித்தார்.

இது பல்கலைக்கழக ஆசிரியர்களை மிரட்டும் செயல். பல்கலைக்கழக முறைமையை பாழடிக்கும முயற்சி. இதற்கெதிராக சகல பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களும் இணைந்து போராடும் என பல்கலைக்கழக ஆசிரியர் சங்க சம்மேளனத்தின் தலைவர் நிமல் ரஞ்சித் தேவசிறி கூறினார்.

## உயர் கல்வி கற்பதற்கு புதிய சட்டமூலம் அமுல்

(கொழும்பு)

உயர் கல்வி பயில்வதற்கு ஒரு தேசிய பாடசாலையிலிருந்து மற்றுமொரு பாடசாலைக்கு மாற முடியாது என்பது சட்டமாக்கப்பட்டுள்ளது. இதுகுறித்த சுற்றுநிருபமொன்று வெளியிடப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இசுருபாயவிலுள்ள கல்வி அமைச்சில் நேற்று முன்தினம் செய்தியாளர்களைச் சந்தித்தபோதே கல்வி அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

தேசிய பாடசாலைகளுக்கிடையில் மாணவர்கள் மாறுவதால் ஏற்படும் போட்டியைத் தவிர்ப்பதற்கே இந்தப் புதிய சட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இதனடிப்படையில், சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்து உயர்கல்வி பயில்வதற்காக வேறொரு தேசியப் பாடசாலைக்கு மாறுவதனால், பழைய பாடசாலையில் குறித்த மாணவர் தெரிவு செய்யும் பாடத்திட்டம் கற்பிக்கப்படாத பட்சத்தில் மாத்திரமே புதிய பாடசாலையில் அனுமதிக்கப்படுவார் எனவும் அமைச்சர் தெரிவித்தார். இவ்வருடம் முதல் இந்தச் சட்டம் அமுலில் இருக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

2011ஆம் ஆண்டு சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கும் இந்தச் சட்டம் உரித்தாகும் எனவும் அமைச்சர் கூறினார்

## பங்குக் கொள்வனவு விசாரணை

(கொழும்பு)

'த பினான்ஸ்' நிறுவனத்தின் பங்குகளை தேசிய சேமிப்பு வங்கி கொள்வனவு செய்தமை குறித்து விசாரணை நடத்துமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

இந்த வர்த்தகத்தில் குற்றமிழைத்தவர்களுக்கு உரிய தண்டனை வழங்குமாறு பரிவர்த்தனை ஆணைக்குழுவுக்கு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இந்தத் தகவலை சிரேஷ்ட அமைச்சர் சரத் அமுனுகம நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெளியிட்டார்.

சர்ச்சைக்குரிய பங்கு பரிவர்த்தனையில் சேமிப்பு வங்கிக்கு 150 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், 39 கோடி ரூபா பங்கு பரிவர்த்தனை ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

## தேசத்தை கட்டியெழுப்ப முன்னோக்கி செல்வோம்

### -வவுனியாவில் கலந்துரையாடல்

(கொழும்பு)

இலங்கைத் தேசத்தை மீளக்கட்டியெழுப்ப முன்னோக்கிச் செல்வோம் என்ற தொனிப் பொருளில் சர்வமதக் கலந்துரையாடல் வவுனியா நகர கிராம சேவகர் அலுவலக மண்டபத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

நல்லிணக்கத்திற்கான வடக்கு, கிழக்கு சர்வ மத ஒன்றியத்தின் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் மதத்தலைவர்கள் கருத்து தெரிவிக்கையில்,

இலங்கை அரசாங்கத்தினால் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை நடைமுறைப் படுத்துவதற்கு அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும். பயங்கரவாதத்தை தோற்கடித்ததாக கூறிய அரசாங்கம் மதத்தலங்களையும் வழிபாட்டு இடங்களையும் அழித்து பயங்கரவாதத்தை வளர்த்துச் செல்கின்றது. வடக்கு, கிழக்கில் நான்கு மதத்தலைவர்களும் ஒன்றிணைந்து மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்றனர்.

இக்கலந்துரையாடலில் ஒன்றியத்தின் உறுப்பினர்களான ராஜ்மோகன் சர்மா, தீராநந்த தேரர், மௌலவி மக்கீம், முகமட் அயூப், அஸ்மீன், மகாத்மாகாந்தி நிலைய செயலாளர் டாக்டர் சலீம், மதப்பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## சமூக அமைப்புக்களை வலுப்படுத்த நடவடிக்கை

(முல்லைத்தீவு)

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட தேறாங்கண்டல் கிராமத்தில் சமூக அமைப்புக்களை வலுப்படுத்தும் பயிற்சிப் பட்டறையொன்று கடந்த புதன்கிழமை துணுக்காய் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

யு.என்.எச்.சி.ஆர். நிறுவனத்தின் அனுசரணையில் துணுக்காய் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட இப்பயிற்சிப் பட்டறையில் வளவாளர்களாக துணுக்காய் பிரதேச செயலர் சி.குணபாலன், செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா, பால் மற்றும் பால் நிலை தொடர்பான இணைப்பாளர் திருமதி பற்றிமா தேவராஜா ஆகியோர் கலந்துகொண்டனர்.

இப்பயிற்சிப் பட்டறையில் கிராமச் செயற்பாடுகள் தொடர்பாகவும் சமூகச் சீரழிப்புகளிலிருந்து விடுபடுதல், கிராம அபிவிருத்தியில் முன்னேற்றம் காணுதல் மற்றும் ஏனைய நல் அபிவிருத்தி பற்றியும், பின்தங்கிய கிராமங்களைக் கட்டியெழுப்புதல், சமூகத் தலைவர்களை முனனோடியாகச் செயற்பட வைத்தல் போன்ற விடயங்கள் குறித்து விரிவாக விளக்கமளிக்கப் பட்டது.

இக்கிராமத்தில் 230 குடும்பங்கள் வாழ்ந்து வரும் நிலையில் இங்குள்ள பொது அமைப்புக்கள், சமூக அமைப்புக்களின் பரதிநிதிகள் இதில் கலந்துகொணடனர். (04)

# இலக்கியப் பேரவைக்கு விருது

(நமது நிருபர்)

அகில இலங்கை கலை இலக்கியச் சங்கத்தின் விருது இம்முறை இலங்கை இலக்கி யப் பேரவைக்கு கிடைத்துள் ளது.

அதி உயர் விருதாக கலை இலக்கியப் பணிக்காக ஆண்டு தோறும் வழங்கப்படும் இவ் விருது, இம்முறை இலங்கை இலக்கியப் பேரவைக்கு வழங் கப்படவுள்ளதாக சங்கத்தின் தலைவர் பொன்.சுகந்தன் உத் தியோகபூர்வமான அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

மேற்படி இவ்விருதானது கடந்த காலங்களில் கலை இலக் கியத்துறையில் சிறந்த பணி யினை ஆற்றி வந்த கொழும்பு தமிழ்ச் சங்கம், திருமறைக் கலாமன்றம் போன்றவற்றுக்கும் வழங்கிக் கௌரவிக்கப்பட் டமை குறிப்பிடத்தக்கது. (10)

# நீதிமன்றத்தால் அபராதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சிறைச்சாலை கைதிகள் இருவர் சட்டவிரோதமாக கைய டக்கத் தொலைபேசியைப் பாவித்த குற்றத்துக்காக இருவருக்கு யாழ்.நீதவான் நீதிமன்றத்தால் 8 மாத சாதாரண சிறைத் தண் டனை விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த இருவரும் சட்டவிரோதமாக சிறையில் இருந்து தொலைபேசியைப் பாவித்ததைக் கண்டு கைதிக் காப்பாளர் சிறைச்சாலை அத்தியட்சகரி டம் முறையிட்டார்.

இதனையடுத்து சிறைச் சாலை அத்தியட்சகர் ஆர்.எம். செனரத் பண்டார யாழ்.நீதவான நீதிமன்றில் அறிக்கையொன்றை சமர்ப்பித்தார். அறிக்கையின் பிரகாரம் நேற்றுமுன்தினம் யாழ்.சிறைச்சாலைக்கு விஜயம் செய்த யாழ்நீதிமன்ற நீதிபதி மா.கணேசராசா விசாரணை மேற் கொண்ட பின்னர் ஒருவருக்கு 2 மாத சாதாரண சிறைத்தண் டனையும், மற்றவருக்கு 6 மாத கால சாதாரண சிறைத் தண்ட னையையும் அனுபவிக்குமாறு உத்தரவிட்டார்.

◆ ◆ ◆

அரியாலைப் பகுதியில் அனு மதிப் பத்திரமின்றி சாராயம் விற்பனை செய்த நபருக்கு 6 ஆயிரம் ரூபா அபராதம் யாழ். நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டுள் ளது.

மேற்படி நபர் யாழ்.மதுவ ரித் திணைக்களத்தின் மதுவரி பரிசோதகர்களினால் பிடிக்கப்ப ட்டு நேற்றுமுன்தினம் யாழ்.நீத வான் நீதிமன்றில் ஆஜர்படுத் தப்பட்டபோது நீதிபதி மா.கணே சராசா விசாரணையின் பின்னர் குறித்த அபராதத்தை விதித் துத் தீர்ப்பளித்தார். (எஸ்)

# சுகாதாரக் குழு தலைவராக விஜயகாந்த்



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் 2012 ஆம் ஆண்டுக் கான சுகாதா ரக் குழுவின் தலைவராக ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாநகர சபை உறுப்பினர் எஸ்.விஜய காந்த் தெரிவுசெய்யப்பட்டுள் ளார்.

நேற்றுமுன்தினம் வியா ழக்கிழமை யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ் வரி பற்குணராசா தலைமையில் மாநகர சபையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இவர் தலைவரா கத் தெரிவு செய்யப்பட்டுள் ளார்.

# சான்றோர் கௌரவிப்பு

(யாழ்.நிருபர்)

யாழ்.கொட்டடி சன சமூக நிலையமும் கிராம அபிவிருத் திச் சங்கமும் இணைந்து கடந்த வாரம் புத்தாண்டு விழாவும் சான்றோர் கௌரவிப்பு நிகழ்வி னையும் நடத்தியுள்ளது.

பொ.சிறீராஜபுலேந்திரன் தலை மையில் நடைபெற்ற இந்நிகழ் வில், யாழ்.மாவட்ட காசநோய் கட்டுப்பாட்டு அதிகாரி டாக்டர் சி.யமுனாநந்தா பிரதம விருந் தினராகக் கலந்து கொண்டார்.

இந் நிகழ்வில் யாழ்.மாவட் டத்தில் சிறந்த சமூக சேவை யாற்றிவரும் சான்றோர்களாக சட்டத்தரணி திருமதி சறோ ஜினி இளங்கோவன் (ஓய்வு பெற்ற நீதிபதி), கலாநிதி ஆறு திருமுருகன் (தெல்லிப்பளை துர்க்கையம்மன் ஆலயதலை வர்), வைத்திய கலாநிதி ஜெக சோதி ஜெயபாலன் (பேராசிரி யர்), லயன் தியாகராசா தேவ ராசன் (தொழிலதிபர்), சோதி டர் கதிரேசு சாம்பசிவம், தேச பந்து க.கு.க.சிவபாலன் (அடியா ர்க்கு அமுதூட்டும் அண்ண லார்), சுப்பிரமணியக் குருக் கள் பாலச்சந்திரசர்மா (பிரதமகுரு அங்குசபாச பிள்ளையார் கோவில்), நடராசா கணேசமூர்த்தி (ஆசி ரியர், ஊடகவியலாளர், பேச்சா ளர்), கிருஸ்ணபிள்ளை மகா லிங்கம் (ஓய்வுபெற்ற கிராம அலுவலர்), பஞ்சநாதன் சுதர் சன் (ஆசிரியர் - சமூக சேவை யாளர்) ஆகியோருக்கு 'சமூக திலகம்' உயர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. (10)

# சமுர்த்தி வங்கியின் புத்தாண்டு விழா

(யாழ்.நிருபர்)

காரைநகர் சமுர்த்தி வங்கி யின் புத்தாண்டு விழா கடந்த வாரம் காரைநகர் யாழ்ரன் கல் லூரியில் நடைபெற்றது. சமுர் த்தி வங்கி முகாமையாளர் தி.சசிக்குமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக ஈ.பி.டி.பி. யின் யாழ்.மாவட்ட நாடாளும ன்ற உறுப்பினர் சில்வேஸ் திரி அலென்ரின் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட உதவி ஆணை யாளர் வி.சிவசிறீ, காரைநகர் பிரதேச செயலர் திருமதி தே.பாபு, யாழ்ரன் கல்லூரி அதிபர் வே.முருகமூர்த்தி ஆகி யோரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மாணவர் அணிவகுப்பு மற றும் பாரம்பரிய விளையாட்டுக் கள் என்பனவும் நடைபெற்றன. (10)

## காணாமல் போனோர் விவகாரம்

# மனித உரிமை ஆணைக்குழுவில் தொடர்பு கொள்ளக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

காணாமல் போனோர் தொடா பாக ஆணைக் குழுவில் முறை ப்பாடுகளை மேற்கொண் டோர் ஆணைக்குழுவின் கடிதம் கிடைத் தவுடன் நேரில் சமுகம் தருமாறு யாழ்.மனித உரிமை ஆணைக் குழுவின் பிராந்திய இணைப்பா ளர் ரி.கனகராஜ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் இது தொடர்பாகத் தெரிவிக்கையில்,

காணாமற் போனோர் தொடர் பான விசாரணைகளை கடந்த மாதம் 27ஆம் திகதி முதல் யாழ். மனித உரிமை ஆணைக்குழு வின் பிராந்திய காரியாலயம் மேற்கொண்டு வருகின்றது.

அந்த வகையில், முதற்கட்ட மாக 2006ஆம் ஆண்டு காலப் பகுதியில் காணாமல் போனோர் பற்றிய முழுமையாகத் தகவல் கள் திரட்டப்பட்டு வரும் நிலை யில் இக்காலப் பகுதியில் சுமார் 500 இற்கு மேற்பட்டவர்கள் காணாமல் போயுள்ளதாக முறைப் பாடுகள் கிடைக்கப்பெற்றுள ளன.

இம்முறைப்பாடுகள் தொடர் பாக உரிய நடவடிக்கையை மேற் கொள்ளும் முகமாக மனித உரிமை ஆணைக் குழுவினால் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட முறைப்பாட்டின் பிரதி அல்லது பற்றுச்சீட்டின் இல க்கம், காணாமல் போனோரின் அடையாள அட்டையின் பிரதி அல் லது அடையாள அட்டையின் இலக்கம், காணாமல் போனவர் சம்பந்தமாக கிராம சேவையாள ரிடம் பெற்றுக்கொண்ட கடிதம், நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருப்பின் அது தொடர் பான விபரம், முறைப்பாட்டினை உறுதிப்படுத்தும் சாட்சிகளின் சத்தியக் கடதாசி மற்றும் முறை ப்பாட்டாளர் தொடர்பான விபரங் கள, ஆவணங்கள் சமர்ப்பிக்கு மாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மனித உரிமை ஆணைக் குழு வினால் அனுப்பப்பட்ட கடிதங் கள் கிடைக்காத முறைப்பாட்டா ளர்கள் எதிர்வரும் 15ஆம் திக திக்கு முன்னர் அலுவலக நாட் களில் (திங்கள் முதல் வெள்ளி வரை) யாழ்.மனித உரிமை ஆணைகக்குழு பிராந்திய காரி யாலயத்தில் நேரில் சமுகம ளித்து காணாமல் போனோர் தொடர்பான விசாரணைகளை பயனுள்ள முறையில் மேற்கொள் வதற்கு ஒத்துழைப்புத் தருமாறு யாழ்.மனித உரிமை ஆணைக் குழு வேண்டுகோள் விடுத்துள் ளது. (எஸ்)

# எரிபொருள் விநியோகம்

(வரணி)

வடவரணி, 58-பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளையில் மின்சார வசதிகளற்ற குடும்பங்களுக்கு மாதாந்தம் 200 ரூபா பெறுமதியான மண்ணெண்ணெய் முத்திரை விநியோகிக்கப்பட்டு வருகிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை முதல் மண்ணெண்ணெய் விநி யோகம் இடம்பெற்று வருவதாகவும் பயனாளிகள் உடனடியாக சங்கக் கிளையில் பெற்றுக்கொள்ளுமாறு கிளை முகாமையாளர் அறிவித்துள்ளார்.

# உதவிப் பணம் வழங்கல்

(வரணி)

வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் குடும்பங்களுக்கும் பெண்களைத் தலைமைத்துவ மாகக் கொண்ட குடும்பங்களுக் கும் வழங்கப்படும் நலிவுற் றோர் உதவிப் பணம் தற்போது வரணி உபஅஞ்சல் அலுவல கத்தில் வழங்கப்பட்டு வருகின் றது.

உரியவர்கள் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் பணத் தைப் பெற்றுக் கொள்ளுமாறு வரணி அஞ்சலதிபர் அறிவித்து ள்ளார்.

# தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரம் முன்னெடுக்கப்படவுள்ள செயற்பாடுகள்



(யாழ்ப்பாணம்)

இலங்கையின் பல பகுதிக ளிலும் டெங்கு நோயின் பரம் பல் அதிகரித்துச் செல்வதை அவதானிக்கக் கூடியதாகவுள் ளது. இந்நிலையில் நாடு முழு வதும் நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை உடனடியாகத் தீவிரப்படுத்தாவிடில் டெங்கு நோயின் பரம்பல் அதிகரித்து பாரிய தாக்கத்தை ஏற்படுத்த லாம். இந்நிலையில் நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து தீவிரப்படுத் தும் நோக்குடன் மத்திய சுகா தார அமைச்சினால் எதிர்வரும் 14.05.2012 - 20.05.2012 வரையான வாரம் நாடளாவிய ரீதியில் தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரமா கப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது என யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆர்.கேதீ ஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இவ்வாரத்தில் திட்டமிடப் பட்ட நுளம்புக் கட்டுப்பாட்டு நடவ டிக்கைகள் குறித்து அவர் வெளி யிட்டுள்ள தகவல்கள் வருமாறு,

ஒவ்வொரு சுகாதார வைத் திய அதிகாரி பிரிவும் 7 வலயங களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு வலயத்திற்கும் ஒவ்வொருநாள் ஒதுக்கப்படல் வேண்டும்.

குறித்த நாளில் குறித்த வல யத்திற்குட்பட்ட சகல நிறுவனங் களும், பாடசாலைகளும், பொது இடங்களும், வர்த்தக நிலையங் களும், வணக்கஸ்தலங்களும், வீடுகளும், பராமரிப்பற்ற காணி களும், நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கைக்கு உட்பட வேண்டும்.

இவ்வாரத்திற்கான செயற் பாடுகளை சுகாதார வைத்திய அதிகாரி பிரதேச செயலரின் தலை மையில் பிரதேச மட்டத்தில் உள்ள நிறுவனங்களையும் அமைப்புக்களையும், பாதுகாப் புப் படையினரையும் இணை த்து திட்டமிடப்படல் வேண்டும்.

மேற்படி நுளம்புக் கட்டுப் பாட்டு நடவடிக்கைகட்கும் பிர தேசத்தில் உள்ள சம்பந்தப்படட அனைத்து நிறுவனங்களினதும் உதவி பெறப்படல் வேண்டும்.

இவ்வாரத்தில் ஒவ்வொரு நாளும் மேற்கொள்ளப்பட்ட நுள ம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கை கள் சம்பந்தமான விபரங்களை ஒவ்வொரு பொதுச் சுகாதாரப் பரிசோதகரும், சுகாதார வைத் திய அதிகாரிக்கும், ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரி யும் பிராந்திய தொற்றுநோய்த் தடுப்பு வைத்திய அதிகாரிக்கும் அனுப்பி வைக்க வேண்டும்.

எனவே இத்தேசிய நுளம் புக் கட்டுப்பாட்டு வாரத்தில் அனை வரும் தங்கள் ஒத்துழைப்பையும் பங்களிப்பையும் வழங்கி டெங்கு நோயின் பரம்பலை எமது மாவ ட்டத்தில் தடுத்து நிறுத்த முன் வரவேண்டும் என அத்தகவ லில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



பூநகரியில் நடைபெற்ற மக்களுக்கான நடமாடும் சேவையில் சமாதான நீதவான் பொ.தில்லைநாதன் சேவை வழங்குவதைக் காணலாம். (112)

# அறிஞர்களின் வரலாறுகள் ஆவணப்படுத்த வேண்டும்

## –தமிழருவி த.சிவகுமாரன்–

(யாழ்.நிருபர்)

ஒவ்வொரு கிராமங்களிலும் வாழ்ந்து மறைந்த அறிஞர்கள், சான்றோரின் வரலாறுகள் தகுந்த முறையில் ஆவணப்படுத்தப்பட வேண்டும். அவர்களுடைய வரலாறும் வாழ்க்கை அனுபவங்களும் எதிர்காலச் சந்ததியினருக்குப் பெரிதும் உதவும் என காரைநகர் கம்பன் கழக அமைப்பாளர் தமிழருவி த.சிவகுமாரன் தெரிவித்துள்ளார்.

வியாவில ஐயனார் தேவஸ்தான வளகத்தில் அமைந்துள்ள கணபதீசுவரக்குருக்கள் நூலகத்திற்கு முன்பாக புதிதாக அமைக்கப்பட்ட சரஸ்வதி சிலைத் திறப்பு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

காரைநகரில் கார்த்திகேயப்புலவர், அருணாசல, உபாத்தியார், அல்லின் ஏபிரகாம் போன்ற பல அறிஞர்களும், புலவர்களும், சான்றோரும் தோன்றி வாழ்ந்துள்ளனர். சைவமும் தமிழும் தளைத்த புண்ணிய பூமியில் வாழ்ந்து மறைந்த அறிஞர்களின் வரலாறுகள் ஆவணப்படுத்தப்பட வேண்டும்.

அறப்பணிகள் பலவற்றைச் செய்துவரும் வியாவில் தேவஸ்தானமும் சிரேஷ்ட ஊடகவியலாளர் நண்பர் கணேசமூர்த்தி போன்றவர்களும் சரியான தகவல்களைச் சேகரித்து இந்தப் பணியை செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

ஐயனார் ஆலய வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள கணபதீஸ்வரக் குருக்கள் நூலகம் பற்றி நாட்டின் பல பாகங்களிலும் வாழ்கின்ற மக்கள் பெருமையோடு பேசிக் கொள்கின்றார்கள். மூதறிஞர் கலாநிதி வைத்தீஸ்வரக் குருக்களால் சேகரிக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டு வந்த தொன்மையான கிடைத்தற்கரிய ஆயிரக்கணக்கான நூல்கள் இங்கு வைக்கப்பட்டிருப்பது தான் இந்த நூலகத்தின் பெருமையாகும்.

குடா நாட்டின் பல பாகங்களிலிருந்தும் வருகை தரும் வாசகர்கள் இந்த நூலகத்தைப் பயன்படுத்துவது காரைநகருக்கு பெருமை சேர்ப்பதாக அமைகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (10)

# கண் சத்திரசிகிச்சைக்கு இயந்திரம் அன்பளிப்பு


(யாழ்.நிருபர்)

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் கண் சத்திரசிகிச்சைக்குப் பயன்படுத்தப்படும் இயந் திரம் பழுதடைந்தமையால் கடந்த ஒரு மாத காலமாக கண் சத்திரசிகிச்சைகள் தடைப்பட்டி ருந்தன. இதனால் காரைநகர் உட்பட அயற்பிரதேசங்களில் வாழும் நோயா ளர்கள் பலரும் பாதிக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையை அறிந்த காரைநகர் - கற்கோவளத்தைச் சேர்ந்தவரும் தற்போது சுவிஸ் நாட்டில் வாழ்பவருமான வர்த்தகர் சு.கதிர்காமநாதன் தனது தந்தையார் அமரர் சுப்பிரமணியம் ஞாபகார்த்தமாக 13 இலட்சத்து 50 ஆயிரம் பெறுமதியான கண் சிகிச்சை இயந்திரத்தைக் கொள்வனவு செய்து அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

இதனால் ஒருமாத காலமாகத்தடைப்பட்டிருந்த கண் சத்திரசிகிச்சை இவ்வாரம் முதல் தொடர்ச்சியாக நடைபெறுகிறது. (10)

# பரமர் சங்கமம்



கல்விசார் திணைக்களத்தைச் சேர்ந்த பல்வேறு பிரிவுகளிலும் உயர்பதவிகளில் இருக்கும் அதிகாரிகளின் அசமந்தப் போக்குகளால் பாதிக்கப்படுபவர்கள் இலங்கையின் எதிர்காலச் சந்ததிகள்தான் என்பதில் எந்த மாற்றமும் இருக்க முடியாது.

குழந்தையாக இருந்து குடும்பகாரனாக வளர்ச்சி அடைகின்ற ஒவ்வொரு பிரஜைகளுக்கும் கல்விதான் சிறப்பான ஊன்றுகோலாகத் திகழ்கின்றது.

அதனைப் பிள்ளைகள் சிறாராக இருக்கையில் இருந்தே பெரும் பணச் செலவுகளுடன் பாடுகளையும் பட்டுப் பெற்றோர் ஊட்டி வளர்த்து விடுவதில் வாழ்நாளில் அரைப்பகுதியே விரயமாக்கப்படுகிறது.

அதனிலிருந்து தவறுபவர்களுக்கு வாழ்க்கை இல்லை என்று அர்த்தமாகாது. எனினும் அந்த வாழ்வில் ஒளி இல்லாத இருள் மயமான சூழலையே அதிகமாக அனுபவிக்க நேர்கிறது.

இந்நிலையில் இலங்கைக் கல்வித்திணைக்களத்தின் பரீட்சைத் தேர்வுகளை நடாத்தும் பிரிவு வருடத்தில் ஐந்தாமாண்டுப் புலமைப் பரிசில் பரீட்சை மற்றும் கல்வித் தராதரப் பத்திர, உயர்தர, சாதாரணதரம் ஆகியவற்றுக்கான போட்டிப்பரீட்சைகளை நடாத்தி வருகின்றது.

ஒவ்வொரு பரீட்சைகளிலும் தேர்வுக்கு எழுதும் மாணவ, மாணவிகள் பெரிய எதிர்பார்ப்புகளுடன் கலந்து கொண்டு எழுதுகின்றார்கள். அதில் அவர்கள் எதிர்பார்த்த முடிவுகள் வரவில்லை என்றால் மன உடைவேற்பட்டு உயிரையே மாய்த்துக் கொள்ளத் துணிவதை பரவலாகக் காணமுடிகின்றது.

இந்நிலையில் தேர்வுகளின் முடிவுகளைப் பொறுப்புடன் பரிசீலித்து அறிவிக்க வேண்டிய திணைக்கள அதிகாரிகளின் அசமந்தப் போக்குகளால் வருடா வருடம் இலட்சக்கணக்கான மாணவர்களின் தேர்வுகளில் தவறுகள் ஏற்பட்டு அவர்களின் அடுத்த கட்ட நகர்வுக்கான முயற்சிகளில் முட்டுக்கட்டை ஏற்பட்டு வருவதையும் காண்கின்றோம்.

இவ்விதம் இந்த ஆண்டும் இலட்சக்கணக்கான மாணவர்கள் மீள் தேர்வு முடிவுகளுக்கு விண்ணப்பித்து இருந்ததாகவும், ஒவ்வொரு மீள தேர்வைப் பெறுவதற்கும் ரூபா 250 அறவிடப்பட்டதால் கோடிக் கணக்கான ரூபாவை பரீட்சைத்திணைக்களம் பெற்றுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆயினும் அப்பிடி விண்ணப்பித்தவர்களுக்கு இதுவரை தேர்வுச் சிட்டை அனுப்பப்படவில்லை. அதனிடையே பல்கலைக்கழகங்களால் மாணவர்கள் உள்வாங்கப்படுவதற்கான அறிவித்தல் வெளியிடப் பட்டுள்ளது.

இது மாணவர்களுடைய தவறல்ல. பரீட்சைத் திணைக்கள அதிகாரிகளின் தவறுகளால் பாதிக்கப்படப் போவது அப்பாவி மாணவ சமுதாயமெண்டால் எதிர்காலக் கல்வி எதனைச் சாதிக்கப் போகுது... சொல்லுங்க பாப்பம்?

# நிதியுதவி

(வவுனியா)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வவுனியா மாவட்டத்தில் செயற்படுகின்ற 3 ஆதரவற்றோர் இல்லங்களின் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

வவுனியா - எல்லப்பர் மருதங்குளத்தில் அமைந்துள்ள சிவன் முதியோர் இல்லம் மற்றும் ஸ்ரீஅகிலாண்டேஸ்வரர் அருளகத்திற்கு 100,000 ரூபாவும், வேப்பங்குளம் இந்து அன்பகத்திற்கு 60,000 ரூபாவும் பிரதேச செயலாளர் மூலமாக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் வழங்கியுள்ளது.

# கும்பாபிஷேகம்

(யாழ்.நிருபர்)

காரைநகர் - புகலி சுப்பிரமணிய சுவாமி கோயில் புனராவர்த்தன அஷ்டபந்தன பஞ்ச குண்ட பட்ச பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகப் பெருவிழா எதிர்வரும் ஜூன் மாதம் 1 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

இம்மாதம் 28ஆம் திகதி திங்கட்கிழமை கும்பாபிஷேகக் கிரியைகள் ஆரம்பமாகி 31.05.2012 வியாழக்கிழமை காலை 8.00 மணி முதல் மாலை 4.00 மணிவரை எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும்.

01.06.2012 வெள்ளிக்கிழமை காலை 7.00 மணிமுதல் 8.30 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் கும்பாபிஷேகம் நடைபெறும். (10)

# கட்டாக்காலி கால்நடைகளை பாதுகாக்கும் நடவடிக்கை

(வேலணை)

வேலணைப் பிரதேசத்தில் கட்டாக்காலி கால்நடைகளைப் பிடிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கான நடவடிக்கைகளை ஊர்காவற்றுறை, வேலணை ஆகிய பிரதேச சபைகள் ஊடாக கட்டாக்காலி கால்நடைகளைப் பிடிபபதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கான ஆரம்பக்கட்ட செயற்பாடாக வேலணை, ஊர்காவற்றுறை ஆகிய பகுதிகளில் இருக்கின்ற கால்நடைகளை வீடு வீடாகச் சென்று பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதோடு இது வரைக்கும் 200 பெரிய இன கால்நடைகளும், 700 சிறிய இன கால்நடைகளும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

தற்போது வேலணைப் பிரதேசம் தொடக்கம் ஊர்காவற்றுறை வரைக்கும் 3 ஆயிரத்துக்கு மேற்பட்ட கால்நடைகள் பதிவு எதுவும் செய்யப்படாமல் இருப்பதாகவும் பதிவு இல்லாமல் பிடிக்கப்படுவதாவும் தெரிவிக்கப்படுகிறது.

இச்செயற்பாட்டினால் கால்நடைகளுக்கான அடையாளங்களும் பொறிக்கப்பட்டு உரியவர்களினால் பாதுக்காக்கப்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (85)

# திருடர்கள் தொல்லை

(நீர்வேலி)

நீர்வேலிப் பிரதேசத்தில் தற்போது திருடர்களின் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதால் மக்கள் அச்சத்துடன் இரவுப் பொழுதைக் கழிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை நீர்வேலி செல்லக்கதிர்காம சுவாமி கோயிலுக்கு அண்மையில் உள்ள பாடசாலை அதிபர் ஒருவரின் வீட்டின் ஓட்டைப் பிரித்து உட்புகுந்த திருடர்கள் அறையினுள் புகமுயன்ற போது வீட்டுக்காரர் விழித்துக் கொண்டதில் திருடர்கள் ஓடி மறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு திருடர்களின் தொல்லை இப்பகுதியில் வெகுவாக அதிகரித்துள்ளதால் மக்கள் சிரமத்துடன் வாழ்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# நடமாடும் சேவை

(முல்லைத்தீவு)

யு.என்.டி.பியின் நிதியுதவியில் பாண்டியன் குளம் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் நடமாடும் சேவை ஒன்று எதிர்வரும் 15 ஆம் திகதி பாண்டியன் குளம் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

யுத்தத்தினால் இடம்பெயர்ந்து மீள்குடியேறி வாழ்ந்து வரும் பாண்டியன் குளம் பிரதேச செயலகத்திற்குட்பட்ட அனைத்து கிராம மக்களின் நலன் கருதி நடைபெறும் இச்சேவையில் பிறப்பு இறப்பு பதிவுகள், அடையாள அட்டை பதிவுகள் உள்ளிட்ட பல சேவைகள் வழங்கப்படவுள்ளதாக பிரதேச செயலர் சி.குணபாலன் தெரிவித்துள்ளார். (04)

# முரசின் இன்றைய பலன்

(12.05.2012 – சனிக்கிழமை)

நந்தன வருஷம் சித்திரை மாதம் 30 ஆம் திகதி. ஸ்ப்தமி மரணயோகம் முன்னிரவு 9.05 வரை. நட்சத்திரம் திருவோணம். முன்னிரவு 11.04 வரை. அட்டமி முன்னிரவு 9.05 இன் மேல். இராகுகாலம் 08.54 - 10.24 வரை. சுபநேரம் 2.54 - 4.24 வரை. எமகண்டம் 1.24 - 2.54 வரை. குளிகைகாலம் 5.54 - 7.24 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | அரசாங்க நன்மை, வேலைப்பளு அதிகரிக்கும், தொழில் நிமித்தம் வெளிநாட்டு வேலை வாய்ப்பு. |
| ரிஷபம் | வாழ்க்கையில் திருப்தி, மனமகிழ்ச்சி, பிணை போக வேண்டாம், கண் சம்பந்தமான நோய். |
| மிதுனம் | சந்திராட்டமம் பயணம் தவிர், அதிகாரிகள் நட்பு, அவசரம் கூடாது, புத்திரரால் செலவு. |
| கடகம் | புகழ்வந்து சேரும், வருவாய்ப்பெருக்கம், கூட்டு முயற்சிகளில்பயன், பொன்பொருள்சேரும். |
| சிம்மம் | ஆற்றல் வெளிப்பாடு, தற்பெருமை, சேமிப்பு உயரும், மேலதிகாரிகளின் பாராட்டு. |
| கன்னி | மனதில் திருப்தி, கிடைக்காதது கிடைக்கும், அதிகாரிகள் தொல்லை அகலும். |
| துலாம் | போட்டிகள் அதிகரிப்பு, காலம் கடந்த திருமணம், தாராள நிதி உதவி, பணிச்சுமை அதிகரிப்பு. |
| விருச்சிகம் | அவசரம் கூடாது, இடமாற்ற அதிருப்தி, உறவினர் வருகையால் திருப்தி, குடும்ப உறவு சீராகும். |
| தனுசு | மன நிம்மதி, கடன் சலுகைகள், காரியானுகூலம், குடும்பத்தில் சுப காரியங்கள். |
| மகரம் | செலவுகள் அதிகரிப்பு, கணவன் மனைவி ஒற்றுமை, பிரிந்து சென்ற உறவினர் சேருவார். |
| கும்பம் | வீண் முயற்சிகள், எதிர்பாராத பிரயாணங்கள், உறவினர் ஆதரவு, உடல் சோர்வு. |
| மீனம் | அதிக இலாபம், வீணான பழிச்சொல் வரும், உடன் இருப்பவர்கள் துரோகி ஆவார், சுபகாரியம். |

## 100 சதத்திற்குப் பாராட்டு

(கொல்கத்த)

சர்வதேச கிரிக்கெட்டில் 100 சதங்கள் அடித்து சாதனை படைத்த இந்திய வீரர் சச்சின் டெண்டுல்கருக்கு மேற்கு வங்காள மாநில அரசும், பெங்கால் கிரிக்கெட் சங்கமும் இணைந்து பாராட்டு விழா நடத்துகிறது.

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் -மும்பை இந்தியன்ஸ் அணிகளுக்கு இடையே கொல்கத்தா ஈடன்கார்டன் மைதானத்தில் இன்று நடக்கும் ஆட்டத்திற்கு முன்பாக இந்த விழா நடக்கிறது.

விழாவில் மேற்கு வங்காள மாநில முதல்-மந்திரி மம்தா பானர்ஜி கலந்து கொண்டு டெண்டுல்கருக்கு தங்கபேட்டும், பந்தும் வழங்கி கௌரவிக்கிறார்.

## காதல் கொண்டுள்ளான் மகன்




(நியூயோர்க்)

எனது மகன் அர்ஜுன், கிரிக்கெட் மீது காதல் கொண்டுள்ளான் என சச்சின் டெண்டுல்கர் தெரிவித்தார்.

இந்திய அணியின் நட்சத்திர வீரர் சச்சின். அமெரிக்காவில் இருந்து வெளியாகும் பிரபல 'டைம்' பத்திரிகை, இந்த வார இதழின் அட்டைப்படத்தில் இவரது படத்தை வெளியிட்டு கௌரவித்துள்ளது. இப்பத்திரிகைக்கு சச்சின் அளித்த பேட்டியில் சிறு பகுதி வருமாறு:

எனது மகன் அர்ஜுனை கிரிக்கெட்டை தேர்வு செய்யும்படி யாரும் நிர்ப்பந்திக்கவில்லை. அவனாகவே கிரிக்கெட் மீது காதல் கொண்டுள்ளான். எத்தனை மணி நேரம் பயிற்சி செய்கிறான் என்பது கணக்கில்லை. கிரிக்கெட்டை அவன் அனுபவித்து விளையாட வேண்டுமென விரும்புகிறேன். கிரிக்கெட் ஆர்வம் முதலில் இதயத்தில் இருந்து தொடங்கும். பின் ஒருவர் வளர்ச்சி அடையும் போது மூளைக்கு செல்லும்.

கிரிக்கெட் போட்டிகளில் எனது எதிர்பார்ப்புக்கு ஏற்ப தரமாக செயற்பட விரும்புவேன். இதன் காரணமாக பல இரவுகளில் தூக்கத்தை தொலைத்து இருக்கிறேன். ஆனாலும், இந்த நெருக்கடி என்னுள் இருக்கும் திறமையை வெளிப்படுத்த உதவியாக அமைந்தது. எனது கவனம் எப்போதும் கிரிக்கெட் தொடர்பான விடயங்களில் மட்டுமே இருக்கும் எனத் தெரிவித்தார்.

## இலங்கை சுற்றுப் பயணம் பாக். அணி அறிவிப்பு

(லாகூர்)

இலங்கைக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டு முழுமையானதொடரொன்றில் பங்குபற்ற வுள்ள பாகிஸ்தான் அணிகள் அறிவிக்கப்பட்டுள்ளன. டெஸ்ட் போட்டிகள், ஒருநாள் சர்வதேசப்போட்டிகள் மற்றும் ருவென்ரி 20 போட்டிகள் ஆகியனவற்றிற்கான அணிகளே அறிவிக்கப்பட்டுள்ளன.

இலங்கைக்குக் கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ள பாகிஸ்தான் அணி 2 ருவென்ரி 20, 5 ஒருநாள் சர்வதேசப் போட்டிகள் மற்றும் 3 டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றவுள்ளன.

இத்தொடரின் முதலாவது போட்டி ஜுன் முதலாம் திகதி ஆரம்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

முதலில் ருவென்ரி 20 சர்வதேசப் போட்டிகளும், பின்னர் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளும், அதன் பின்னரே டெஸ்ட் போட்டிகளும் இடம்பெறவுள்ளன.

அறிவிக்கப்பட்டுள்ள அணி:

டெஸ்ட் அணி - மிஸ்பா உல் ஹக், மொஹமட் ஹபீஸ், தௌபீக் உமர், அஷார் அலி, யுனிஸ் கான், அசத்சபீக், அட்னன் அக்மல், உமர் குல், சயீட் அஜ்மல், அப்துர்ரெக்மான், மொஹமட் சமி, பைசல் இக்பால், ஜுனைட் கான், அப.்.க் ரஹீம், மொஹமட் அயுப், அய்ஸஸ் சீமா

ஒருநாள் அணி: மிஸ்பா உல் ஹக், மொஹமட் ஹபீஸ், நசீர் ஜம்சட், யுனிஸ் கான், உமர் அக்மல், சப்ராஸ் அகமட், 'கிட் அப்ரிடி, உமர் குல், ரஹட் அலி, சயீட் அஜ்மல், அப்துர் ரெக்மான், மொஹமட் சமி, அசத் சபீக், அய்ஸஸ் சீமா, அ'ார் அலி, இம்ரான் பர்ஹத்

ருவென்ரி 20 அணி: மொஹமட் ஹபீஸ், காலிட் லத்திப், அஹ்மட் செஷாத், சொயிப் அலிக், உமர் அக்மல், 'கீர் அன்'ர், 'கிட் அப்ரிடி, யசீர் அரபாத், உமர் குல், சொஹைல் தன்வீர், சயீட் அஜ்மல், ராஷா ஹசன், ஹரிஸ் சொஹைல், மொஹமட் சமி, ஹம்மதட் அ'ம், நசீம் ஜம்ஷட்

## கங்குலி நீக்கம் : இனி ஆலோசகராக மட்டும்



(புனே)

புனே அணியின் கப்டன் பொறுப்பில் இருந்து கங்குலி நீக்கப்பட்டார். இனி ஆலோசகராக மட்டும் செயற்பட உள்ளார்.

கங்குலி தலைமையில் புனே அணி 13 போட்டியில் 4 வெற்றி, 9 தோல்வியை பெற்றது. தொடர்ந்து ஆறு தோல்வியைப் பதிவு செய்த புனே அணி, 'பிளே-ஆப்' சுற்றுக்கு முன்னேறும் வாய்ப்பை இழந்தது.

இதுகுறித்து புனே அணியின் உரிமையாளர் சுப்ரதா ரோய் கூறுகையில், அடுத்த ஆண்டு நடக்கவுள்ள ஆறாவது ஐ.பி.எல். தொடரில் புனே அணியின் ஆலோசகராக மட்டும் கங்குலி செயற்படுவார். இளம் வீரர்களுக்கு வாய்ப்பு வழங்க முடிவு செய்துள்ள இவர், இத்தொடரில் மீதமுள்ள மூன்று போட்டியில் விளையாட மாட்டார். சிறந்த கப்டனாக விளங்கிய இவரை, எங்கள் அணி ஒரு வீரராக இழக்கிறது என்றார்.

இதுகுறித்து கங்குலி கூறுகையில், புனே அணி நிர்வாகம் கேட்டுக் கொண்டதால், இம்முறை கப்டனாக களமிறங்கினேன். தற்போது இளம் வீரர்களுக்கு எனது இடத்தை விட்டுக் கொடுக்க விரும்புகிறேன்.

இந்த ஆண்டு தொடக்கத்தில் சிறந்த முறையில் எல்லோரும்விளையாடினர். இருப்பினும் இடையில் ஏற்பட்ட சறுக்கல்களால் தொடரிலிருந்து வெளியேற வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. இருப்பினும் அடுத்து வரும் ஐ.பி.எல். தொடரில் சாதிப்போம் என்றார்

## காலிறுதியில் செரீனா வில்லியம்ஸ்

மாட்ரிட் ஓப்பன் ரென்னிஸ் தொடரின் பெண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதிப் போட்டிக்கு அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் தகுதிபெற்றுள்ளார்.

மாட்ரிட் ஓப்பன் டென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு 3ஆவது சுற்றில், டென்மார்க்கின் கரோலின் வோஸ்னியாக்கியுடன்அமெரிக்க வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் நேற்று முன்தினம் மோதினார். முதல் செட்டை 1,6 என்ற கணக்கில் இழந்த செரீனா, அடுத்த செட் ஆட்டங்களில் சுதாரித்து விளையாடி 1,6, 6,3, 6,2 என்ற செட் கணக்கில் வென்று காலிறுதிக்கு முன்னேறினார். போலந்தின் அக்னியஸ்கா ரட்வன்ஸ்கா, லூசி ராடெக்கா (செக்.) ஆகியோரும் 3ஆவது சுற்றில் வெற்றி பெற்றனர்.

## கொல்கத்தா அணிக்கு சம்பியன் வாய்ப்பு

(புதுடில்லி)

தற்போதைய அணியின் பலத்தையும் ஆட்ட முறையையும் பார்க்கையில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி இந்த ஐ.பி.எல். தொடரில் சம்பியன் பட்டத்தை வெல்ல வாய்ப்பு உள்ளது என டெக்கான் சார்ஜர்ஸ் அணித் தலைவர் குமார் சங்கக்கார தெரிவித்தார்.

டில்லி டேர்டெவில்ஸ் மற்றும் சென்னை சூப்பர் கிங்ஸ் அணிகள் சரியான வீரர்களைக் கொண்ட அணியாகும். சென்னை அணியின் நிலையற்ற ஆட்டத்தால் அந்த அணி பாதிப்புக்கு ஆளாகி இருக்கிறது. கொல்கத்தா அணி மிகவும் சிறப்பாக விளையாடி வருகிறது. கப்டன் கம்பீர் அணியை சிறப்பாக வழிநடத்துகிறார். டில்லி டேர்டெவில்ஸ் மற்றும் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகளில் தரமான உள்ளூர் வீரர்கள் உள்ளனர். டெக்கான் அணியில் இருந்து சில வீரர்கள் மற்ற அணிக்கு மாறியது தான் எங்கள் பின்னடைவுக்கு காரணமாகும். அடுத்த ஐ.பி.எல். தொடர் சாதிக்க முற்படுவோம். அதற்கான வீரர்கள் எம்மிடம் உள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

## டில்லி அதிரடி வெற்றி

இந்தியன் பிறிமியர் லீக் தொடரின் 55ஆவது போட்டியில் டில்லி டெயாடெவில்ஸ் அணி அதிரடி வெற்றி பெற்றுள்ளது..

முதலில் துடுப்பெடுத்தாடிய டெக்கான் சார்ஜர்ஸ் அணி 20 ஓவர்களின் நிறைவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 187 ஓட்டங்களைப் பெற்றது. இதில் தவான் 49 பந்துகளில் 84 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்கு 188 ஓட்டங்கள் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய டில்லி டேர்டெவில்ஸ் அணி இரண்டாவது பந்திலேயே விரேந்தர் செவாக்கை இழந்தது. எனினும் பின்னர் ஜோடி சேர்ந்த டேவிட் வோணர், நமன் ஓஜா ஆகியோர் பிரிக்கப்படாத 189 ஓட்டங்களை 16.2 ஓவர்களில் பகிர்ந்து இலகுவான வெற்றியை அடைந்தது.

இதில் டேவிட் வோனர் 54 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 109 ஓட்டங்களையும், நமன் ஓஜா 46 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 64 ஓட்டங்களையும் பெற்றனர்.

போட்டியின் நாயகனாக அதிரடியான சதத்தைப் பெற்ற டேவிட் வோணர் தெரிவானார்.

## டொனால்ட் வெற்றிக் கிண்ணம் இன்று முதலாவது போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். சென்றலைற்ஸ் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும் டொனால்ட் கணேசகுமார் வெற்றிக் கிண்ணத்திற்கான ஒரு நாள் தொடரின் முதல் போட்டி இன்றைய தினம் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் அதன் அதிபர் எழில்வேந்தன் தலைமையில் ஆரம்பமாகவுள்ளது.

ஆறு வருடங்களின் பின் இடம் பெறும் இப்போட்டித் தொடரின் முதல் ஆட்டத்தில் ஜொனியன்ஸ் அணியை எதிர்த்து ஸ்ரான்லி அணி மோதவுள்ளன.

கடைசியாக 2005இல் நடைபெற்ற இப்போட்டியில் யாழ். பல்கலைக்கழக அணி வெற்றிபெற்றது. ஆரம்ப காலத்திலிருந்தே 50 ஓவர்களைக் கொண்டு விளையாடப்படும் முதலாவது சுற்றுப் போட்டி என்ற தனித்துவத்தைப் பெற்ற இப்போட்டித் தொடர் கடந்த 1990ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டபோதிலும் சில இடையூறு காரணமாக அடுத்த வருடமே நடைபெற்றது. இவ் ஆரம்பப் போட்டியில் மானிப்பாய் . பரிஸ் அணி டொனால்ட் வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

அநேகமான விளையாட்டுத்துறைகளில் சிறந்து விளங்கிய டொனால் கணேசகுமார் கிரிக்கெட்டில் தனது திறமையை வெளிக்காட்டி முத்திரை பதித்தார். 1965 ஆண்டு யாழ். மத்திய கல்லூரி கிரிக்கெட் அணிக்கு தலைமை தாங்கிய இவர், அதற்கு முதல் வருடமே இலங்கை பாடசாலை கிரிக்கெட் அணியில் இடம்பெற்று அவுஸ்ரேலிய சென்று அங்கும் தனது திறமையை வெளிப்படுத்தினார். பாடசாலை படிப்பை முடித்துக் கொண்ட இவர்,தமிழ் யூனியன் அணியிலும் அங்கம் வகித்தார். பின்னர் இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் சப் இன்பெக்ஸ்டராகப் பதவி வகித்த அக்காலத்தில் பொலிஸ் கிரிக்கெட் அணியிலும் விளையாடினார்.

. ஆயிரத்து தொளாயிரத்து என்பதுகளின் முற்பகுதியில் காலமாகிய இத்திறமை மிக்க கிரிக்கெட் வீரரின் நினைவாகயாழ்சென்றலைற்ஸ் விளையாட்டுக் கழகம் இச்சுற்றுப்போட்டியினை நடாத்துவதில்பெருமகிழ்ச்சிஅடைகின்றது.

## சென்னை வெற்றி

இந்தியன் பிறிமியர் லீக். கிரிக்கெட் தொடரின் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் நான்கு விக்கட்களால் சென்னை சுப்பர்கிங்ஸ் அணிவெற்றி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி 20 ஓவர்களில் ஆறு விக் கெட்களை இழந்து 126 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. இதில் ப்ரட் ஹொட்ஜ் 33 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்கு 127 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 18.1 ஓவர்களில் ஆறு விக்கெட்களை இழந்து வெற்றியிலக்கைக் கடந்தது. இதில், சுரேஸ் ரெய்னா 23 ஓட்டங்களைப் பெறறார். இந்த வெற்றி சிறப்பான வெற்றி என டோனி தெரிவித்தார்.



## மயிரிழையில் தவறவிட்டார்

ஜமேக்காவைச் சேர்ந்த உலக சம்பியனான யோகான் பிளேக் இந்த ஆண்டு 100 மீற்றர் ஓட்டத்தில் அதி சிறந்த காலப் பெறுமதியை பதிவு செய்வதை மயிரிழையில் தவறவிட்டுள்ளார்.

ஜோர்ஜ் டவுணில் நடைபெற்ற 100 மீற்றர் ஓட்ட தூரத்தை 9.84 செக்கன்களில் நிறைவு செய்த யோகான் பிளேக் முதலாம் இடத்தைப் பெற்றார்.

சக வீரரான மிச்சேல் ப்ளட்டர் 10 .05 செக்கன்களிலும், ரினிடாட் அன்ட் ரூபாக்கோ வீரர் கெஸ்டன் பிளட்மென் 10.06 செக்கன்களிலும் போட்டித் தூரத்தை நிறைவுசெய்தனர்.

உலக சாதனையாளரும், ஒலிம்பிக் மற்றும் உலக சம்பியனுமான உசேன் போல்ட் கிங்ஸ்டனில் கடந்த வார இறுதியில் நடைபெற்ற 100 மீற்றர் ஓட்டத்தை 9.82 செக்கன்களில் பூர்த்தி செய்திருந்தார்.

# தாச்சி முதல் சுற்று ஆட்டத்தில் மறுமலர்ச்சி, சாந்தை வெற்றி

## இன்றைய ஆட்டத்தில் சரஸ்வதி வராகி அணிகள் மோதல்

(கைதடி)

யாழ். மாவட்ட தாச்சிப் போட்டித் தொடரின் முதல் சுற்று ஆட்டங்களில் கோண்டாவில் மறுமலர்ச்சி மற்றும் பண்டத்தரிப்பு சாந்தை அணிகள் வெற்றி பெற்றன.

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கம் யாழ். மாவட்ட ரீதியில் நடத்தும் மாவட்ட மட்டத் தாச்சிப் போட்டி கைதடி குமரநகர் விளையாட்டு மைதானத்தில் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் மின்னொளியில் நடைபெறுகின்றது.

இதன்படி முதல் போட்டியில் கோண்டாவில் மறுமலச்சி அணியும், கைதடி மின்னொளி அணியும் மோதின. இதில் சிறப்பாக விளையாடிய மறுமலர்ச்சி அணி 10:00 பழம் என்ற அடிப்படையில் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியது.

அடுத்த போட்டியில் கைதடி உதய சூரியன் அணியும், பண்டத்தரிப்பு சாந்தை அணியும் மோதின. இதில் பண்டத்தரிப்பு சாந்தை அணி 9-4 என்ற பழம் அடிப்படையில் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியது.

இதேவேளை, இன்றைய போட்டியில் நாவற்குழி சரஸ்வதி அணியை எதிர்த்து கொக்குவில் வராகி அணியும், நாளைய போட்டியில் மயிலிட்டி கண்ணகி அணியை எதிர்த்து தாவடி காளி அம்பாள் அணியும் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)

# முல்லைத்தீவு வலய மட்ட கூடைப்பந்தாட்டம் இன்று

(முல்லைத்தீவு)

துணுக்காய், முல்லைத்தீவு வலய பாடசாலைகளுக்கிடையிலான கூடைப்பந்தாட்டப் போட்டி இன்று சனிக்கிழமை மல்லாவி மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் நடைபெறவுள்ளது.

இச்சுற்றுப் போட்டியில் முல்லைத்தீவு மாவட்டத்தில் கூடைப்பந்தாட்ட திடலினை கொண்டுள்ள பாடசாலைகளான முல்லைத்தீவு கல்வி வலய புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, வித்தியானந்தாக் கல்லூரி ஆகிய இரு கல்லூரிகளுடன் துணுக்காய் கல்வி வலயத்திலிருந்து மல்லாவி மத்திய கல்லூரி அணிகள் என்பன மோதவுள்ளன.

19 வயதுப் பிரிவு ஆண்கள்

முதலாவது போட்டி வித்தியானந்தா கல்லூரி எதிர் மல்லாவி மத்திய கல்லூரி. இப்போட்டியில் வெற்றிபெறும் அணி புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணியுடன் இறுதிப் போட்டியில் மோதவுள்ளன.

19 வயதுப் பிரிவு பெண்கள்:

வித்தியானந்தாக் கல்லூரி எதிர் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி. இப்போட்டியில் வெற்றிபெறும் அணி மல்லாவி மத்திய கல்லூரி அணியுடன் இறுதிப் போட்டியில் மோதவுள்ளன. (42)

# மாதாந்த அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்

அனைத்து விளையாட்டு சம்மேளனங்களும் தமது மேம்பாட்டுத் திட்டங்கள் குறித்து மாதாந்தம் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என விளையாட்டுத்துறை அமைச்சு உத்தரவு பிறப்பித்துள்ளது.

அமைச்சில் பதிவு செய்யப்பட்டுள்ள விளையாட்டுச் சம்மேளனங்களுக்கு இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த விளையாட்டுச் சம்மேளனங்களுக்கென விளையாட்டு அமைச்சினால் தொடர்பாடல் அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களால் விளையாட்டுப் பயிற்சி, தேசிய கிண்ணப் போட்டிகள், வெளிநாட்டுப் போட்டிகள் தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

அது மாத்திரமன்றி மாதாந்தம் முன்னேற்ற அறிக்கைகளும் விளையாட்டுத்துறை அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

# முல்லை. மாவட்ட எல்லே மல்லாவி ம.வி. சம்பியன்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட பாடசாலைகளிடையே நடைபெற்ற மாவட்ட மட்ட பெண்களுக்கான எல்லேப் போட்டியில் மல்லாவி மத்திய கல்லூரி அணி சம்பியனானது.

முல்லைத்தீவு முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற பெண்களுக்கான எல்லேப் போட்டியின் முதல் அரையிறுதிப் போட்டியில் செம்மலை மகாவித்தியாலய அணியை எதிர்த்து பாண்டியன்குளம் மகாவித்தியாலய அணி மோதியது. இதில் செம்மலை மகாவித்தியாலய அணி வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவானது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் கற்சிலைமடு அ.த.க. பாடசாலை அணியும், மல்லாவி மத்திய கல்லூரி அணியும் மோதின. இதில் மல்லாவி மத்திய கல்லூரி அணி வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இறுதிப் போட்டியில் மல்லாவி மத்திய கல்லூரி அணியும், செம்மலை மகாவித்தியாலய அணியும், மோதின.

இதில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய மல்லாவி மத்திய கல்லூரி அணி வெற்றிபெற்று மாவட்ட சம்பியனானது.

இதேவேளை, மூன்றாமிடத்திற்கான போட்டியில் கற்சிலைமடு அ.த.க. பாடசாலையும், பாண்டியன்குளம் மகாவித்தியாலய அணியும் மோதின. இதில் கற்சிலைமடு அ.த.க. பாடசாலை வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது.

மூன்று இடங்களையும் பிடித்துக் கொண்ட பாடசாலைகள் மாகாண மட்டப் போட்டிக்குத் தகுதிபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (42)

# தேசிய மட்டத்திற்கு சவேரியார் தெரிவு

(மன்னார்)

இலங்கை பாடசாலைகளுக்கிடையே உதைப்பந்தாட்ட சம்மேளனம் நடத்திய 17 வயதுக்கு உட்பட்ட மாணவர்களுக்கான தேசிய மட்ட உதைப்பந்தாட்ட போட்டிக்கு, மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய கல்லூரி தகுதி பெற்றுள்ளது.

இதற்கான தகுதிகான் போட்டி அண்மையில் மன்னாரில், புனித சவேரியார் தேசிய கல்லூரிக்கும், முருங்கன் மத்திய மகா வித்தியாலத்துக்கும் இடையில் இடம்பெற்றது.

இதில் 4-0 என்ற கணக்கில் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய கல்லூரி வெற்றிபெற்றதன் மூலம், தேசிய ரீதியான போட்டிக்கு தெரிவாகியுள்ளது.



யாழ். மாவட்ட பாடசாலை அணிகளுக்கிடையிலான மாவட்ட மட்ட கால்பந்துத் தொடரின் 17 வயதுப் பிரிவில் இரண்டாமிடத்தைப் பிடித்துக் கொண்ட இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணி வீரர்களைக் காணலாம். அண்மையில் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் நாவாந்துறை றோமன் கத்தோலிக்கப் பாடசாலை முதலிடம் பிடித்தமை குறிப்பிடத்தக்கது. (படப்பிடிப்பு:சுரேஷ்)

# ஹாட்லி, விக்டோரியா மாவட்ட மட்ட சம்பியன்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற மாவட்ட மட்ட எல்லேப் போட்டியில் ஆண்கள் பிரிவில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணியும், பெண்கள் பிரிவில் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி அணியும் சம்பியனானது.

இப்போட்டி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது.

இதில் ஆண்கள் பிரிவில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி முதலாமிடத்தையும், சாவகச்சேரி இந்துக் கல்லூரி இரண்டாமிடத்தையும், பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயம் மூன்றாமிடத்தையும் பிடித்துக் கொண்டன.

பெண்கள் பிரிவில் சுழிபுரம் விட்டோரியாக் கல்லூரி முதலாமிடத்தையும், பருத்தித்துறை மெதடிஸ்த உயர்தரப் பாடசாலை இரண்டாமிடத்தையும், மணற்காடு றோமன் கத்தோலிக்க பாடசாலை மூன்றாமிடத்தையும் பிடித்துக் கொண்டன.

மேற்படி முதல் மூன்று இடங்களைப் பெற்ற அணிகள் மாகாண மட்டப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (93)

# உதைபந்தாட்ட அபிவிருத்தி கூட்டுத் திட்டம் நடைமுறை

(கொழும்பு)

உதைபந்தாட்டத்தை கிராம மட்டத்தில் அபிவிருத்தி செய்வதற்காக விளையாட்டு அமைச்சும், உதைபந்தாட்டச் சம்மேளனமும் கூட்டுத் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தும்.

314 பிரதேச செயலகங்களை இலக்கு வைத்து உதைபந்தாட்டக் கழகங்களை உருவாக்கி கிராமிய உதைபந்தாட்ட வீரர்களை உயர் மட்டத்துக்குக் கொண்டு வருவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

கிராமப்புற வீரர்களுக்கு தேசிய அமைப்புக்களில் பிரவேசிப்பதற்கு வாய்ப்புக்கள் விஸ்தரிக்கப்படும்.

கிராமிய மட்டத்தில் இதனைப் பிரபல்யப்படுத்தவும் ஒருங்கிணைந்த திட்டமும் ஆரம்பிக்கப்படும்.

விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே உதைபந்தாட்டச் சங்கப் பிரதிநிதிகளுடன் இது தொடர்பாக நேற்று அமைச்சில் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இத்திட்டத்துக்காக விளையாட்டு அபிவிருத்தி திணைக்கள விளையாட்டு அதிகாரிகளின் ஒத்துழைப்பு மாவட்ட, பிரதேச செயலாளர் மட்டங்களில் பெற்றுக் கொடுக்கப்படுமென்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

மாலைதீவுக்கும் இலங்கைக்கும் இடையில் ஜூன் மாதத்தில் நடைபெறவுள்ள சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டி தொடர்பாகவும் உதைபந்தாட்டச் சம்மேளனம் அமைச்சருக்கு விளக்கியது.

உதைபந்தாட்டச் சங்கத் தலைவர் சரத் வீரசேகர எம்.பி. உட்பட உயர் அதிகாரிகள் பங்குபற்றினர்.

# மாவட்ட மட்ட கராத்தே இன்று

(நெல்லியடி)

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான மாவட்ட மட்ட கராத்தேப் போட்டி இன்றைய தினம் வடமராட்சி மெதடிஸ்த பெண்கள் உயர் தரப் பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

வயது அடிப்படையில் இடம்பெறவுள்ள இப்போட்டி ஆண், பெண் என இரு பாலாருக்குமிடையில் நடைபெறவுள்ளது.

இதில் 15, 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் இடம்பெறும் இப்போட்டி நாளை வரை இடம்பெறும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

**லண்டனில் 'தமிழ் மொழிச் சமூகங்களின் செயற்பாட்டகம்' ஒழுங்கு செய்திருந்த சந்திப்பில், காலச்சுவடு பதிப்பாசிரியரும் சுந்தர ராமசாமியின் மகனுமாகிய கண்ணன் வாசித்த கட்டுரையிலிருந்து**

# தமிழகத்தில் ஓடாத இரத்த ஆற்றின் கதை!

**நான்** கல்லூரியில் இரண்டாம் ஆண்டு என் விடுதி அறையில் பிரபாகரனின் புகைப்படத்தை ஒட்டி னேன். புலிகளின் சாகசங்கள் அவர் கள் மீது கவனத்தையும் பாராட்டு ணர்வையும் ஏற்படுத்தியிருந்தன.

ஆண்டு 1986-87ஆக இருக்கலாம். இக்காலகட்டத்தில் புலிகளுக்கு மும்பை தமிழ் மாபியாத் தலைவர் வரதராஜ முதலியாருடன் உறவு ஏற்பட்டிருந்தது என நினைக்கிறேன். அவருடைய முயற்சியில் பால் தாக்க ரேயின் ஆதரவுடன் மும்பையில் ஒரு மாபெரும் தமிழர் பேரணி ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக நடந்தது.

சிவசேனைத் தலைவர் பால் தாக்கரேயைப் புலிகள் சந்தித்து உதவி கோரியதாகவும் தகவல் கள் ஊடகங்களில் வெளிவந்தன. இவை எல்லாம் எனக்குக் கொஞ்சம் புதிராக இருந்தன.

பின்னர் சென்னையில் புலி இயக்கத்தவர்களைப் பார்த்த போது எனக்குத் தெரியவந்த ஒரு விஷயம் அவர்களுடைய முஸ்லிம் எதிர் மனோபாவம். இது எனக்கு ஏமாற்றமளித்தது. இதற்கு அன்றும் இன்றும் கூறப்படும் காரணங்கள் எனக்குச் சமாதானம் அளிப்பதாக இல்லை.

இஸ்லாமிய சமூகம் பற்றியோ வேறு சமூகங்கள்பற்றியோ, வானத்தின் மேலும் கீழுமிருக்கும் எந்தப் பொருள் பற்றியோ விமர்சனத்திற்கு அப் பாலான உறவை ஏற் படுத்திக்கொள்வது எனக் குச் சாத்திய மில்லை. இருப்பினும் இந்தியாவில் இந்து இஸ்லாமிய உறவு பற்றிய காந்தியின் கூற்று ஒரு முத் திரை வாக்கியமாக மனதில் பதிந்து கிடக்கிறது. "இந்து இஸ்லாமிய நல்லுறவு எனக்கு ஒரு நம்பிக்கை அல்ல, விசுவாசம்." 'Not a belief but a faith.'

இக்காலகட்டத்தில் நடைபெற்ற அநுராதபுரம் பஸ் நிலைய குண்டு வெடிப்பு எனக்குப் பேரதிர்ச்சியாக இருந்தது. அநுராதபுரத்திற்கு முன் னரும் போராளிகள் இத்தகைய சம் பவங்களில் ஈடுபட்டிருந்திருக்கலாம். ஆனால் அவை எனக்குத் தெரிய வில்லை. பின்னர் ஒரு இலங்கை எழுத்தாளர் என்னிடம் பேசும்போது அநுராதபுரம் குண்டு வெடிப்புதனக்கு முதலில் பேரதிர்ச்சியாக இருந்ததாக வும் பின்னர் அதன் சாதகமானபலன் களைக் கண்டதும் அதன் முக்கியத் துவத்தை ஏற்றுக் கொண்டாதாகவும் கூறினார்.

எனது ஊர், எனது தெரு, என் வீடு, என் குடும்பம் அச்சுறுத்தலுக் கும் ஆபத்துக்கும் ஆளாகும்போது எத்தகைய மனமாற்றங்கள் ஏற்படும் என்பதை நான் இன்று அனுமானிக்க முடியாது. ஆனால் பிற மக்களை அறமின்றி அழித்துத்தான் நாம் உரி மைகளைப் பெற்று வாழ வேண்டுமா என்றகேள்வி எனக்கு முக்கியமானது.

தன் உயிரைக் கொடுத்து தாம் நம்பும் காரணங்களுக்காக போராடுப வர்களை நான் எப்போதும் மதிக்கி றேன். ஆனால் அதே நம்பிக்கை யுடன் பிறர் உயிரையும் அவர்கள் பறிப்பதை ஏற்க முடிவதில்லை.

அறையில் ஒட்டியிருந்த பிரபா-கரனின் புகைப்படம் காற்றில் பிய்ந்து தொங்கியபோது, அதை மீண்டும் எடுத்து நான் ஒட்டவில்லை.

யாழ்ப்பாண முஸ்லிம்கள் வெளி யேற்றம், கிழக்கில் நடைபெற்ற முஸ் லிம்கள் படுகொலைகளை நான் சமகாலத்தில் அறிந்திருக்கவில்லை. ஆனால் அப்போது இந்திய சமூகத் திலும் ஊடகங்களிலும் நிலவிய புலி ஆதரவு நிலைப்பாடு காரணமாக இவை பதிவு பெறவே இல்லையோ என்றே எண்ணுகிறேன். ஏனெனில் எல்லா காலகட்டங்களிலும் ஊடகங் களை ஓரளவு உன்னிப்பாகவே கவனித்து வந்திருக்கிறேன்.

புலம்பெயர்ந்த தமிழர் வாழும் நகரங்களில் 1993இல் சு.ரா. சுற்றுப் பயணம் மேற்கொண்டபோது பற்பல சிற்றிதழ்களைச் சேகரித்து வந்தார். இவை அனைத்தையும் பெரும் ஆர் வத்தோடு படித்தேன். லண்டனிலிருந்து வெளிவந்த ஒரு மார்க்சிய சிற்றிதழில் -உயிர்ப்பு என்று நினைக்கிறேன்-வெளி வந்த நீண்டஆய்வுக் கட்டுரைகளைப் படித்த போதுதான் யாழ்ப்பாண முஸ்லிம்கள் வெளியேற்றம், கிழக்கில் நடைபெற்ற வன்முறையின் தீவிரம் ஆகியன ஆழமாக என் மனதில் பதிந் தன. மேற்படி கட்டுரைகள் புலிகள் இயக்கத்துடன எனக்கு எஞ்சியிருந்த மானசீகஉறவை ஆழமாகப் பாதித்தன.

> தமிழகத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும் இருக்கும் அகதி முகாம்களில் இருக்கும் தமிழரின் நலனில் எந்த அரசியல் தலைவரும் அறிவுஜீவியும் போதிய கவனம் காட்டியதில்லை. இலங்கையில் தமிழர் இழிவுபடுத்தப் படும்போது அலறுபவர்கள் தமிழக மண்ணில் அவர்கள் இழிவுபடுத்தப் படும்போது ஏன் கரிசனம் கொள்வ தில்லை? ஏனெனில் தமிழக அகதி முகாம்களில் ஈழத் தமிழரின் நிலையைப் பேசுவது இனவாத அரசியலுக்குப் பயன்படாது.

1983இல் தமிழகத்தில் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக ஏற்பட்ட எழுச்சியைப் போல நான் வேறொரு எழுச்சியைப் பார்த்ததில்லை. அந்த உணர்ச்சிமயமான நிலை தமிழகத்தில் நடந்த ராஜீவ்காந்தி மற்றும் அவருட னிருந்த சுமார் 15 நபர்களின் படு கொலையுடன் முடிவுக்கு வருகிறது.

பொதுவாக என் பார்வையில் இலங்கைத் தமிழர் பிரச்சினை என்பது தமிழகத்தில் அரசியலிலும் அறிவுலகி லும் அணுகப்படும் விதம் இலங்கைத் தமிழர்களின் நலன் மீதான அசலான அக்கறை என்ற தளத்திலிருந்துவிலகி, தமது நலன்களுக்காக, தமது அரசிய லுக்காக, தமது அடையாளத்திற்காக ஈழத்தமிழரின் துயரத்தைக்கையாளு தல்,சுரண்டுதல் என்றநிலைக்குநகர்ந்து விட்டது. அசலான ஆர்வத்துடன் இயங்குபவர்களின்நோக்கத்தைக்கொச் சைப்படுத்த நான் விரும்பவில்லை. அதேநேரம் சுரண்டல் போக்கேபெரும் பான்மைப் போக்காக இன்று உள்ளது.

இதற்கு ஒரு சிறந்த உதாரணம் 2005இல் ரவிக்குமார் எம்.எல்.ஏவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதும் தமிழகத்திலி ருக்கும் இலங்கைத் தமிழர் முகாம்கள் பலவற்றை ஆய்வு செய்து காலச்சுவ டில் அறிக்கை வெளியிட்டார்.

அதுவரை தமிழகத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும் இருக்கும் அகதி முகாம்களில் இருக்கும் தமிழரின் நல னில் எந்த அரசியல்தலைவரும் அறிவு ஜீவியும் போதிய கவனம் காட்டிய தில்லை. இலங்கையில் தமிழர் இழிவு படுத்தப்படும்போது அலறுபவர்கள் தமிழக மண்ணில் அவர்கள்இழிவு படுத்தப்படும்போது ஏன் கரிசனம் கொள்வதில்லை?ஏனெனில் தமிழக அகதி முகாம்களில் ஈழத் தமிழரின் நிலையைப் பேசுவது இனவாதஅர சியலுக்குப் பயன்படாது.

தமிழக மண்ணில் நின்று வீரச்சவ டால் விடுபவர்கள், மத்திய அரசுக்கு எச்சரிக்கை விடுபவர்கள், சோனியா காந்தியை மிரட்டுபவர்கள், ராகுல் காந்தியும் சாக வேண்டுமா என்று கோஷம் எழுப்புபவர்கள் எவரேனும் தமது வீரப் பேச்சுகள் எத்தகைய எதிர்மறையான பாதிப்புகளை ஈழத்தில் ஏற்படுத்தக்கூடும் என்று ஒரு கணமே-னும் சிந்தித்ததுண்டா?

தமிழகத்திற்கு வரும் சிங்களவர் களைத் தாக்குபவர்கள் அத்தகைய செயல்கள் இலங்கைவாழ் தமிழர் களுக்குப் பாதிப்பை ஏற்படுத்துமா என ஒரு கணம் தயங்கியதுண்டா?

தேசியத் தலைவரின் தலையிலி ருக்கும் ஒரு மயிர் உதிர்ந்தால் தமிழ கத்தில் இரத்த ஆறு ஓடும் என வீர-வசனம் பேசிய தலைவர்கள் பலர். முள்ளிவாய்க்காலில் உண்மையிலேயே இரத்த ஆறு ஓடியபோது இவர்கள் எவர் தலையிலிருந்தும் ஒரு மயிர்கூட உதிரவில்லை. அதைப்பற்றி எந்தக் குற்ற உணர்வும் மறுபரிசீலனையும் இன்றி இலங்கையில் அடுத்த இரத்த ஆறு ஓடும் காலத்தைக் கனவுகாணத் தொடங்கியிருக்கிறார்கள்.

தமிழக ஊடகங்கள் பிரபாகரனின் புகைப்படத்தைத் தமது விற்பனைக் காகச் சுரண்டியதைப் போல ஒரு ஊடகச் சுரண்டல் அரிதாகவே நடந் திருக்கும். இலங்கைத் தமிழர்களின் அசலான அவல நிலையைச் சுட்டிக் காட்டுவதைவிட தமிழக வாசகருக்கு உவப்பான ஒரு வீர வரலாற்றை உருவாக்குவதிலும் போலி நம்பிக்கை களை உருவாக்குவதிலும் அவை முனைப்பாக உள்ளன. இன்னும் சில ஊடகங்கள் புலி எதிர்ப்பு என்ற பெயரில் இலங்கைத் தமிழ் மக் களுக்கு எதிரானகருத் துகளைப்பரப்பி வரு கின்றன.

தமிழகத்தில் தமிழ்த் தேசியத்தின் வளர்ச்சியை, மத்திய அரசு எதிர்ப்பை, தனித் தமிழ்நாட்டை வேண்டுபவர்கள் தமது வியர்வையையும்இரத் தத்தையும் சிந்தி அதற் காகப் போராடட்டும். ஈழப்போராட்டம்வழி தமிழகத்தில் proxy war நடத்தும் போது அதன் பயன்பாடுகள் தமிழகத் தலைவர் களுக்கும், பாதிப்புகள் ஈழத்தமிழருக்கும் ஏற்படுகின்றன.

எந்த இழப்புகளை யும் சந்திக்காமல் புரட்சிகர பிம்பத்தை ஏற்படுத்திக்கொள்ள சந்தர்ப்பவாதிகளுக்கு ஈழப்பிரச்சினை ஒருகிடைப்பதற்கரிய வாய்ப்பாக இருக்கிறது.

> ஒரு இலங்கை எழுத்தாளர் என்னிடம் பேசும்போது அநுராதபுரம் குண்டு வெடிப்பு தனக்கு முதலில் பேரதிர்ச்சியாக இருந்ததாகவும் பின்னர் அதன் சாதகமான பலன்களைக் கண்டதும் அதன் முக்கியத்துவத்தை ஏற்றுக்கொண்டாதாகவும் கூறினார்.

உயர்நடுத்தர வாழ்க்கை வாழ்ந்து, குடும்பத்தைச் சிறப்பாகப் பராமரித்து, பதவி உயர்வுகளைக் குறிவைத்துச் செயற்பட்டு, மாலை வீடு திரும்பிய தும் எதிர்கொள்ளும் வெறுமையைப் போக்க முகநூலில் புரட்சிகர கீதம் பாடுவதைக் குறை சொல்ல எனக்கு எதுவுமில்லை.

வாழ்வின் வெறுமைக்கு மாற்று சிலருக்கு வாசிப்பு, சிலருக்குஎழுத்து, சிலருக்கு இசை, சிலருக்குப் பக்தி, சிலருக்குப் புரட்சி. ஆனால் புலம் பெயர்ந்த சமூகத்தினர் இந்தத் தமிழ கப் 'புரட்சியாளர்கள்' மீது கொண்டி ருக்கும் தீராத மோகம் கவலையளிக் கிறது. தமக்கான விடிவுகாலம் தமிழ கத்திலிருந்து உருப்பெற்றுவரும் என்ற ஈழத்தமிழர்களின் பரவலான நம்பிக்கை ஒரு மூடநம்பிக்கை யாகவே எனக்குத் தோன்றுகிறது.

இலங்கைத் தமிழர்களின் வருங் காலம் மேம்பட தமது பிரச்சினைக் கான பிரதிநிதிகள் தாம் மட்டுமேஎன் பதை அவர்கள் தெளிவுபடுத்தவேண் டும். தமிழகத்திலிருப்பவர்களுக்குப் பிரதிநிதிகளாக மாறும் உரிமை மறுக் கப்பட வேண்டும். தமது வாழ்வு மேம்பெற இலங்கைத் தமிழர்கள் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஆதர வாளர்களாக இருக்கும் உரிமை மட் டுமே தமிழக, மலேசிய, பிற தேசத் தமிழர்களுக்கு இருக்க முடியும்.

இலங்கையில் தமிழர்களின் வருங்காலம் தொடர்பானகேள்விகள் தமிழ்ச் சமூகத்தின் முன் இருக்கும் ஆக முக்கியமான பிரச்சினை. இத் தனை அழிவுகளுக்கும் படுகொலை களுக்கும் பிறகு இனியும் இலங்கை யில் எல்லா இன மக்களும் இணைந்து வாழ முடியுமா என்பது முக்கியமான கேள்வி.

இந்தியாவின்பிரிவினையின்போது இந்து - சீக்கியர்கள் மற்றும் இஸ்லா மியர் இடையே ஓராண்டு காலம் தொடர்ந்த வன்முறையில் சுமார்பத்து லட்சம் மக்கள் கொல்லப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. இதன்பின்னர்அவ் வப்போது மதக் கலவரங்கள் வெடித் தாலும் இஸ்லாமியருக்குச்சமஉரிமை பல தளங்களில் மறுக்கப்பட்டாலும் இந்தியாவின் பல பகுதிகளில் பெரு மளவுக்கு இணைந்து அவர்களால் இந்தியாவில் வாழ முடிகிறது.

இலங்கையில் மிதமிஞ்சிய வன் முறையில் பாதிக்கப்பட்டவர்கள் அமைதியான வருங் காலத்தை எதிர்பார்ப்பதில் பிழை இல்லை.

இன்று செய்யக் கூடியதாக எனக் குத் தோன்றுவது ஆழமான மறுபரி சீலனையும் தீவிரமான உரையாட லும். இலங்கைக்கு அப்பாற்பட்ட களங்களிலிருந்து மேற் கொள்ளப்படும் நட வடிக்கைகள் அங்கு வாழும் மக்களின் உணர்வுகளைக்கணக் கில் கொண்டு முன் னெடுக்கப்பட வேண் டும். தீர்வுக்கான தேவையை இலங் கையின் எல்லாத் தரப்பு மக்களும் உணர்ந்தால் அத் தேடலிலிருந்து புதிய தீர்வு உருப் பெறும் என்று நம்புகிறேன். அதன் தன்மையை இப்போதே முன் ஊகிப்பது கடினம்.

எனவே ஒரு தீர்வுக்கான அவசி யத்தை, விழிப் புணர்வை ஏற்படுத் தும் செயற்பாடுகளில் ஈடுபடுவது இன்று மிக முக்கியமானதாக எனக்குத் தோன்று கிறது. அனைத்துத் தரப்பினரும் சகிப்பின்மையை நீக்கி, திறந்த மன-தோடு விவாதிப்பதும் அற உணர் வோடுபோராட்டங்களை முன்னெடுப் பதும் விழிப்புணர்வு பரவுவதற்குத் தூண்டுதலாக அமையக்கூடும். அத்தகைய விழிப்புணர்விலிருந்து ஒரு படைப்பூக்கம் கொண்ட தீர்வு இலங்கையில் ஏற்படும் என்று நம்ப ஆசைப்படுகிறேன்.



- நன்றி: ethuvarai.net

# பொருட்களின் விலை உயர்வால் அச்சம் கொள்ளத் தேவையில்லை



(கொழும்பு)

அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வைப் பற்றி எவரும் அச்சம் கொள்ளத் தேவையில்லை. தேர்தலில் வெற்றி பெறுவது எப்படி என்று எனக்குத் தெரியும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கிழக்கு மாகாணசபை உறுப்பினர்களுடனான சந்திப்பின் போது தெரிவித்துள்ளார்.

பொருட்களின் விலை உயர்வு தேர்தலைப் பாதிக்கும் என்று நினைக்கவேண்டாம். நீங்கள் சரியாக நடந்து, மக்கள் மனங்களை வென்றிருந்தால் விலை உயர்வுக்கு அச்சம் கொள்ள வேண்டிய அவசியமே இல்லை.

பொருட்களுக்கான விலைகள் இன்னும் உயரும். தேர்தலுக்காக பொருட்களின் விலைகளைக் குறைக்க முடியாது. கிழக்கு மாகாணசபையை ஜூனில் கலைத்தே தீருவேன். தேர்தல் திகதியை கிழக்கு முதலமைச்சருடன் பேச்சு நடத்தி தீர்மானிப்பேன். வடமத்திய மாகாண சபைத் தேர்தலை முற்கூட்டி நடத்தக்கூடாதென வட மத்திய மாகாண மேல் நீதிமன்று இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

இது தொடர்பாக ஆராய்ந்து வருகின்றேன். குறித்த இடைக்காலத் தடை உத்தரவை நீக்க முடியுமா என்பது குறித்து பரிசீலிக்கப்படும். அங்கும் தேர்தல் நடக்கும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

# புலிகளின் பிஸ்டல் குழு முன்னாள் உறுப்பினர் கைது

திவயின தகவல்



(கொழும்பு)

புலிகளின் பிஸ்டல் குழு, புலனாய்வு பிரிவின் முன்னாள் மேஜர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக திவயின செய்தி வெளியிட்டுள்ளது.

ஜீவன் என அழைக்கப்படும் 28 வயதான சுப்பையா கிருஷ்ணகுமார் என்ற நபரே கைதாகியுள்ளார்.

வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு எதிரில் சந்தேகிக்கும் வகையில் நடமாடிய நபரை கைதுசெய்து பொலிஸார் விசாரணை நடத்தியுள்ளனர். அந்த நபர் புலிகள் இயக்கத்தில் இருந்துள்ள தகவல் இதன் போது தெரியவந்துள்ளது.

தான் புலிகளின் பிஸ்டல் குழுவில் இருந்த போது, மூன்று இராணுவ அதிகாரிகளையும், மூன்று பொலிஸ் அதிகாரிகளையும் சுட்டுக்கொன்றதாக வாக்குமூலமளித்துள்ளார்.

தனது உத்தரவின் பேரில் நந்திக்கடல் பகுதியில் பெருந்தொகையான ஆயுதங்கள் புதைக்கப்பட்டதாகவும் கூறியுள்ளார். கைதுசெய்யப்பட்டுள்ள நபர் குறித்து வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர் எனவும் திவயின செய்தி வெளியிட்டுள்ளது.

# துமிந்தவின் மண்டையில் பாரிய சத்திர சிகிச்சை

(கொழும்பு)

உள்ளூராட்சி தேர்தலின் போது முல்லேரியாவில் இடம்பெற்ற பரஸ்பர துப்பாக்கிச் சூட்டில் படுகாயமுற்று சிங்கப்பூர் எலிசபெத் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வரும் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவின் மண்டையோட்டில் பாரிய சத்திர சிகிச்சையொன்று எதிர்வரும் 19 ஆம் திகதி மேற்கொள்ளப்படவிருக்கின்றது.

தற்போது மண்டையோட்டில் ஒரு பகுதி அகற்றப்பட்ட நிலையில் இருக்கும் துமிந்த சில்வாவிற்கு 5 மணித்தியாலம் தொடர்ச்சியாக இடம் பெறவிருக்கும் இந்த சத்திர சிகிச்சை குளோனிங் தொழில்நுட்ப முறையில் நடைபெறவிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.



கட்புல அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழக மாணவர்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்று நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்றது. செயல்முறைத் தேர்வு இன்றி மாணவர்கள் இணைத்துக்கொள்ளப்படுகின்றமையை நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கை உள்ளிட்ட பல விடயங்களை வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

# தாயிடம் பால் குடித்துக்கொண்டிருந்த குழந்தையைக் கடத்தியவர் தேடல்

(கொழும்பு)

அமைச்சரிடம் பணியாற்றுபவர் எனக் கூறி பால்குடித்துக் கொண்டிருந்த ஒரு வயது குழந்தையைக் கடத்திச் சென்ற நபரை பொலிஸார் தேடி வருகின்றனர்.


தாயிடம் பால் குடித்துக் கொணடிருந்த குழந்தையை சந்தேக நபர் பலவந்தமாக பறித்துக் கொண்டு மோட்டார் சைக்கிளில் வந்த மற்றுமொருவருடன் தப்பிச் சென்றதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குழந்தையின் பெரியப்பாவே குழந்தையைக் கடத்தியுள்ளதாக விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

தான் அமைச்சர் ஒருவரிடம் பணியாற்றுபவர் எனக் கூறி பொலிஸாரையும் ஏமாற்றியே குழந்தையைக் கடத்திச் சென்றுள்ளார்.

வாரியபொல மல்வானை டயஸ்வத்தச் சேர்ந்த நபரே கடத்தலில் ஈடுபட்டுள்ளர். இதன் போது குழந்தையின் தாய் தனது பிறந்த வீட்டில் இருந்துள்ளார். இவர் விவாகரத்து கோரி வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

குழந்தை யாரிடம் வளர வேண்டும் என்ற தீர்ப்பு வழங்கப்படவுள்ள இந் நிலையிலேயே குழந்தை கடத்தப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். குழந்தையை கடத்திய நபரைக் கைதுசெய்வதற்குத் தேவையான நடவடிக்கையை மேற்கொண்டுவருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# உயர்தர மாணவர்களுக்கு கனடாவின் புலமைப் பரிசில்

A Light to Education

Sri Lanka - Canada Scholarship Foundation

(கொழும்பு)

உயர்தரம் பயிலும் மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்க இலங்கை - கனடா மாணவர் நிதியம் விண்ணப்பங்களைக் கோரியுள்ளது. குறைந்த வருமானம் பெறும் குடும்ப மாணவர்களிடமிருந்தே இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

2011 ஆம் ஆண்டு சாதாரண தரத்தில் 5 பாடங்களில் ஏ சித்தி பெற்ற மாணவர்களும் புலமைப் பரிசிலுக்கு விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பத்திலுள்ள விபரங்களைப் பூர்த்தி செய்து அதனை கிராம சேவையாளரிடம் உறுதிப்படுத்த வேண்டும்.

உறுதிப்படுத்திய விண்ணப்ப ஆவணத்தை வரும் 25 ஆம் திகதிக்குள் கீழ் காணும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும் என இலங்கை கனடா மாணவர் நிதியம் கோரியுள்ளது.

இணைப்புச் செயலாளர்,
இலங்கை - கனடா மாணவர் நிதியம், தபால் பெட்டி இலக்கம் 1163, கொழும்பு.

என்ற முகவரிக்கு விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

மாதிரி விண்ணப்ப படிவங்களை http://www.slcsf.org/ என்ற இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் நிதியம் தெரிவித்துள்ளது.

# இஸ்ரேல் தூதரகம் திறப்பதற்கு ஜம்இய்யத்துல் உலமா கண்டனம்

(கொழும்பு)

இஸ்ரேலில் தூதரகம் திறக்கப்படுவதை அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா வன்மையாகக் கண்டித்துள்ளது.

ALL CEYLON JAMIYYATHUL ULAMA

இந்தச் செயற்பாடு ஆழ்ந்த வேதனையளிப்பதாகவும் தெரிவித்துள்ளது. இது குறித்து அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா விடுத்துள்ள அறிக்கையில்,

இஸ்ரேல், பலஸ்தீனர்களை அநியாயமாகக் கொன்று குவிப்பது மாத்திரமன்றி, முஸ்லிம்களின் புனிதத் தலங்களில் ஒன்றான பைத்துல் முக்தஸை ஆக்கிரமித்துள்ள நிலையில், இலங்கைக்கான இஸ்ரேலிய தூதரகம் திறக்கப்படுவதானது, முஸ்லிம் சமூகத்தை மிகவும் வேதனை கொள்ளச் செய்கிறது. முஸ்லிம் அரபு நாடுகளோடு நட்புறவு கொண்டுள்ள நம் நாட்டுக்கு இச்செயல் ஆரோக்கியமானதல்ல என்பதாகவே ஜம்இய்யத்துல் உலமா கருதுகிறது.

பலஸ்தீன நட்புறவுச் சங்கத்தின் ஸ்தாபகத் தலைவரான மாண்புமிகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்கள் இவ்விடயமாக நல்லதொரு முடிவை எடுக்க வேண்டுமென அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா கேட்டுக் கொள்கிறது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இந்துக் கோயிலை கட்டுவதற்கு நிதியுதவி வழங்கியுள்ளோம்

நாடாளுமன்ற உறுப்பினர்
எல்லாவல மேதானந்த தேரர்



(கொழும்பு)

நாம் அனைவரையும் ஒன்றாக மதிக்கின்றோம் இந்துக் கோயிலை கட்டுவதற்கு நான் கூட நிதியுதவி வழங்கியுள்ளேன். தமிழ் கூட்டமைப்போ பொய்யான பிரசாரங்களை மேற்கொண்டு அரசியல் இலாபம் தேடுவதற்கு முயற்சிக்கின்றது என நாடாளுமன்ற உறுப்பினர் எல்லாவல மேதானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு மாகாணங்கள் தமிழரின் தாயகம் என்பது அப்பட்டமான பொய். இப் பிரதேசங்களில் வாழ்ந்து வந்த சிங்களவர்கள் இன்று ஏதுமற்றவர்களாக இருக்கின்றனர். வடக்கு கிழக்கு தமிழர்களின் தாயகம் என்பதனை உங்களால் நிரூபிக்க முடியுமா? இலங்கையின் எந்தவொரு பகுதியையும் உங்களின் தாயகம் என்று கூற முடியாது. தமிழர்கள் இந்த நாட்டில் வாழ்பவர்கள்.

வடக்கு, கிழக்கில் கோவிலை உடைத்து கட்டப்பட்ட ஒரு பௌத்த விகாரையை கூற முடியுமா? தமிழர் பகுதிகள் சிங்களவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன என்பது அப்பட்டமான பொய்யாகும். சிங்களவர்களின் பகுதிகள் தான் ஆக்கிரமிக்கப்படுகின்றன.

திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் உள்ளிட்ட புகழ் பெற்று விளங்கும் அனைத்து இந்துக் கோயில்களும் பௌத்த விகாரைகள் இடிக்கப்பட்டு அதன்மீதே கட்டப்பட்டுள்ளன. நாம் இந்துக் கோயிலை இடித்து அழித்தோமா?

ஏறாவூரில் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் இணைந்தே பௌத்த விகாரையை நிர்மாணித்தனர். தமிழர்களே புத்தர் சிலைகளை தலையில் தூக்கி சென்றனர என்பதனால் இன, மத, பேதமின்றி சகலரும் ஐக்கியப்பட்டு கைகோர்த்து அபிவிருத்தி செய்வதற்கு ஐக்கியப்படுவோம். இது உங்களுடையதும் எங்களுடையதும் நாடாகும் என்பதனால் சகோதரர்கள் போல் செயற்படுவோம் என எல்லாவல மேதானந்த தேரர் குறிப்பிட்டுள்ளார்.



# புதியன கண்டபோது...



தமிழவன் ஒருமுறை சொன்னார், இந்திய மொழிகளிலேயே அவர்தான் அமைப்பியலை அறிமுகம் செய்தவர் என்று. அதன் பயன்மதிப்பு, உண்மை என்பதைவிட அதன் புதுமையே முக்கியமாக இருக்கும் மனநிலை இங்கே தெரிகிறது.

தமிழவன் நூல்களில் அவர் அப்போது பேசும் சிந்தனைகளுக்கு கொஞ்சம் முன்னால் உள்ள சிந்தனைகளை எல்லாம் "பாடாவதி" சிந்தனை என்று முத்திரை குத்துவதைக் காணலாம். சமீபத்தில் எம்.ஜி.சுரேஷ் டில்யூஸ்-கத்தாரி பற்றி எழுதிய சிறு நூலில் அவர்கள் ஃப்ராய்டை "கொட்டிக்கவிழ்த்து" விட்டதாக எழுதியிருந்தார். இதுவும் ஆகப்புதிதே உண்மை என்ற எளிமையான மனநிலையின் வெளிப்பாடே.

தத்துவத்தில் உள்ள எக்கருத்தும் நிருபணம் சார்ந்தது அல்ல. ஆகவே எதுவுமே "காலாவதியாகி" விடுவதில்லை. மறுக்கப்படாத கருத்தே தத்துவத்தில் இல்லை. முழுமையாக நிராகரிக்கப்பட்ட கருத்துக்கள் கூட அழிந்துவிடுவதில்லை. நவீனத்துவ காலகட்டத்தில் முற்றிலுமாக நிராகரிக்கப்பட்ட நீட்சே மற்றும் ஹெகல் போன்றவர்கள் பின் நவீனத்துவ காலகட்டத்தில் மீண்டெழுந்து வந்தார்கள்.

சிலசமயம் கருத்துருவங்கள் காலப்போக்கில் படிமங்களாக மாறி மீண்டு வரக்கூடும். ஈடிபஸ் கொம்பெளெக்ஸ் பிற்காலத்தில் ழாக் லக்கான் போன்றவர்களால் உளவியல் சார்ந்த ஒரு உருவகமாகவே கையாளப்பட்டது.

இன்னும் ஒன்று உள்ளது. தத்துவத்தின் நடைமுறையில் உள்ள எந்த சமகாலக் கருத்துக்கும் முதல் தொன்மைக்காலத்திலேயே கருத்து சார்ந்த ஒரு வேர் இருக்கும். தத்துவத்தில் முற்றிலும் புதிய கருத்தே சாத்தியமில்லை

என் நோக்கில் தத்துவக் கருத்துக்களின் பெறுமதியை அறியும் மதிப்பீடுகள் சில உள்ளன. அவற்றை ஒன்பது விதிகளாகவே சொல்கிறேன்.

**1.** தர்க்கபூர்வமாக சரியாக இருப்பதனாலேயே ஒரு கருத்து உண்மையாக இருக்கவேண்டும் என்பதில்லை. அது தர்க்கபூர்வமான உண்மை மட்டுமே.

**2.** ஒரு சரியான கருத்து அதற்கு நேர் எதிரான கருத்தை தவறாக ஆக்க வேண்டும் என்பதில்லை. இரண்டுமே சரிகளாக இருக்கலாம். அவை வெவ்வேறு தளங்களைச் சேர்ந்தவையாக இருக்கலாம்.

3. இலக்கியம் ஒருபோதும் தத்துவத்தை முன்வைப்பதில்லை. தத்துவத்தின் சாயலையே அது முன்வைக்கிறது. தத்துவ சிந்தனையை உருவாக்கும் மனநிலைகளை வாசகனில் அது எழுப்புகிறது

4. ஓர் இலட்சியவாதக் கருத்து நடைமுறைத்தளத்தில் ஓரளவேனும் செல்லுபடியாக வேண்டும். முற்றிலும் இலட்சியவாதத்தனமாக உள்ள கருத்து என்பது பெரும்பாலும் பயனற்றதே.

5. ஒரு திட்டவட்டமான கருத்தை அருவமாக்கியும் ஓர் அருவமான கருத்தை திட்டவட்டமாக ஆக்கியும் அதன் உண்மை மதிப்பை உணர முடியும்.

6. ஓர் நடைமுறைக் கருத்து ஒருபோதும் திட்டவட்டமாக - முடிவானதாக இருக்கலாகாது. அது சற்றேனும் ஐயத்துக்கும் மாறுதலுக்கும் இடமளிக்கும்போது மட்டுமே அது நேர்மையானதாக இருக்க முடியும்.

7. ஒரு மீபொருண்மைக் (மெடஃபிஸிகல்) கருத்து கவித்துவம் மூலம் நிலைநாட்டப்படாமல் அதிகாரம் அல்லது நம்பிக்கை மூலம் நிலைநாட்டப்படுமென்றால் அதை முற்றாக நிராகரிப்பதே முறை.

8. தத்துவத்துடன் எப்போதுமே நேரடியான அதிகாரம் தொடர்பு கொண்டுள்ளது. பெரும்பாலும் தத்துவ விவாதங்கள் அதிகாரங்கள் நடுவே உள்ள விவாதங்களே. ஆகவே நட்பான தளம் இல்லாவிட்டால் ஒருபோதும் தத்துவ விவாதம் செய்யலாகாது. அது உடனடியாக தத்துவத்தின் தளத்தை விட்டு வெளியே சென்றுவிடும்.

9. அன்றாட வாழ்க்கைக்கு எவ்வகையிலேனும் பயனளிக்குமா என்ற கேள்வி தத்துவத்தின் பெறுமதியைப் புரிந்துகொள்ள மிகமிக உதவியானது.

# "ஒபாமா வீட்டுக்குப் போகலாம்"

"அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் உங்களைத் தோற்கடித்து விடுவேன். வெள்ளை மாளிகையை விட்டு உங்கள் வீட்டுக்குச் செல்லத் தயாராகுங்கள்!" பராக் ஒபாமாவுக்கு இவ்வாறு அறிவுரை கூறியிருப்பவர் நவம்பர் மாதம் நடைபெறவிருக்கும் ஜனாதிபதி தேர்தலில் குடியரசுக் கட்சி சார்பில் வேட்பாளராகப் போட்டியிடப் போகும் மிட் ரோம்னி.

பிரிகாம் யங் பல்கலைக் கழகத்தில் சட்டமும் ஹாவர்டில் எம்.பி.ஏ. வும் முடித்து விட்டு, நிர்வாகவியல் ஆலோசகராகத் தன் பணியைத் தொடங்கிய மிட் ரோம்னி, பெய்ன் அன்ட் கம்பெனி என்னும் நிறுவனத்தின் தலைமை அதிகாரியாகப் பொறுப்பேற்றார். நெருக்கடியில் தத்தளித்துக் கொண்டிருந்த அந்நிறுவனத்தை மீட்டெடுத்ததோடு, பெய்ன் கப்பிடல் என்னும் தனியார் முதலீட்டு நிறுவனத்தைத் தொடங்கி, அதை அமெரிக்காவின் முன்னணி வெற்றி நிறுவனமாக மாற்றியவர்.

தந்தை ஜோர்ஜ் ரோம்னி மிச்சிகனில் கவர்னராக இருந்ததால் அவர் வழியில் மிட் ரோம்னியும் அரசியலில் அடியெடுத்து வைத்தார். 2003 தொடங்கி நான்கு ஆண்டுகள் மசாசூசெட்ஸ் மாகாண கவர்னராக பதவி வகித்தார். 2008இல் நடைபெற்ற குடியரசுகட்சிக்கான வேட்பாளர் தேர்தலில் அரிசோனா செனட்டர் ஜோன் மெக்கெயினுடன் போட்டியிட்டு தோற்றார். பராக் ஒபாமா பதவியேற்றது முதல், தனக்கான ஆதரவு வட்டத்தை விரிவாக்கிக் கொள்ளும் முயற்சியில் மும்முரமாக இறங்கிவிட்டார்.

பெருகி வரும் அரசாங்கத்தின் கடன், தவறான வழியில் அமெரிக்காவை வழிநடத்திச் சென்றது ஆகியவை ஒபாமாவின் முக்கிய தவறுகள் என்கிறார் ரோம்னி. கடந்த 4 ஆண்டுகளில் ஒபாமா சாதித்தது எதுவும் இல்லை. அமெரிக்காவின் நிதி நிர்வாகத்தைச் சீராக்கி சர்வதேச அரங்கில் அமெரிக்காவின் பெருமிதத்தை நிலைநாட்ட அரசியல் அனுபவத்தோடு சேர்ந்து நிதி மேலாண்மையும் தேவை. எனவே, இரு துறைகளிலும் முத்திரை பதித்த தன்னை மக்கள் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுப்பார்கள் என்பது மிட் ரோம்னியின் நம்பிக்கை.

சர்ச்சைகள் இல்லாமல் இருக்குமா? சட்டம் பயில்வதற்கு முன்னால் பிரான்ஸில் மார்மோன் மிஷனரியாக 2 ஆண்டுகள் இருந்திருக்கிறார் மிட் ரோம்னி. தன்னை ஒரு கிறிஸ்தவன் என்றும் அவர் அடையாளப்படுத்திக் கொள்கிறார். ஆனால் அமெரிக்க தேவாலயங்களின் ஆசீர்வாதம் அவருக்குக் கிடைக்குமா என்பது சந்தேகம்தான். அவர்களைப் பொறுத்தவரை மார்மோன்கள், கிறிஸ்தவம் சார்ந்த வழிபாட்டு மரபைக் கடைப்பிடிப்பவர்கள்தானே தவிர, கிறிஸ்தவர்கள் அல்லர்.

ஆனால், மிட் ரோம்னி இது குறித்து அஞ்சுபவராகத் தெரியவில்லை. ஒபாமாவும் நம்பிக்கையுடன்தான் இருக்கிறார். "மிட் ரோம்னி அமெரிக்காவை கடந்த காலத்துக்குத்தான் அழைத்துச் செல்லத் துடிக்கிறார்!" என்று பதிலளித்திருக்கிறார் ஒபாமாவின் செய்தித் தொடர்பாளர். ஆக ஒபாமா, மிட் ரோம்னி கருத்து யுத்தம் மும்முரமாகத் தொடங்கிவிட்டது!



# காவி உருவங்கள்

- ஆர். ஹரிஹரன்



காவி என்றாலே சாந்தம், ஒழுக்கம், தியாகம், பிரம்மச்சரியம், தெய்வீக வழிபாட்டின் உச்சம் மற்றும் மனித வாழ்க்கையின் நெறிமுறைகளைப் போதித்தல் போன்ற மென்மையான நடவடிக்கைகளேயாகும். ஆனால் தற்போது காவிகள் செய்யும் சேட்டைகள் கள்ளுக்குடித்த குரங்குக்கூட்டம் செய்யும் அட்டகாசத்தையும் மிஞ்சிவிட்டது!

பதினைந்து ஆண்டுகளுக்கு முன் பிரேமானந்தா என்ற சாமியார் கொலை, கொள்ளை, கற்பழிப்பு வழக்குகளில் கைதாகி பல ஆண்டுகாலம் கம்பிகளுக்கு பின்னாலேயே காலம் தள்ளிய அக் காவிவரலாற்றை யாரும் மறக்க இயலாது.

இப்போதைய நித்யானந்தாவும் பாலியல் வழக்கில் அம்பலப்பட்டு கைதாகி ஜாமீனில் உள்ளார். அவர் மீதான கிரிமினல் வழக்கும் நிலுவையில் உள்ளது. இந்நிலையில் மதுரை ஆதீனத்தின் இளைய மடாதிபதியாக முடிசூட்டப்பட்டுள்ளார். இவ்விழா மதுரை ஆதீனத்தால் அரசுவிழா போன்று நடத்தப்பட்டுள்ளது.

டில்லி பாபா ராம்தேவ் என்ற காவிச்சாமியார் மக்களால் தேர்வு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களை கொலைகாரர்கள், கொள்ளைக்காரர்கள் என்று வர்ணித்துள்ளார். இந்த சுடிதார் சாமியார் மீதும் பல வழக்குகளை டில்லி பொலிஸார் பதிவு செய்துள்ளனர்.

காவிச்சாமியார்கள் போதிக்கும் ஒழுக்கக் கட்டுப்பாடுகள் மக்களுக்கு மட்டுமே, அது தங்களுக்கு பொருந்தாது என்ற முறையில் இவர்களது வாழ்க்கையை இராஜபோகமாக அமைத்துக் கொள்கிறார்கள். குடிசையில் வாழ்ந்தவர்கள், மடங்களின் முதலாளிகளாக மாறி, மடாதிபதிகள் என்று பட்டங்களை சூட்டிக் கொண்டு தனி இராஜ்யம் உருவாக்கி, மக்களை ஏமாற்றும் காவிவில்லன்களாக அரசியல் பின்னணியோடு வலம் வருகிறார்கள்.

இத்தகைய காவிச்சக்கரவர்த்திகள் அனைவருமே பெருமுதலாளிகள், நிலப்பிரபுக்களின் பரிபூரணமான பிரதிநிதிகளே! மக்களும், உழைப்பாளிகளும் தங்கள் பிரச்சினைகளிலிருந்து திசைதிருப்பப்படுவதற்காகவே உருவாக்கப்பட்ட உருவங்கள்தான் இவர்கள் என்பதை மக்கள் மறந்துவிடக்கூடாது!

மத உணர்வுகளை மதிப்பதில் தவறில்லை. அதேவேளையில் அதற்கு மதம் பிடிக்கின்றபோதும், பாதை மாறுகின்ற போதும் வைத்தியம் செய்ய வேண்டிய பணி மக்களுடையதே என்பதையும் சேர்த்துப் பார்க்க வேண்டும்.

# உன்னுடன் நீ!



தவத்திரு சின்மயாநந்தர் ஒரு தடவை சொன்னது வருமாறு: "நீ எங்கு சென்றாலும் கண்ணனையே அழைத்துக் கொண்டு செல்கிறாய்"

நல்ல சொற்றொடர் - சிந்தித்துப் பார்க்க வேண்டியவொன்று. வேறொன்றும் ஞாபகத்துக்கு வந்தது.


"நீ எங்கு சென்றாலும் உன்னையே அழைத்துக் கொண்டு செல்கிறாய்"

இது எமர்சன் சொன்னது. அவர் பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் (1802 - 1883)

மேற்படி எமர்சனின் சொற்றொடரை காலஞ்சென்ற க.நா.சு. அவர்கள் மிகவும் விரும்பியுள்ளார் என்று சொல்லலாம். தனது சில கட்டுரைகளிலும், "ஒரு நாள்", "தாமஸ் வந்தார்" போன்ற நாவல்களிலும் பயன்படுத்தியிருக்கிறார். ஒரு நாள் நாவலில் எமர்சனின் பெயரைக் குறிப்பிட்டே சொல்கிறார். தாமஸ் வந்தார் நாவலில் வாதூலனின் படிக்காத அம்மா இதைச் சொல்வதாக வந்த போது "அப்படிப்பட்ட பெண்மணி இம்மாதிரிச் சிந்தனையைக் கொண்டிருக்க முடியுமா?" என்று கேட்டதும் "ஒரு வேளை இந்த சொற்றொடர் பற்றி நினைத்துக் கொண்டிருந்ததுதான் அதை எழுதியதற்கு காரணமாயிருக்கும்" என்று க.நா.சு. கூறினார்.

- மா. அரங்கநாதன்.

# ஐ.பி.எல். காட்சிகள்!



1. **இ**துவும் ஐ.பி.எல். தான்! பொப் பாடகி கேட்டி பெரியுடன் சென்னை சுப்பர் கிங்ஸ்-க்காக விளையாடும் அவுஸ்ரேலிய வீரர் பொலிஞ்சர்.




2. **எ**ப்படி சென்னையைச் சேர்ந்த நடிகர் சித்தார்த் ஹைதராபாத் டெக்கான் சார்ஜருக்கு ஆதரவு தெரிவிக்கிறாரோ அதுபோல ஹைதராபாத்தைச் சேர்ந்த சானியா மிர்சா புனே வோரியர்ஸ் அணியின் ஆதரவாளர். காரணம் கணவர் சொயிப் மலிக் புனே வோரியர்ஸ் அணிக்கு ஒப்பந்தமாகியிருக்கிறார். ஆனால் இன்னும் எந்தப் போட்டியிலும் விளையாடவில்லை. விளையாட வாய்ப்பும் அரிதே. ஏனென்றால் பிரபல வெளிநாட்டு வீரர்களை அதிகளவில் கொண்ட அணியாக விளங்குவது கங்குலி தலைமையிலான வோரியர்ஸ்தான்.







3. **ஐ**.பி.எல்-லில் அதிக ஓட்டங்களைப் பெற்றிருப்பவருக்கு ஒறேஞ் வண்ணத் தொப்பி அணிவதற்கு வழங்கப்படுகிறது. அதிக விக்கெட்களை வீழ்த்தியவருக்கு ஊதா வண்ணத் தொப்பி வழங்கப் படுகிறது. அதுபோல அம்பை யரை வசைபாடி அதிகமுறை அபராதத் தொகை செலுத்துப வருக்கும் ஏதோ ஒரு வண்ணத் தொப்பி வழங்கலாம். இங்கே இதுவரை அதிக அபராதம் செலுத்திய மும்பை அணியைச் சேர்ந்த முனாவ் பட்டேல்.



4. **இ**துவரை நடந்த போட்டிகளில் ஆக்ரோசமான வெற்றிக் கொண்டாட்டத்தை வெளிப்படுத்திய வீரராக கங்குலியை ரசிகர்கள் தேர்வு செய்துள்ளனர். டில்லி அணியைச் சேர்ந்த கெவின் பீட்டர்சன் விக்கெட்டை வீழ்த்திவிட்டு ஆக்ரோசமாக மைதானத்தையே ஒரு சுற்றுச் சுற்றி வந்தார் “தாதா” என்று ரசிகர்களால் அழைக்கப்படும் கங்குலி. இரண்டாவது இடம் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியைச் சேர்ந்த பிராட் ஹொக்குக்கு கிடைத்துள்ளது. இருவருமே 40 வயதானவர்கள். அவரவர் நாட்டு அணியிலிருந்து ஓய்வு கொடுக்கப்பட்டவர்கள்!



5. **மு**ம்பை இண்டியன்ஸ் அணிக்காக விளையாடும் மேற்கிந்திய வீரர் கிரன் பொலார்ட் தனது மகனுடன் மைதானத்தில்!



6. **ஐ**.பி.எல்-லுக் காக நூற்றுக் கணக்கில் வெளிநாட்டு வீரர்கள் மட்டும் இறக்கப்படவில்லை. சியர் லீடர்ஸ் எனப்படும் உற்சாக மங்கையரும் பல்வேறு நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறார்கள். சியர் லீடர்ஸ் இல்லாமல் ஐ.பி.எல். இல்லை என்றாகிவிட்டது.

# இந்தியா சுற்றிய மெட்டு!

“**ச**ங்கத்தில் பாடாத கவிதை... அங்கத்தில் யார் தந்தது...” தமிழில் புலமைப்பித்தன் எழுதி இளையராஜாவும் ஜானகியும் பாடிய பாடல். இந்தியாவின் அனைத்து மொழிகளிலும் மக்களைத் தனக்கு அடிமையாக்கி வைத்துள்ள இந்த அற்புத மெட்டை, முதன் முதலாக ராஜா இசைத்துக் காட்டிய போது, தன்னுடய படத்திற்கு இந்தப் பாடல் வேண்டாம் என்று நிராகரித்திருக்கிறார் இயக்குநர் பாக்கியராஜ்.

“தூறல் நின்னு போச்சு” படத்தின் டுயட்-டிற்காக மெட்டமைப்பில் கூடியிருந்தபோது, இயக்குநர் பாக்கியராஜ், கேட்ட தருணத்திலயே தனக்கு இந்த பாடல் வேண்டாம் என்று சொல்லி இருக்கிறார். அவரது துணை இயக்குநராக இருந்த பாண்டியராஜன், “அந்தப் பாடல் நன்றாக இருகிறது. அதையே நாம் பயன்படுத்தி கொள்ளலாம். வேண்டாம் என்று சொல்லாதீர்கள்” என்று கட்டாயப்படுத்தி இருக்கிறார். “பாடல் நன்றாக இருப்பது உண்மைதான்” ஆனால் அது தூறல் நின்னு போச்சு படத்துக்கு சரியாக வராது... என்று ஒரேடியாக நிராகரித்திருக்கிறார் பாக்யராஜ்.

அந்த மெட்டை மலையாளப் படத்தில் 84 ஆம் வருடம் பாலுமகேந்திரா பயன்படுத்தியதும், அதே வருடம் தமிழில் “ஆட்டோ ராஜா”வில் உபயோகப்படுத்தியதும், பின் தெலுங்கில் பயன்படுத்தி, அந்தத் தெலுங்குப் படத்தின் தமிழ் டப்பிங்கிலும் இடம்பிடித்து, ஹிந்திக்குப் போய் அங்கும் இருமுறை வந்து..... இந்த மெட்டு ஒரு “இந்தியா சுற்றிய வாலிபன்”.



சங்கத்தில் பாடாத கவிதை.... (தமிழ்)
தும்பி வா தும்பகுடத்து.... (மலையாளம்)
ஆகாசம் ஏனாடிதோ.... (தெலுங்கு)
நீர்வீழ்ச்சி சூடானதே.... (ஆகாசம் ஏனாடிதோ.... பாட்டின் தமிழ் டப்பிங்)
கும் சும் கும்.... (ஹிந்தி)

ஹிந்தியில் அமிதாப்பச்சனின் “பா”-படத்திலும் மற்றொரு பிரபலமான படத்திலும் பயன்படுத்தப் பட்டிருக்கிறது.

# அர்ஜுனை முந்திய நாய்!

**க**ன்னடப்படம் ஒன்றில் ஒரு நாயகனும் ஒரு நாயும் அட்டகாசமாக நடித்ததைக் கண்ட இராம.நாராயணன் அதே படத்தை தமிழில் இயக்கலாம் என முடிவு செய்தார். அதே நாயைத் தமிழிலும், நாயகனாக விஜயகாந்தை நடிக்க வைக்க திட்டமிட்டார். விஜய்காந்த் நடிப்பதற்கு அப்போது அவரது செயலராக இருந்த இப்ராஹீம் ராவுத்தர் பெரிய தொகையைக் கேட்டிருக்கிறார்.

இதற்கு அந்த கன்னட நாயகனையே நடிக்க வைத்து விடலாம் என எண்ணி அவரையே தமிழிலும் அறிமுக நடிகராக நடிக்க வைத்தார் இராம.நாராயணன். அந்தப் படத்தின் பெயர் நன்றி. அந்த நடிகரின் பெயர் அர்ஜுன், அந்த நாயின் பெயர் பிரௌணி.

இந்த படத்துக்கு கதாநாயகன் அர்ஜுனை விட நாய்க்கு அதிக சம்பளம் கொடுக்கப்பட்டதாம். படத்தின் வெற்றிக்கு நடிகர்கள் அல்ல மிருகங்களே முக்கியம் என்கிற இராம.நாராயணன் /போமுலா ஆரம்பமான படம்.





# அடுத்த வீட்டு அஞ்சலி!

**அ**ஞ்சலிதேவி என்றாலே அழுது வடியும், கணவருக்காக கதறி உருகும் ஒரு உருவம்தான் நினைவுக்கு வந்து கொண்டிருந்திருக்கிறது அந்தக் காலத்தில். இப்போதைய தொலைக்காட்சி சீரியல் நடிகைகளைப் போல.

அதை மாற்ற எண்ணிய அஞ்சலி தேவியின் கணவர் ஆதி நாராயண ராவ் - அஞ்சலிக்காக தயாரித்த ஸ்பெஷல் படம்தான்






“அடுத்த வீட்டு பெண்”. கதாநாயகன் டி.ஆர். ராமச்சந்திரன். அடுத்தவர் டணால் தங்கவேலு. தங்கவேலு பாத்திரத்தில் முதலில் சந்திரபாபுதான் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். ஆனால் சந்திரபாபு திடீரென அதிக சம்பளம் கேட்கவே தங்கவேலுவை நடிக்க வைத்துள்ளார் ஆதி நாராயண ராவ்.

கண்ணாலே பேசிப் பேசிக் கொல்லாதே, மாலையில் மலர்ச் சோலையில், வனிதா மணியே போன்ற P.B.ஸ்ரீநிவாஸ் குரலில் அமைந்த முத்தான பாடல்களுக்கு இசையமைத்திருந்தவரும் ஆதிநாராயணராவே.

# கமலும் கப்டனும்



**க**மல்ஹாசனும் விஜயகாந்தும் சேர்ந்து ஒரு படத்தில் நடித்திருக்கிறார்கள். ஒரே ஒரு படம்தான்...

“மனக் கணக்கு”. அதில் இருவருமே கதாநாயக வேடத்தில் இல்லை. இயக்குநர் வேடத்தில் ஒரே ஒரு காட்சியில் வருவார் கமல். விஜயகாந்த் நடன இயக்குநராக வருவார் அந்தக் காட்சியில்.

# எந்தத் தேர்தலையும் குழப்ப வேண்டாம்

## கட்சி உறுப்பினர்களுக்கு ரணில் பணிப்புரை

(கொழும்பு)

எதிர்காலத்தில் நடத்தத் திட்டமிட்டுள்ள எந்த தேர்தலையும் நடத்த முடியாதபடிக்கு நீதிமன்ற உத்தரவைப் பெறுவதில் இருந்து விலகி இருக்குமாறு ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்களிடம் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

வடமாகாணத்தில் தேர்தல் நடத்துவதை தடுக்கும் வகையில், அந்த மாகாண சபையின் ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர் ஒருவர் நீதிமன்ற நடவடிக்கை எடுத்தமையைத் தொடர்ந்தே, எதிர்க்கட்சித் தலைவர் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.



எந்தத் தேர்தலுக்கும் முகம் கொடுக்க கட்சியின் உறுப்பினர்கள் தயாராக இருக்க வேண்டும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை ஐக்கிய தேசிய கட்சியின் சப்ரகமுவ, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களின் அனைத்து தொகுதி அமைப்பாளர்களும் கொழும்பு கட்சித் தலைமையகத்துக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

கட்சியின் தலைவர் ரணில்விக்ரமசிங்க தலைமையில் நடைபெறவுள்ள கூட்டம் ஒன்றில் கலந்துக்கொள்வதற்காக அவர்கள் அழைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது இந்த மாகாணங்களில் இடம்பெறவுள்ள தேர்தல்கள் தொடர்பில் பேசப்படும் என கூறப்படுகிறது.

# பிளாஸ்ரிக் கைத்தொழிலை தரமுயர்த்த நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கையில் பிளாஸ்ரிக் கைத்தொழில் துறையை தரமுயர்த்த கைத்தொழில் வணிக துறை அமைச்சும், ஐக்கிய நாடுகள் கைத்தொழில் அபிவிருத்தி அமைப்பும் இணைந்து நடவடிக்கைகள் எடுத்துள்ளதாக அமைச்சர் ரிசாட் பதியூதின் தெரிவித்துள்ளார்.





உற்பத்தி தொழில்நுட்ப முன்னேற்றத்திற்கான சர்வதேச பிரதிநிதிகள் குழு நேற்றுமுன்தினம் அமைச்சரைச் சந்தித்தபோதே இதனைத் தெரிவித்தார். இத்துறைக்கு 1.75 மில்லியன் அமெரிக்க டொலர் ஆரம்ப கட்ட முதலீட்டை மேற்கொள்ளவுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இலங்கையில் ஆண்டொன்றுக்கு ஒரு இலட்சத்து 40 ஆயிரம் மெற்றிக் தொன் பிளாஸ்ரிக் பயன்படுத்தப்படுவதாக தெரிவித்த அமைச்சர், இலங்கையில் 400 கம்பனிகள் பிளாஸ்ரிக் பொருள் உற்பத்தியிலும் பதனிடலிலும் ஏற்றுமதியில் ஈடுபடுவதாக மேலும் தெரிவித்தார்.

# பவுஸர்களில் இருந்து எரிபொருளை விற்பனை செய்த குழு கைது

(கொழும்பு)

லங்கா ஐ.ஓ.சி. நிறுவனத்திற்கு எரி பொருட்களை ஏற்றிச் செல்லும் பவுஸர்களின் கொள்கலகளின் சீல்களை உடைத்து, மூன்றாம் தரப்புக்கு எரிபொருட்களை விற்பனை செய்துவந்த குழுவினரை விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர்.

கல்ஓயா பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட முற்றுகையின்போது இவர்கள் கைது செய்யப்பட்டனர். இரு பவுஸர்களிலிருந்து சுமார் 26,400 லீற்றர் எரிபொருளை இறக்கிக் கொண்டிருந்த 8 சந்தேக நபர்களை விசேட அதிரடிப் படையினர் கைது செய்தனர்.

மேற்படி எரிபொருளின் பெறுமதி சுமார் 40 இலட்சம் ரூபாவாகும். ஹபுகம, கொட்டேகம, அம்பாறை, கல் ஓயா, ஹட்டன் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களே கைது செய்யப்பட்டவர்களாவர். இச்சந்தேக நபர்களை பொலிஸாரிடம் விசேட அதிரடிப்படையினர் ஒப்படைத்துள்ளனர்.

# குற்றப்புலனாய்வுப் பிரிவினர் மன்னார் ஆயரிடம் விசாரணை

(கொழும்பு)

மன்னார் மறை மாவட்ட ஆயர் அதி.வணக்கத்திற்குரிய இராயப்பு ஜோசப் ஆண்டகையை, இலங்கை குற்றப்புலனாய்வு பிரிவினர் விசாரணை செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. கடந்த செவ்வாய் அன்று ஆயர் இல்லத்திற்குச் சென்ற குற்றப் புலனாய்வுப் பிரிவின் இரண்டு அதிகாரிகள் ஆயரிடம் விசாரணை நடத்தியுள்ளனர்.

ஜெனிவாவில் இலங்கை விவகாரம் சூடுபிடித்திருந்த சந்தர்ப்பத்தில் வடக்கு கிழக்கு சிவில் சமூக அமைப்புக்கள் சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கைகள் குறித்து ஆயரிடம் விசாரணை நடத்தப்பட்டுள்ளதாக ஆயர் இல்லத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசாங்கத்தின் தரவுகளுக்கமைய 2008 - 09 ஆம் ஆண்டுகளில் 146,679 பேர் காணாமல் போயுள்ளதாக ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை நல்லிணக்க ஆணைக்குழுவிடம் தகவல் வெளியிட்டிருந்தார்.

இதுகுறித்தும் ஆயரிடம் விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

அத்துடன், கொழும்பு குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு வருமாறும் ஆயர் அழைக்கப்பட்டுள்ளதாகவும் சில தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும், இந்தத் தகவல்களை ஆயர் இல்லம் உறுதிப்படுத்த மறுத்துவிட்டது.



# ரத்வத்தையின் அனுதாபத்தில் ஜனாதிபதி பங்கேற்பு

(கொழும்பு)

நாடாளுமன்றத்துக்கு நேற்று முன்தினம் வருகை தந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற முன்னாள் அமைச்சர அநுருத்த ரத்வத்தை மீதான அனுதாபப் பிரேரணையிலும் கலந்துகொண்டார்.

முன்னாள் அமைச்சர் அநுருத்த ரத்வத்தை மீதான அனுதாபப் பிரேரணை பிற்பகல் 2.30 மணி முதல் இடம்பெற்றது.

பிற்பகல் 4.10 மணி யளவில் சபைக்கு பிரவேசித்த ஜனாதிபதி சுமார் அரை மணிநேரம் சபையில் அமர்ந்து அனுதாபப் பிரேரணையில் தெரிவிக்கப்பட்ட உரைகளைச் செவிமடுத்தார்.

முன்னாள் அமைச்சர் அநுருத்த ரத்வத்தையின் அனுதாபப் பிரேரணையை செவிமடுக்க அவரின் குடும்ப உறுப்பினர்களும் நாடாளுமன்றத்திற்கு வருகை தந்திருந்தனர்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, முன்னாள் அமைச்சர் அநுருத்த ரத்வத்தையின் பாரியார் திருமதி காமன் ரத்வத்தை, நாடாளுமன்ற உறுப்பினர் லொஹான் ரத்வத்த, கண்டி மேயர் மஹேன் ரத்வத்தை ஆகியோருடன் உரையாடினார். இதன்போது அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.ஆர்.பி. சூரியப் பெரும ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# இயல்பு வாழ்வுக்கு திரும்பியோர் அச்சம் கொள்ளத் தேவையில்லை



(கொழும்பு)

முன்னாள் புலி உறுப்பினர்கள் மற்றும் புனர்வாழ்வு பெறாத உறுப்பினர்கள் பற்றிய தகவல்களை அறியவே தகவல்கள் பெறப்படுகின்றன. இருப்பினும், இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பியோர் தொபில் எதுவித அச்சமும் கொள்ளத் தேவையில்லை என மட்டக்களப்பு படைத்துறை தகவல்கள் தெரிவிதது்ளளன.

அத்துடன், குற்றச் செயல்கள் இடம்பெறாமல் தடுக்கும் நோக்கிலும், இதுவரையில் புனர்வாழ்வு பெறாதவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் புலிகள் இயக்கத்தில் இருந்து இதுவரையில் புனர்வாழ்வளிக்கப்படாதோர் கைது செய்யப்பட்டு புனர்வாழ்வளிக்கப்படவுள்ளதாக படை வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரை பிரதேசத்துக்குட்பட்ட பகுதிகளில் உள்ள புலி உறுப்பினர்கள் தொடர்பான விபரங்களை படையினர் திரட்டி வருவதுடன், அவர்களைப் புகைப்படம் எடுத்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த திங்கட்கிழமை தொடக்கம் படையினர் இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வாகரை, கதிரவெளி படைமுகாமில் இருந்து படையினர் இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும், முன்னாள் புலி உறுப்பினர்களின் வீடுகளுக்கு செல்லும் படையினர் அவர்களின் விபரங்கள் மற்றும் குடும்ப விபரங்கள், இயக்கத்தில் இருந்த காலப் பகுதி என்பனவற்றைப் பதிவு செய்து செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# ஆறு கிளைத் தென்னை இரு கிளைகளை இழந்தது





யாழ். வேலணைப் பகுதியில் அமைந்துள்ள தனியார் ஒருவரின் தென்னந்தோட்டத்தில் ஆறு கிளைகளைப் பரப்பி நிமிர்ந்து காட்சியளித்துப் பெருமளவு சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்த தென்னைமரம் அண்மையில் ஏற்பட்ட பலத்த காற்றினால் இரு கிளைகளை இழந்துள்ளது. (படம்: ஜனா)

3) இந்நூல் மூலமாக வாணியின் எவ்வாறான திறமைகளை வெளிப்படுத்தியிருக்க முடியும்?
4) சஞ்சிகைக்கும், கவிதை நூலிற்கும் இடையிலான வேறுபாடு 4 இனைக் குறிப்பிடுக.

03) கணினி மூலம் இன்றைய உலகின் வேலைகள் குறுக்கப்பட்டுள்ளன?
1) கணினியின் பயன்பாடு 5 இனைக் குறிப்பிடுக.
2) DTP இன் செயல் ஒழுகிங்கின் இயல்பு 4 இனைக் குறிப்பிடுக.
3) கணினியின் வெளியீட்டு (output) சாதனம் 4 இனைக் குறிப்பிடுக.
4) தரவுகளைச் சேமிக்கக் கூடிய உபகரணங்கள் எவை?

04) தொழில்நுட்ப வளர்ச்சியினால் இன்று தகவல் பரிமாற்றம் மிகவும் இலகுவாக்கப்பட்டுள்ளது?
1) தகவல் பரிமாற்ற சாதனம் சிலவற்றைக் குறிப்பிடுக.
2) மின்னஞ்சல் (e-mail) பயன்பாடு 3 இனைக் குறிப்பிடுக.
3) அண்மையில் பல தகவல்களை வெளியிட்டு வந்த இணையத்தின் பெயர் என்ன?
4) இணையத்தின் பயன்பாடு 4 இனைக் குறிப்பிடுக.

05) இலங்கையில் மூன்று மொழிகளிலும் பத்திரிகைகள் வெளிவந்துகொண்டிருக்கின்றனன.
1) தமிழ், சிங்கள, ஆங்கில பத்திரிகைகள் மூன்றின் பெயர்களைப் பெயரிடுக.
2) நவீன ஊடகம் பல வெளிவந்தபோதும் வாசகன் பத்திரிகையை நாடுவதற்கான காரணங்கள் எவை?
3) 'ஒவ்செற் லித்தோகிரபி' வர்ணங்கள் எவை?
4) அச்சிடலுக்காகப் பயன்படக்கூடிய கடதாசி வகைகள் எவை?

06) இன்றைய இளம் சமூகத்தினரை தமிழ்ச் சினிமா பெரிதும் கவர்ந்துள்ளது.
1) தென்னிந்தியாவில் எம் மாநிலங்களில் தமிழில் திரைப்படங்கள் வெளியிடுகின்றது?
2) இதிகாசங்களை வெளிப்படுத்தும் திரைப்படங்கள் எவை?
3) உமது பாடசாலையில் திரைப்படம் ஒன்றைத் தயாரிக்க உத்தேசித்துள்ளீர். அதற்காக எவ்வாறான கதைகளைத் தேர்ந்தெடுப்பீர்?
4) தமிழ்ச்சினிமா மூலமாக மக்களுக்கு எவ்வாறான படிப்பினை வெளிப்படுத்துகின்றது?

07) மலேரியா தினத்தை முன்னிட்டு உமது பாடசாலையில் சில செயற்றிட்டங்களை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளீர் எனின்,
1) மலேரியா தொடர்பாக எவ்வாறான முறையில் மக்களுக்குத் தெளிவுபடுத்தலாம்?
2) மலேரியா தொடர்பாக ஒரு சஞ்சிகை ஒன்றை விசேடமாக வெளியிட்டுள்ளீர் எனின், இத்தகவலை SMCR மூலம் விளக்குக.
3) மலேரியா தொடர்பாகத் தகவல் பெறக்கூடிய மூலங்களைப் பெயரிடுக.
4) நாளேடு ஒன்றுக்கு மலேரியா தொடர்பாக எவ்வாறான ஆக்கங்களைப் பிரசுரிக்க முடியும்?

08) இன்று சிறுவர், பெண்கள் பல வழிகளிலும் துஷ்பிரயோகத்திற்கு உட்பட்டு வருகின்றனர்.
1) துஷ்பிரயோகம் சிலவற்றைப் பெயரிடுக.
2) இன்றைய ஊடகங்கள் துஷ்பிரயோகம் தொடர்பாக அறிக்கையிடுவது சரியா? காரணம் கூறுக.
3) வெகுஜன ஊடகம் ஏற்படுத்துகின்ற தாக்கம் மூன்றினைப் பெயரிடுக.
4) மனித உரிமைகள் மூன்றினைப் பெயரிடுக.

09) தொடர்பாடல் என்பது மனிதனின் மிகவும் அத்தியாவசியமான பணியாகும்.
1) தொடர்பாடல் என்பதை விளக்குக.
2) தொடர்பாடலை மேற்கொள்ளும்போது ஏற்படக்கூடிய சூழல்சார்ந்த தடைகள் மூன்றனைக் குறிப்பிடுக.
3) தொடர்புசாதனம் எத்தனை வகை? அவை எவை?
4) வினைத்திறனான தொடர்பாடலை மேற்கொள்ள எவற்றைக் கடைப்பிடித்தல் வேண்டும்?

10) ஊடகவியலாளன் என்பவன் தனது உயிரைவிட மேலாகவே இத்தொழிலை மதிக்கின்றான்.
1) இலங்கையில் காணப்படும் ஊடகவியலாளர்களைப் பாதுகாக்கும் சங்கம் மூன்றினைப் பெயரிடுக.
2) இலங்கையில் கொல்லப்பட்ட மூன்று ஊடகவியலாளரின் பெயர்களைக் குறிப்பிடுக.
3) 1978 இல் யாப்பின் முக்கிய விடயம் மூன்றினைப் பெயரிடுக.
4) உமது பாடசாலையின் சஞ்சிகைக்கான உமது பிரதேச அபிவிருத்தி தொடர்பில் கட்டுரை வரையவுள்ளீர் எனின்; எவ்வாறான அபிவிருத்திகளைத் தேர்ந்தெடுப்பீர்?



# தொடர்பாடல் மற்றும் ஊடகவியல் கற்கை - 2012

பகுதி - I
1 மணி

ஆசிரியர் : கே.கே.மனோராசா

(க.பொ.த. (சா/த)

# கல்வி முரசு



01) ஆதிகால தொடர்பாடல் முறையாக அமையாதது?
1) தீ மூட்டல் 2) முரசறைதல்
2) செல்போன் 4) கூக்குரல் இடல்

02) 'SMCE' என்ற தொடர்பாடல் சூத்திரம் குறிப்பது
1) அனுப்புநர், ஊடகம், தகவல், பெறுநர் 2) அனுப்புநர், தகவல், அலைவரிசை, பெறுநர்
3) தொடர்புபடுபவர், தகவல், பெறுநர், ஊடகம் 4) தாமதம், தகவல், அலைவரிசை, அனுப்புநர்

03) விமலின் காலில் ஓர் முள் குத்தியது அவன் உடனே தனது காலினைத் தூக்கினான். இதற்கு உறுதுணையாக இருந்த தொடர்பாடல் எது?
1) ஆளிடைத் தொடர்பாடல் 2) வெகுஜனத் தொடர்பாடல்
3) அகத் தொடர்பாடல் 4) முறைசாரத் தொடர்பாடல்

04) கூட்டுத் தொடர்பாடலின் நன்மை என்ன?
1) புதிய புதிய தகவல் வெளிவரும் 2) எல்லோருடைய கருத்தும் பெறப்படும்
3) திறமைகளும் வளர்ச்சியடையும் 4) மேற்கூறிய எல்லாம்

05) கூட்டுத் தொடர்பாடலின் வகைகள் எவை?
1) முறைசார், முறைசாரா 2) முறைசார், ஒழுங்கமைப்பு
3) ஆளிடை, வெகுஜனம் 4) அகமுகி, புறமுகி

06) சைகைவழித் தொடர்பாடல் எது?
1) கண்ணசைத்தல் 2) உரையாடல் 3) பாட்டுப்பாடல் 4) மேற்கூறிய எல்லாம்

07) புகைப்படப் பிரதியொன்றினை பத்திரிகையில் பிரசுரிக்க உத்தேசித்தால் அதனை எவ்வாறு கணினியில் தரவேற்றம் செய்ய முடியும்?
1) Far 2) Scan 3) Photo copy 4) எதுவுமில்லை

08) பாடசாலை சஞ்சிகையில் வெளியிடக்கூடிய செய்திப் பலகை எது?
1) புலனாய்வுச் செய்தி 2) அரசியல் செய்தி
3) கல்வி தொடர்பான செய்தி 4) மேற்கூறிய எல்லாம்

09) 'உரைகல்' என்ற பத்திரிகை வெளியிடப்பட்ட ஆண்டு?
1) 1948 2) 1884 3) .1845 4) 1945

10) இலங்கை ரூபவாகினி கூட்டுத்தாபனம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு?
1) 1982 2) 1882 3) 1979 4) 1974

11) புகைப்பட கலை நுட்பத்தின் தந்தை யார்?
1) ஜோர்ஜ் ஈஸ்மன் 2) விலியம் பெக்ஸ்
3) ஜோர்ஜ் நிசமூபாக நிப்ஸ் 4) லுயஜன் மான்டே டியுரெ

12) செய்திக்காக பத்திரிகையில் புகைப்படம் பிரசுரித்த ஆண்டு?
1) 1943 2) 1842 3) 1971 4) 1812

13) செய்தித்தாளில் ஒரு செய்தியினைப் பிரசுரிப்பதற்குமுன் அதனைச் செம்மை செய்பவர் எவ்வாறு அழைப்பூர்?
1) ஒப்புநோக்குநர் 2) ஊடகவீயலாளர் 3) வாசகன் 4) செம்மையாக்குநர்

14) கட்டுரைச் செய்தி எழுதும் முறை எது?
1) தலைகீழ் பிரமிட் முறை 2) பிரமிட் முறை
3) 3 E 4) 5 W, H

15) வானொலி ஊடகத்தைப் பயன்படுத்துவோர் எவ்வாறு அழைப்பர்?
1) வாசகர் 2) பார்வையாளர் 3) நேயர் 4) ரசிகர்

16) செய்தி வகை உள்ளடங்கும் தொகுதி?
1) அரசியல் செய்தி, விளையாட்டுச் செய்தி
2) உள்நாட்டுச் செய்தி, வெளிநாட்டுச் செய்தி
3) வன் செய்தி, மென் செய்தி
4) அரசியல் செய்தி, புலனாய்வுச் செய்தி

17) நிருபர் செய்திகளை அறியும் ஆற்றல் எவ்வாறு அழைக்கப்படும்?
1) செய்திமோப்பம் 2) செய்திமூலம்
3) தகவல் இடம் 4) பீட் அறிக்கை

18) வெளியீட்டு உரிமைச் சட்டம் பிரித்தானிய சட்ட சபையில் எத்தனையாம் ஆண்டு சட்டமாக்கப்பட்டது?
1) 1917 2) 1710 3) 1624 4) 1945

19) இலங்கையில் புலமைச் சொத்துச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு?
1) 1916 2) 1997 3) 1945 4) 1979

20) பெண்கள், சிறுவர்கள் தொடர்பாக அறிக்கையினை ஊடகங்கள் மேற்கொள்ளும்போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயம் எது?
1) பாலியல் ரீதியில் பிரசுரிப்பதைத் தவிர்த்தல்
2) பாலியல் ரீதியில் பாதிக்கப்பட்டால் பெயர் விபரங்களை வெளியிடாதுவிடல்
3) அனுமதியின்றிப் படங்களைப் பிரசுரித்தல் ஆகாது
4) மேற்கூறிய யாவும்

21) செல்போனின் தந்தையாக அழைக்கப்படுபவர்?
1) சாள்ஜ் பபேஜ் 2) ஷாணன் லீவர் 3) மார்டின் கூப்பர் 4) வில்லியம்

22) இலங்கையில் சினிமா ஊடகம் ஆரம்பிக்கப்பட்டது
1) 1889 2) 1901 3) 1612 4) 1905

23) தென்னிந்தியாவில் தயாரிக்கப்பட்ட முதலாவது தமிழ் மௌனத் திரைப்படம்
1) கீசகன் லதன் 2) தர்மயுத்தம் 3) மகாபாரதம் 4) கந்தன் கருணை

24) ஓர் திரைப்படம் வெற்றிபெறத் தேவையான காரணி எது?
1) இயக்கம் 2) பாடலும் இசையும் 3) திரைக்கதை 4) மேற்கூறிய யாவும்

25) "துஷியந்தனுக்கு சகுந்தலை காதல் கடிதம் எழுதியுள்ளார்" இது எவ்வகையான தொடர்பாடல் முறை?
1) வாய்மொழி 2) எழுத்து மொழி 3) சைகை மொழி 4) வாய்மொழியற்ற தொடர்பு

26) முதன் முதலில் அச்சடித்து வெளியிடப்பட்ட நூல் எது?
1) குர்ஆன் 2) பகவத் கீதை 3) விவிலியம் 4) மகாபாரதம்

27) ஆரம்ப காலத்தில் அச்சுக்கலை எதற்காக அதிகம் பயன்படுத்தினர்?
1) சமய பிரசாரம் செய்ய 2) கல்விப் போதனைகளுக்கு
3) தேர்தல் பிரசாரம் செய்ய 4) மேற்கூறிய யாவும்

28) உலகின் முதலாவது சமயப் பத்திரிகை எது?
1) உதயதாரகை 2) றைகோடர் 3) இந்து 4) சைவ சம்போதினி

29) உதயதாரகைப் பத்திரிகை வெளியிடப்பட்ட ஆண்டு
1) 1941 2) 1942 3) 1841 4) 1845



30) 'SMS' என்ற பதம் குறிப்பது
1) இலங்கை தகவல் சேவை 2) இலங்கை மந்திரிகள் சேவை
3) குறுந்தகவல் சேவை 4) செய்தி சென்றடைதல்

31) இணையத்தள வசதியில் 'edu' என்ற பதம் குறிப்பது?
1) அரச நிறுவனம் 2) அரசசார்பற்ற நிறுவனம்
3) கல்வி நிறுவனம் 4) கல்விசாரா நிறுவனம்

32) வெப்தளம் எத்தனையாம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது?
1) 1990 2) 1991 3) 1964 4) 2004

33) இணையத்தள சேவை வழங்கும் நிறுவனம் எது?
1) Google 2) Yahoo 3) MSN 4) யாவும் சரி

34) தொலைபேசி வலையமைப்பில் 'IDD' என்ற பதம் குறிப்பது?
1) சர்வதேச நேரடி அழைப்பு 2) சர்வதேச தொலைபேசி முகவர்
3) வசதிப் பட்டியல் அழைப்பு 4) மேற்கூறிய யாவும் சரி

35) பிரஜை என்ற எண்ணக்கரு எங்கிருந்து தோற்றம் பெற்றது?
1) ஜனநாயகம் 2) யாப்பு 3) நாடு 4) பாராளுமன்றம்

36) இலங்கையில் சிங்கள மொழியில் வெளிவந்த முதல் பத்திரிகை எது?
1) லங்காதீப 2) சிலுமின 3) தினமின 4) லங்கா லோக

37) நாடு முழுவதும் விநியோகிக்கப்படும் பத்திரிகை எவ்வாறு அழைக்கப்படும்?
1) சர்வதேச பத்திரிகை 2) தேசியப் பத்திரிகை
3) உள்ளூர் பத்திரிகை 4) மேற்கூறிய யாவும்

38) முதன் முதலில் இலங்கையில் அச்சுக்கூடம் நிறுவப்பட்ட இடம்
1) மானிப்பாய் 2) வட்டுக்கோட்டை 3) கொழும்பு 4) காலி

39) தற்போதைய ஊடகத்துறை அமைச்சர் யார்? (2012 இல்)
1) ஹெகலிய ரம்புக்வெல 2) மேர்வின் சில்வா
3) அநுரபிரியதர்சன யாப்பா 4) லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன

40) சிரியா யுத்தத்தில் இறந்த பெண் ஊடகவியலாளர் யார்?
1) மேரி கொல்வின் 2) கொல்வின் மேரி 3) கல்பனா 4) யாவும் பிழை

## தொடர்பாடல் மற்றும் ஊடகவியல் கற்கை
## பகுதி - II

01) தொலைக்காட்சி ஒன்றுக்குத் 'தீபன்' பேட்டியொன்றை வழங்கியுள்ளார். இவர் விளையாட்டுத் துறையில் தேசிய மட்டம் வரை போட்டியில் கலந்துகொண்டுள்ளார். இதனை 'நிஷாந்தன்' என்பவர் நேர்காணலை மேற்கொண்டார். அவர் வழங்கிய பேட்டியின் படி,
1) தீபனும், நிஷாந்தனும் முதன்முதலில் சந்திக்கும்போது அங்கு இடம்பெற்ற தொடர்பாடல் என்ன?
2) இருவருக்கும் இடையில் ஏற்பட்ட வாய்மொழியற்ற தொடர்பாடல் 4 இனைக் குறிப்பிடுக.
3) தீபனின் விளையாட்டு நிகழ்வு இங்கு ஒளிபரப்பப்பட்டது எனின், அதனுடைய பின்னூட்டம் இரண்டினைக் குறிப்பிடுக.
4) பேட்டிக்கும், நேயர்களுக்கும் இடையிலான தொடர்பாடலை 'SMCR' முறையில் விளக்குக.
5) இங்கு ஏற்படக்கூடிய 'ஊடகம்' சார்தடைகள் இரண்டினைக் குறிப்பிடுக.

02) வாணி கவிதை நூல் ஒன்றைப் பாடசாலையில் வெளியிடத் தீர்மானித்துள்ளார்.
1) இந்நூல் எவ்வகையான ஊடகம்?
2) கவிதை நூலில் அவர் எடுத்திருக்கக் கூடிய கவிதைத் தலைப்பு எவ்வாறு அமைந்திருக்கும்?

# 19.207மில்லியன் டொலரில் வடக்கின் சுகாதார அபிவிருத்தி

(பகீ)-

உலகளாவிய நிதியம் வழங்கிய 19.207மில்லியன் அமெரிக்க டொலரில் எயிட்ஸ், காச நோய் மற்றும் மலேரியா நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக வடமாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சு வெளிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐந்து வருடங்களைக் கொண்ட இந்தத் திட்டமானது 2011ஆம் ஆண்டு யூன் மாதம் ஆரம்பிக்கப்பட்டு, தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. இந்தத் திட்டம் 2015ஆம் ஆண்டுடன் நிறைவடையவுள்ளது.

அத்துடன், கட்டட நிர்மாணத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ள நிதியில் வட மாகாணத்தில் வெளிநோயாளர் பிரிவு, சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, விடுதி, இரட்டை விடுதி, மலேரியாத் தடுப்பு இயக்கம், மார்பு நோய் சிகிச்சை நிலையம், காசநோய் ஆய்வுகூடம் போன்ற கட்டடங்கள் நிர்மாணிக்கப்படவுள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்த அறிக்கையில், 2012ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் 300 பேரும், வவுனியா, மன்னார், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களுக்கு தலா 200 பேரும், முல்லைதீவிற்கு 240 பேரும் என மொத்தம் 1140 சுகாதாரத் தொண்டர்கள் நியமிக்கப்படவுள்ள தாகவும், 2013ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் வவுனியா, மன்னார்,முல்லைதீவு ஆகிய மாவட்டங்களில் தலா 20 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 25 பேரும் என மொத்தம் 105 தொண்டர்களை நியமிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (சி)

# பாடசாலைக்கு முன்பாக கொட்டப்படும் குப்பைகள்

## துர்நாற்றம் வீசுவதாக விசனம்



(ஷர்மி)

கொக்குவில்- ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலைக்கு அருகில் நீண்ட நாட்களாக குப்பைகள் சிதறிக் கொட்டப்பட்டுள்ள நிலையில் காணப்படுகின்றது.

இந்த இடத்தில் குப்பை கொட்டுவதற்கான தொட்டி உள்ளபோதும், இந்தச் சூழலில் வசிக்கும் சிலர் குப்பைகளை தொட்டிக்கு வெளியே போடுவதாகவும், இவற்றை நாய்கள் கிளறி வீதிவரை சிதறுவதாகவும் வீதியால் தினமும் பயணிக்கின்றவர்கள் கூறுகின்றனர். அத்துடன் துர்நாற்றம் வீசுவதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

இந்தக் குப்பைகள் பாடசாலை வளாகத்துக்குள்ளும் செல்லும் நிலைமையையும் அவதானிக்க முடிகின்றது.

யாழ்ப்பாணத்தில் தற்போது மலேரியா தடுப்பு தினம் கொண்டாடப்படுகின்ற நிலையில், இவ்வாறு வீதிகளில் குப்பைகள் குவிந்து கிடக்கின்றமை நுளம்பு பெருக்குவதற்கும் சுகாதாரச் சீர்கேடு இடம்பெறுவதற்கும் ஏதுவாக உள்ளது என தெரிவிக்கப்படுகிறது. (சி)

# பரந்தனிலிருந்து காங்கேசன்துறை வரை புகையிரதப் பாதை புனரமைப்பு

(ஷர்மி)

யாழ்ப்பாணத்துக்கான புகையிரதப் பாதைகள் மிகவும் துரித கதியில் புனரமைக்கப்பட்டு வருகின்றமையை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

பரந்தன் மற்றும் காங்கேசன்துறை வரையான புகையிரதப் பாதைகள் கனரக வாகனங்களின் உதவியுடன் மிக விரைவாக நடைபெற்று வருவதாக புகையிரதத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

2013 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்துக்கான யாழ் தேவி புகையிரதத்தின் வருகையை முன்னிட்டு புகையிரதப் பாதைகள் புனரமைக்கப்படுவதாகவும், இலங்கை-இந்திய நட்புறவின் வெளிப்பாடாவே நாட்டின் பல பாகங்களிலும் இந்த புகையிரதப் பாதைச் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் புனரமைப்புப் பணிகள் தற்போது கோண்டாவில் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், சுன்னாகம் புகையிரதப் பாதைகளை சீரமைப்பதற்கான ஆயத்தங்கள் நடைபெற்று வருகின்றது. (சி)

# கதிரமலைச் சிவனுக்கு திருவிழா ஆரம்பம்

(ஷர்மி)


சுன்னாகம் ஸ்ரீ கதிரமலைச் சிவன் தேவஸ் தான வருடாந்த மகோற்சவம் கடந்த செவ் வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்ப மாகியது.

ஞாயிற்றுக்கிழமை நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தின் உபயத்தில் மாலை 4.00 மணிக்கு விநாயகர் வழிபாடு நடைபெற்று, தொடர்ந்து மறுநாள் திங்கட்கிழமை மாலை 4.00 மணிக்கு சாந்திமகாமாரி உற்சவம் நடைபெற்றது. செவ்வாய்க் கிழமை காலை 7.00 மணிக்கு அபிஷேகம் மற்றும் வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து இடபரூபக் காட்சியில் கொடியேற்ற நிகழ்வு நடைபெற்றது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை கைலாயக் காட்சியும், எதிர்வரும் 15ஆம் திகதி பக்த மூர்த்த பாவன 63 நாயன்மார் தரிசனக் காட்சியும், 17ஆம் திகதி சப்பறத் திருவிழாவும், 18ஆம் திகதி கிருஷ்ண கந்தோற்சவக் காட்சியும், 19ஆம் திகதி சனிக்கிழமை தேர்த் திருவிழாவும், 20ஆம் திகதி காலை 7.00 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெற்று மாலை 6.00 மணிக்கு கொடியிறக்கமும் நடை பெறவிருக்கின்றது.

21ஆம் திகதி சண்டேஸ்வரர் உற்சவமும், 22ஆம் திகதி காலை சங்காபிஷேகம் மற்றும் திருக்கல்யாண உற்சவமும், 23ஆம் திகதி வைரவர் விழாவுடன் மகோ்சவம் நிறைவடையவுள்ளது.


இந்த மகோற்சவம் தேவஸ்தான பிரதான குரு கலாநிதி



சிவஸ்ஸ்ரீ நா.சோமாஸ்கந்த குருக்கள் தலைமையில் நடைபெறுவதுடன், தினமும் என்.ஆர்.கே. கோவிந்தசாமி குழுவினரின் மங்கள இசையும் நடைபெறுகின்றது. (சி)

# மெய்தான் பாருங்கோ...

## இரசனைகள்



**தமிழ்** மொழியில 'இரசனை' எண்ட ஒரு சொல்லிருக்குது கேள்விப் பட்டிருப்பியள். இந்தச்சொல்லுக்கு சுவை, படையின் அணிவகை, பதினாறு கோவையுள்ள அரைப்பட்டியான காஞ்சி... எண்டு பலதரப்பட்ட அர்த்தங்கள் இருக்குது பாருங்கோ! அதோடை இரசித்தல், விரும்புதல் எண்டும் சொல்லுறவை.

நான் இன்டைக்கு இதால வந்தாப்போல இதில இரசனை அதாவது இரசித்தல் எண்டதைப் பற்றி ஏன் சொல்லவாறன் எண்டால், ஒவ்வொரு மனிசன்ர உள்ளத்திலும்; அவையவைக் கேற்ற விருப்பங்களுக்கு அமைவாக ஒவ்வொரு இரசனை உணர்வுகள் உறைஞ்சிருக்கும் பாருங்கோ.

ஒருத்தருடைய மனதுக்குப்பிடிக்கிற இரசனை இன்னொருவருக்கு அற்பமாத் தெரியலாம் அல்லாட்டி பிடிக்காமலும் போகலாம். பிடிக்காதவருக்குரிய ஒரு இரசனை இன்னொருவருக்கு பிடிச்சமாதிரியும் ஆகலாம்.

ஒரு இரசனை உணர்வெண்டது அழகோடுமட்டும் சம்பந்தப்பட்ட தெண்டு ஒரு சிலா் ஒருவரையறையை வகுத்து அதுக குள்ளயிருந்து வாழப் பழகியிட்டினம்.

ஏன்! கன்க்கவேண்டாம்... பெரும்பாலான கவிஞர்கள், எழுத்தாளர்கள் கூட அழகைத்தான் இரசனையோட பாத்து இரசித்து தமது படைப்புகளாக்கி இருக்கினமேயொழிய, அதற்கும்ப்பால தங்கட பார்வையைச் செலுத்தி... தங்கட இரசனையை மேற்கொள்ளேல்லை.

ஒரு அழகான பெண்ணின் முகத்தை நிலவுக்கும் நெளிநெளியாக அமைஞ்சிருக்கிற அவளது கார்மேகக்கூந்தலை கடலலைகளுக்கும் உவமானமாக பாத்து இரசனையோடு பாடல் எழுதுகிற கவிஞர்களுக்கு அதன் மறுபக்கத்தை ஏன் இரசனையோட பாக்கமுடியாமல் கிடக்குது?

ஒரு பெண்ணைநோக்கி நிலவாகவும் கடலலைகளாகவும் பாக்கிறது தப்பில்லை. ஆனா, அப்படியான ஒருபெண், அதாவது வறுமையைத் தன்மேனியில் அணிந்தவளாய்... மனதில் வருங்காலக்கனவுகள் எதுவுமே அற்றவளாய்... சில்லறைப் பணம் எதுவுமற்ற, அவளது சீரழிந்த வாழ்வுக்குள் சிக்கியிருக்கும் அவளின் தலைமீது, நிலையெனக் குடிகொண்டு, நீண்ட நாள்கள் வாழும் ஈரையும், பேனையும் பற்றி எவராவது இரசனையோட பாக்க முடிகிறதா? பாடத்தெரிகிறதா?

நான் இதில திரும்பவும் என்ன சொல்லவாறன் எண்டால், இரசனை எண்டது அழகுக்குமட்டும் உரித்துடையதல்ல. அவலங்களையும், அசிங்கங்களையும் இரசனையோட பார்க்க வேணும். நான் இப்படி இதில சொல்லவர, சிலபேர் இதை வேறகோணத்தில நிண்டு கொண்டு பாத்தாலும் பாப்பினம்.

அழிவைப்பாத்து அனுதாபப் படுகிறதை விட்டிட்டு, அசிங்கங்களை புறமொதுக்கிப்போட்டுப் போறதுக்கு உந்தச் 'சீனாச் சீனா' என்ன விசர்க்கதை கதைக்குது மனிசன்... எண்டு சிலர் வியாக்கியானம் பண்ணலாம்.

அந்தி வானத்திலிருந்து மறையப்போகும் செங்கதிரோனின் சிவப்பு நிறச்சுடர்களின் நிமித்தம், வானம் காட்டும் சிங்கார வர்ண ஜால வித்தையை இரசிக்கத்தெரிஞ்சவன், அழிவின் தரிசனங்களையும் இரசிக்கத் தெரிஞ்சவனாக இருக்க வேணும். அப்படியானவைகளை இரசிக்கத் தெரியாதவன் உண்மையான இரசனையாளனாக இருக்க முடியாது பாருங்கோ.

சரி இதைவிடுவம்! இதைவிட இன்னொரு பிரச்சினையும் ஒண்டு இருக்குது தெரியுமே!

அழகை இரசிக்கத்தெரியாமல் அனுபவிச்சுப்போட்டு, பிறகு காலம் பூராகவும் அல்லோல கல்லோலப்படுகிற ஆட்களும் இருக்கினம் கண்டியளே!

சிலபேர் இருக்கினம்! விதிவசமா சாமுத்திரிகா இலட்சணமுள்ள ரதிபோல ஒரு பொண்டாட்டி வாய்ச்சால், அவளின்ர அந்த அழகை இரசனையோட பாத்து இரசிச்சு வாழத் தெரியாது. எனக்குரியவள்தானேயெண்டு அவளை ஒரு போகப்பொருளாப் பாக்கத் தொடங்கியிடுவினம்.

இதால ஏற்படுகிற விளைவு என்ன தெரியுமே?

நண்டும் குஞ்சும் மாதிரி... வீடு நிறைய 'வம்சங்கள்' நிறைஞ்சு போய்க்கிடக்கும். கரப்புக்குள்ள கோழிக்குஞ்சுகள் கிடந்து சத்தம் போட்ட மாதிரியிருக்கும்.

இதெல்லாம் அழகை இரசனையோடை பாக்கத்தெரியாததால வந்த வில்லங்கமெண்டுதான் நான் சொல்லுவன்.

எதையும் பாத்து இரசனை கொள்ளலாம்; கொள்ள வேணும். ஆனா அதை அனுபவிக்க வெளிக்கிட்டால் பெரிய அல்லோல கல்லோலமாத்தான் முடியும் கண்டியளே!

\- **சின்னக்குட்டி சின்னச்சாமி.**

# ஊழலுக்கு எதிராக பா.ஜ.க. போராடும்

## அத்வானி




(மதுரை)

ஊழல் மற்றும் கறுப்பு பணத்துக்கு எதிராக பா.ஜ. தொடர்நது போராடி வருகிறது என மதுரையில் நடந்த பா.ஜ. மாநாட்டில் கட்சியின் மூத்த தலைவர் அத்வானி தெரிவித்துள்ளார்.

மதுரையில் தாமரை சங்கமம் என்ற பெயரில் பா.ஜ. மாநில மாநாடு நடந்து வருகிறது. மாநாடடில் பா.ஜ. மூத்த தலைவர் அத்வானி கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.


கடந்த 1947 ஆம் ஆண்டு நாடு சுதந்திரம் அடைந்த போது நான் பாகிஸ்தானின் கராச்சி நகரில் இருந்தேன். பின்னர் இந்தியா - பாக்கிஸ்தான் பிரிவினை ஏறப்பட்ட உடன எனது 20 வயதில் இந்தியா வந்தேன். இங்கே கூடியுள்ள மக்களை பார்க்கும்போது நான் பெருமை அடைகிறேன். இது போன்ற மாநாட்டு கூட்டத்தினை நான் இதுவரை பார்த்ததில்லை. அதிலும் தமிழகத்தில் இந்த மதுரை மண்ணில் பார்த்ததில்லை நான் பலமுறை மதுரைக்கு வந்திருக்கிறேன். இந்த மாநாட்டில் கூடியுள்ள மக்களை பார்த்ததும் எனக்கு ஆச்சரியமாக உள்ளது.

ஊழல் கறுப்பு பணத்தை ஒழிக்கவேண்டி பா.ஜ. தொடர்ந்து போராடி வருகிறது. முன்னாள் பிரதமர் வாஜ்பாய் பா.ஜ.வின் மிகப்பெரிய தலைவராக வந்த போது நானும் அரசியல் பெரிய இடத்திற்கு வரவேண்டும் என்ற எண்ணம் இருந்தது என்றார்.




## இந்தியச் செய்திகள்

# சினேகாவை கரம் பிடித்தார் பிரசன்னா



(சென்னை)

சினிமா நட்சத்திரங்கள் சினேகா - பிரசன்னா திருமணம் கோலாகலமாக நடந்து முடிந்தது. முன்னதாக மணமகன் பிரசன்னா அலங்கரிக்கப்பட்ட தேரில் அழைத்து வரப்பட்டார். சினேகாவை ஒரு இளவரசி போல அலங்கரித்து, மலர் அலங்காரம் செய்யப்பட்ட பல்லக்கில் அமர வைத்து அழைத்து வந்தனர்.

பின்னர் இருவரும் மாலை மாற்றிக் கொண்டு மேடையில் நின்றனர். தொடர்ந்து இருவரும் மோதிரம் மாற்றிக்கொண்டனர். அவர்களுக்கு உறவினர்கள், நண்பர்கள் மற்றும் திரையுலகினர் வாழ்த்து தெரிவித்தனர்.

நேற்றுக் காலை இருவரது திருமணமும் சென்னை, வாணகரத்தில் உள்ள ஸ்ரீவாரு வெங்கடாஜலபதி பேலஸில் நடந்தது. மணமகள் சினேகா கழுத்தில் பிரசன்னா தாலி கட்டி தனது மனைவியாக ஏற்றுக்கொண்டார். இந்தத் திருமணத்தில் ஏராளமான திரை நட்சத்திரங்களும் பங்கேற்று மணமக்களை வாழ்த்தினர்.

# ஒருமித்த கருத்து ஏற்பட்டால் மட்டுமே லோக்பால் மசோதா நிறைவேற்றப்படும்



(புதுடில்லி)

அனைத்து கட்சிகளிடம் ஒருமித்த கருத்து ஏற்படுத்தப்பட்ட பின்பே லோக்பால் மசோதாவை மாநிலங்களவையில் தாக்கல் செய்ய வேண்டும் என்று மத்திய சட்ட அமைச்சர் சல்மான் குர்ஷித் தெரிவித்தார்.

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத் தொடரின்போது மக்களவையில் லோக்பால் மசோதா நிறைவேற்றப்பட்டது. தொடரின் கடைசி நாளில் மாநிலங்களவையில் இந்த மசோதா விவாதத்துக்கு வந்தது. அப்போது, மாநிலங்களில் லோக் அயுக்தா நீதிமன்றம் அமைப்பதை கட்டாயமாக்கும் பிரிவை லோக்பால் மசோதாவிலிருந்து நீக்க வேண்டும் என ஐ.மு. கூட்டணியில் உள்ள திரிணாமுல் காங்கிரஸ், தி.மு.க மற்றும் பல எதிர்க்கட்சிகள் வலியுறுத்தின.

மேலும், ஐமு கூட்டணிக்கு மாநிலங்களவையில் போதிய பலம் இல்லாததால் இந்த மசோதாவை நிறைவேற்ற முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. மசோதா நிறைவேற்றப்படாததற்கு காங்கிரஸும், பா.ஜ.வும் பரஸ்பரம் குற்றஞ்சாட்டிக் கொண்டன.

இந்நிலையில், இந்த மசோதாவிலிருந்து லோக் அயுக்தா பிரிவை மத்திய அரசு நீக்கும் என தகவல் வெளியாகியுள்ளது. லோக் அயுக்தா பிரிவு நீக்கப்பட்ட பிறகே லோக்பால் மசோதா மாநிலங்களவைக்கு வரும் என கூறப்படுகிறது.

இது பற்றி மத்திய சட்ட அமைச்சர் சல்மான் குர்ஷித் அளித்த பேட்டியில், மாநிலங்களில் லோக் அயுக்தாவை ஏற்படுத்தும்படி அன்னா ஹசாரே வலியுறுத்தி வருகிறார். மசோதாவிலிருந்து இந்த பிரிவை நீக்க மத்திய அரசு முயற்சிப்பதாக அவருடைய ஆதரவாளர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

மசோதாவில் உள்ள வேறுபாடுகளை களைய பல்வேறு கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகிறது. அதில், ஒருமனதான முடிவு ஏற்பட்ட பிறகே மாநிலங்களவைக்கு இந்த மசோதாவை கொண்டு வர வேண்டும் என மத்திய அரசு விரும்புகிறது என்றார்.

# எடியூரப்பாவை விசாரிக்க உச்சநீதிமன்றம் உத்தரவு



(புதுடில்லி)

சட்டவிரோத சுரங்கங்களுக்கு அனுமதி அளித்த வழக்கில் பா.ஜ.கவின் தலைவரும், கர்நாடக மாநிலத்தின் முன்னாள் முதல் வருமான எடியூரப்பாவிடம் சி.பி.ஐ. விசாரணை நடத்த வேண்டும் என்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வெஸ்ட் சவுத் என்ற சுரங்க நிறுவனத்திற்கு முறைகேடாக அனுமதியளித்தாகவும், பிரதிபலனாக எடியூரப்பாவின் அறக்கட்டளைக்கு ரூ.10 கோடி இலஞ்சமாக அளிக்கப்பட்டதாகவும், சமாஜ பரிவர்தன அமைப்பின் தலைவர் ஹிரேமத் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து இருந்தார்.

இந்நிலையில், இந்த வழக்கு குறித்து ஆய்வு நடத்திய மத்திய குழு தமது அறிக்கையை உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தது.

மேலும், அக்குழு தாக்கல் செய்திருந்த அறிக்கையில், ஜின்டால் நிறுவனத்திற்கு சட்டவிரோதமாக சுரங்கங்களுக்கு அனுமதி கொடுத்ததால் எடியூரப்பா குடும்பத்தினர் நடத்தும் அறக்கட்டளைக்கு நன்கொடை பெறப்பட்டதாக கூறியிருந்தது.

மத்திய குழுவின் அறிக்கையில் பரிந்துரைத்திருந்தபடி எடியூரப்பா மீதான புகார்கள் குறித்தும், சுரங்க முறைக்கேடு விவகாரம் குறித்தும் சி.பி.ஐ. விசாரணைக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# 1 கோடி பேர் ஓசிப் பயணம்

(புதுடில்லி)

கடந்த ஆண்டில் மட்டும் ஒரு கோடிப் பேர் ரயில்களில் ஓசிப் பயணம் செய்துள்ளனர். ரயில்களில் டிக்கெட் இல்லாமலோ அல்லது உரிய ஆவணங்கள் வைத்திருக்காமலோ பயணம் செய்பவர்களை கண்டு பிடிக்க, ரயில்வே துறை அதிகாரிகள் ரயில்களில் அதிரடி சோதனை மேற்கொள்கின்றனர்.

இந்தச் சோதனை நீண்ட தூரம் செல்லும் ரயில்களிலும், புறநகர் ரயில்களிலும் நடத்தப் படுகிறது. அந்த வகையில், கடந்த ஆண்டில் நாடு முழுவதும் ரயில்களில் நடத்தப்பட்ட டிக்கெட் சோதனையில் மட்டும் ஓசிப்பயணம் செய்த 1.16 கோடிப் பேர் பிடிபட்டனர். அவர்களிடம் இருந்து ரூபா 477.81 கோடி அபராதமாக வசூலிக்கப்பட்டது.

இந்த மண்டலத்தில்தான் குறைவு அல்லது அதிகம் என்றில்லாமல், அனைத்து ரயில்வே மண்டலங்களிலுமே ஓசிப் பயணிகளின் எண்ணிக்கை கிட்டத்தட்ட சமமாகவே உள்ளன. டிக்கெட் இல்லாமல் மட்டுமின்றி, விசேஷ அனுமதி பெற்றவர்கள் உரிய ஆவணம் இல்லாமல் பயணம் செய்தும் பிடிபட்டுள்ளனர். அவர்களிடமிருந்தும் இலட்சக்கணக்கில் அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளது.







சிறாரின் பெயர் : ........................................

முகவரி : ........................................

பிறந்த ஆண்டு : ........................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும் ........................................ பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# சிரிய தாக்குதலில் பலியானோர் அதிகரிப்பு



சிரிய தலைநகரான டமஸ்கஸ்ஸில் நேற்று முன்தினம் வியாழக கிழமை அடுத்தடுத்து நிகழ்ந்த இரு தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் மொத்தம் 55 பேர் கொலலப்பட்டுள்ளனர் எனவும் இராணுவ அதிகாரிகள் உட்பட 373 பேர் படுகாயமடைந்துள்ளதாகவும் சிரியாவின் உள்துறை பாதுகாப்பு அமைச்சு ஊடகங்களுக் குத் தெரிவித்துள்ளது.

உள்துறை அமைச்சு மேலும் கருத்துத் தெரிவிக்கையில், தாக்குதல் நிகழ்ந்த பகுதியில் சிதறிய அடையாளம் தெரியாத உடல் பாகங்கள் அடக்கம் செய்வதற்காக சுமார் 15 பைகளில் சேகரிக்கப் பட்டுள்ளன என்றும் கூறியுள்ளது. தற்கொலைக் குண்டுதாரிகளால் செலுத்தப்பட்ட இரு ஜீப் வாகனங்களால் சிரியாவின் பலஸ்தீனியர்களின் புலனாய்வுக் கிளை அமைந்துள்ள கட்டடப் பகுதிக்கு முன் சுமார் 1000 கிலோ கிராம் நிறையுடைய இரு வெடி குண்டுகள் வெடிக்கச் செய்யப்பட்டுள்ளன. சிரியாவில் தற்போது ஐ.நா சபையினால் நியமிக்கப்பட்ட சமாதான கண்காணிப்புக் குழுவுக்கு சவாலாகவே இது போன்ற தாக்குதல்கள் சமீப காலமாக நிகழ்த்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



புளோரிடாவிலுள்ள டிஸ்னி மிருகக்காட்சி சாலையில் புதிதாக பிறந்துள்ள வெள்ளை நிறக் காண்டமிருகக்குட்டி.

# ரஷ்ய ஜனாதிபதி அமெரிக்கா செல்லமாட்டார்

அமெரிக்காவில் நடைபெறவுள்ள ஜி -8 மாநாட்டில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டீன் கலந்து கொள்ள மாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவிற்கு, ரஷ்யாவின் புதிய ஜனாதிபதி அறிவித்துள்ளதாக வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜி-8 நாடுகளின் மாநாடு எதிர்வரும் 18 ஆம் மற்றும் 19 ஆம் திகதிகளில் வோஷிங்டனின் வட பகுதியிலுள்ள மேரிலாண்ட்டில் நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டில் ரஷ்ய பிரதமர் திமிர்தி மெத்வடேவ் கலந்து கொள்வார் என ரஷ்யா குறிப்பிட்டுள்ள தாக வெள்ளை மாளிகையின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் எதிர்வரும் ஜுன் 18 மற்றும் 19 ஆம் திகதிகளில் மெக்சிக்கோவில் நடைபெறவுள்ள ஜி 20 நாடுகளின் மாநாட்டில் இரண்டு நாட்டு தலைவர்களும் இரு தரப்புச் சந்திப்பில் கலந்து கொள்ளவுள்ளனர்.



# இளைஞர்களை ஆட்டிப் படைக்கும் நோ மொபைல் போன் வியாதி

ஒரு வினாடிகூட கைபேசியை பிரிந்து இருக்க முடியாது என்ற நிலையில் சராசரியாக 66 சதவீதம் பேர் வாழ்வது தற்போது தெரியவந்துள்ளது. இந்தப் பயமும் பீதியும் நோமொ.ஃ.போபியா (நோ மொபைல் போன் ஃ.போபியா) எனப்படுகிறது.

கைபேசி தொலைந்து விடுமோ, யாராவது தங்கள் போனில் உள்ள தகவல், குறுஞ்செய்திகள், படங்களைப் பார்த்து விடுவார்களோ என்ற கவலைகளும் பயமும் அவர்களுக்கு எந்நேரமும் இருக்கிறது. இந்தப் பாதிப்பு 4 ஆண்டுகளுக்கு முன்பு 53 சதவீதம் பேருக்கு இருந்தது. தற்போது 66 சதவீதமாக அதிகரித்துள்ளது. இதில் இளைஞர்கள்தான் அதிகம். 18, 24 வயதினர் 77 சதவீதம் பேரும், 25, 34 வயதின்ர் 68 சதவீதம் பேரும் இந்த ரகத்தைச்சேர்ந்தவர்கள். குறியலறையில் பத்திரிகை ப்டிக்கும் வழக்கம் ஒரு காலத்தில் பலருக்கும் இருந்தது. அந்த இடத்தை தற்போது கைபேசி பிடித்திருக்கிறது. 75 சதவீதம் பேர் கைபேசியுடன் தான் குளியலறைக்குள் நுழைகின்றனர். தங்களுக்கு வந்த குறுஞ்செய்தியை வாழ்க்கைத்துணை கூட(காதலன், காதலி, கணவன், மனைவி) பார்க்க கூடாது என்று 49 சதவீதம் பேர் நினைக்கின்றனர்.

46 சதவீதம் பேர் இரகசிய குறியீடுகள் பயன்படுத்துகின்றனர். அலுவலக, தனிப்பட்ட உபயோகத்துக்கும் தனித்தனி போன் வைத்திருப்பவர்கள் 58 சதவீதம் பேர் என தெரியவந்துள்ளது. இத்தகவல்களை இங்கிலாந்தின் ரீடிங் நகரை சேர்ந்த செக்யூர என் வாய் என்ற அமைப்பு ஆய்வு நடத்தி வெளியிட்டுள்ளது.

உலகச் செய்திகள்



# பாகிஸ்தானின் ஏவுகணை சோதனை வெற்றி

அணு குண்டை சுமந்து செல்லக்கூடிய வல்ல ஏவுகணையை, பாகிஸ்தான் விண்ணில் ஏவி சோதனை செய்தது.

பாகிஸ்தான் கடந்த மாதம் 25ஆம் திகதி நடுத்தர ஏவுகணை ஒன்றை ஏவி சோதனை செய்தது.

இதற்கிடையே நேற்றுமுன்தினம் 290 கிலோ மீட்டர் தூரம் வரை சென்று, எதிரியின் இலக்கைத் தாக்க வல்ல ஹத்ப்-3 என்ற ஏவுகணையை ஏவி சோதனை செயதது. இராணுவ அதிரடிப் படை வீரர்களின் பயிற்சி நிறைவு விழாவை ஒட்டி, அணு குண்டைச் சுமந்து செல்லும் இந்த ஏவுகணை சோதனை செய்யப்பட்டது. இது குறித்து இராணுவ அதிகாரி காலித் ஹமீம் குறிப்பிடுகையில், எந்தவித அச்சுறுத்தலையும் முறியடிக்கும் வல்லமையை பாகிஸ்தான் பெற்றுள்ளது என்றார்.



# சொனி நிறுவனத்திற்கு தொடர்ச்சியாக நட்டம்

ஜப்பானிய மின்னணு நிறுவனமான சொனி இதுவரை இல்லாத அளவில் வருடந்திர நட்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது. கடந்த நிதியாண்டில் மட்டும் தமக்கு 7பில்லியன் டொலர்கள் நட்டம் ஏற்பட்டுள்ளதாக அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

தொடர்ச்சியாக நான்கு ஆணடுகளாக சொனி நிறுவனம் நட்டத்தையே எதிர்கொண்டு வருகிறது.

வளர்ந்து வரும் நாடுகளில் தமது பொருட்களுக்கான கிராக்கி குறைந்ததும், கடந்த ஆண்டு ஜப்பானில் இடம்பெற்ற இயற்கை பேரழிவுகளும், தாய்லாந்தில் ஏற்பட்ட வெள்ளமும் தனது வர்த்தகத் தொடர் சங்கிலியை பெரிதும் பாதித்ததே இந்த ஆண்டு ஏற்பட்டுள்ள பெருநட்டத்துக்கு கார்ணம் என்று சொனி கூறியுள்ளது.

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் இந்த ஆண்டு பெப்ரவரி மாதம் வரையிலான காலத்தில், டொலருக்கு எதிராக ஜப்பானிய நாணயமான யென்னின் மதிப்பு உயர்ந்ததும் சொனியின் கஷ்டங்களை அதிகரித்தது.




எனினும் இந்த ஆண்டு தம்மால் 375 மில்லியன் டாலர்கள் அளவுக்கு இலாபம் ஈட்ட முடியும எனவும் தாங்கள் எதிர்பார்ப்பதாகவும் சொனி நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடந்த மாதம் சொனி தனது நிறுவனத்துக்கு ஒரு புதிய தலைவரை நியமித்து, உலகளவில் தனது பணியாளர்களின் எண்ணிக்கையில் ஆறு சதவீதம் குறைப்பதாக அறிவித்தது. அதன் மூலம் தமக்கு ஏற்படும் நட்டங்களில் இருந்து ஓரளவுக்கு விடுபட முடியும் எனவும் அந்த நிறுவனம் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# பெண்களின் முடி அலங்காரத்தில் புதுமைகளைப் புகுத்தியவர் மரணம்



பெண்களின் முடி அலங்காரத்தில் புதுமைகளை புகுத்தி, குட்டை முடி ஸ்டைலை அறிமுகப்படுத்திய ஹேர் ஸ்டைலிஸ்ட(Hair Stylist) விடால் சூசன் (வயது-84) மரணமடைந் தார்.

அமெரிக்கா, இங்கிலாந்து உள்ளிட்ட மேற்கத்திய நாடுகளில் கடந்த 1960ஆம் ஆண்டுகளில் பெண்களின் முடி அலங்காரம் பெரும் பிரச்சினையாக இருந்தது. சுருள் சுருளாக, அ[illegible]ந்தியாக, நீளமாக இருந்ததால் பல பெண்கள் ஈவடீசிங போன்ற பிரச்சினைகளுக்கு ஆளானார்கள். அப்போது புதிய பாணியில் பெண்களுக்கு முடி அலங்காரம் செய்து உலகளவில் பிரபலமானவர் விடால் சசூன். இவர் இங்கிலாந்தின் லண்டன் நகரில் பிறந்து அமெரிக்காவின் லோஸ் ஏஞ்சல்சில குடியேறியவர். இவர், வாஹ அண்ட் வியர் என்ற ஸ்லோகத்துடன் பெண்களுக்கு புதுமையான ஸ்டைலில் முடி அலங்காரம் செய்யத் தொடங்கினார்.

பெண்களின் கூந்தலில் சிக்கு எடுத்து, நீளமான முடியை குட்டையாக வெட்டி க்ழுத்து வரைக்கும் இருக்கும் அளவுக்கு அலங்காரம் செய்து கொடுத்தார். இந்த அலங்காரத்தில் தலைமுடியை பராமரிபபது பெண்களுக்கு மிக எளிதாக இருந்தது. இது பெண்ணுரிமை இயக்கங்களால் பெரும் வரவேற்புப் பெற்றது.

இவர் முடி அலங்காரம் மட்டுமன்றி தனது பெயரில் பல ஹம்புகள், அழகு சாதனப் பொருட்களையும் அறிமுகப்படுத்தினார். உலகளவில் பெண்களின் முடி அலங்காரத்தில் புரட்சியை ஏற்படுத்திய விடால், லோஸ் ஏஞ்சல்சில் உள்ள தனது இல்லத்தில் கடந்த புதன்கிழமை மரணம் அடைந்தார்.

# ஏமனில் 8 தீவிரவாதிகள் பலி

(ஏடன்)

அமெரிக்காவின் ஆளில்லா விமானத் தாக்குதலுக்கு 8 தீவிரவாதிகள் பலியாரனார்கள். மேலும் 12 பேர் பலியா னதாக அந்நாட்டு அரசு செய்தி குறிப்பு தெரிவிக்கிறது. கடந்த ஞாயிறன்று ஆளில்லா விமானத்தாக்குதல் அல்-கொய்தா அமைப்பின் முக்கிய தலைவருக்காக அமெரிக்கா நடத்தியிருந்தது குறிப்பிடத்தக்கது.

# குருப் பெயர்ச்சி பலன்கள்

**17-05-2012 முதல் 28-05-2013 வரை**




கார்த்திகை 2, 3, 4 பாதங்கள் ரோகிணி, மிருகசீரிடம்1, 2 பாதங்கள் வரை.

(பெயரின் முதல் எழுத்துக்கள்: இ, உ, ஏ, ஒ, வ, வி, வு, வே, வோ, உள்ளவர்களுக்கும்)

சுக போகங்களை வழங்கும் சுக்ரனுக்குரிய வீட்டை ராசியாக கொண்ட ரிஷப ராசி நேயர்களே!

உங்களின் கவர்ச்சியான தோற்றமும், கனிவான பேச்சும் காரிய வெற்றிக்கு உறுதுணையாக அமைகிறது. உங்களைச் சார்ந்தவர்களுக்கு, பிரச்சினை என்று வந்து விட்டால் அதை உங்களுக்கு வந்த பிரச்சினை போல் நினைத்துக் கொண்டு, உடனடியாக தீர்க்க முன்வருவீர்கள்.

சந்திரன் உச்சம் பெறும் ராசி உங்கள் ராசி. 'மதி' உங்கள் ராசியில் உச்சம் பெறுவதால் மதிப்பும், மரியாதையும் உங்களுக்கு அதிகமாகவே இருக்கும். சமூகத்தில் துதிக்கப்படுபவர்களில் ஒருவராக இருப்பீர்கள்.

உங்கள் ராசிக்கு இதுவரை 12ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த குருபகவான் 17-5-2012 முதல் ஜென்ம ராசியில் சஞ்சரிக்கப் போகிறார். குரு, உங்கள் ராசிக்கு அதிபதியான சுக்கிரனுக்கு பகைவன். எனவே குரு நமக்கு எதிரி என்று நீங்கள் நினைக்கலாம். எதிரி இல்லம் தேடி வருகிறாரே, என்ன செய்யப்போகிறாரோ என்று நீங்கள் பயப்பட வேண்டாம். எதிரியாக இருந்தாலும், எதிரில் வரும் பொழுது கும்பிட்டால், வாழ வழி வகுப்பார்.

### ஜென்ம குருவின் சஞ்சாரம்

உங்கள் ராசிக்கு 8, 11 க்கு அதிபதியாக குரு விளங்குகிறார். அப்படிப்பட்ட குரு பகவான் ஜென்ம ராசியில் சஞ்சரிக்கும் பொழுது, அதுவும் கேதுவுடன் கூடுவதால் விபரீத ராஜயோகத்தை செயற்படுத்தப்போகிறார். சுய பலமற்ற கிரகமான கேதுவும், சுக்ரனுக்குரிய பலன்களையே அள்ளிக் கொடுக்கப் போவதால் சர்ப்ப சாந்தியையும், ராகு-கேது பிரீதியையும் தகுந்த நாட்களில் செய்ய வேண்டியது அவசிய மாகும்.

உங்கள் ராசிக்கு 8, 11 க்கு அதிபதியான குரு 12 இல் சஞ்சரிக்கும் பொழுது, வெற்றிக்கனியை நீங்கள் எட்டிப்பிடிப்பதற்கு இடையூறாக இருந்தவர்கள் இனி விலகுவர். குடும்ப சுமை கூடும். கொடுக்கல், வாங்கலில் கூடுதல் விழிப்புணர்ச்சி காட்டா விட்டால் ஏமாற்றங்களை சந்திக்க நேரிடும். உடல நலத்திலும் கவனம் செலுத்துங்கள். ஒரு சில நூதன நோய்கள் தோன்றலாம்.

மற்றவர்களை நம்பி ஒப்படைத்த பொறுப்புகள் மீண்டும் உங்களிடமே வந்து சேரலாம்.

### குரு பார்க்க கோடி நன்மை!

பொதுவாக ஜென்ம ராசியில் சஞ்சரிக்கும் குரு 5, 7, 9 ஆகிய இடங்களை பார்க்க போகிறார். அதன் பார்வை பலத்தால் பக்க பலமாக இருப்பவர்கள் ஒத்துழைப்பு செய்வார்கள்.

அடுத்தவர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் பெரிதும் வெற்றி பெறும். நட்பால் விரும்பிய காரியங்களை, விரும்பியபடியே செய்து முடிக்கும் வாய்ப்பு உருவாகும். திருமண பேச்சு வார்த்தைகள், வாரிசுகளுக்கு வெளிநாட்டு வாய்ப்புகளை ஏற்படுத்தி கொடுத்தல் போன்றவை நடைபெறும்.

வீடு கட்டும் முயற்சிக்கு வித்திடுதல், விவசாய பணியில் ஆர்வம் செலுத்துதல் போன்றவை அனுகூலம் தரும். இல்லறத்தில் இருந்த விரிசல்கள் மறையும். எண்ணிய எண்ணங்கள் நிறைவேற மாமன், மைத்துனர் வழியில் ஒத்துழைப்புகள் கிடைக்கும்.

பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும். புதிய இடத்தில் பூமி பூஜை போட முயற்சிப்பீர்கள். பெரியப்பா, சித்தப்பா, உட்பகைகள் மாறும்.

நல்ல எண்ணத்தோடும், பிறருக்கு தீங்கு நினைக்காமலும் முடிந்தவரை பிறருக்கு உதவி செய்தும், தான் உண்டு தன் வேலை உண்டு என்றிருப்பவர்களுக்கு கிரகங்களால் எந்த தீமையும் வராது.

அதே நேரத்தில் எந்த கிரகம் நமக்கு சாதகமான நிலையில் சஞ்சரிக்கவில்லையோ, அந்த கிரகத்திற்குரிய கிழமையில் விரதமிருப்பதும், அந்த கிரகத்திற்குரிய தெய்வங்களுக்கு அபிஷேக ஆராதனைகள் செய்வதும் சிறப்பான பலனைத் தரும்.

அன்னதானங்களின் மூலமும் அற்புத பலன்களை பெற முடியும். வியாழ பகவானின் அருள்பெற குரு ப்ரீதி செய்யும் இடங்களில் குருவிற்குரிய ஆலயங்களில் நடைபெறும் சிறப்பு நிகழ்ச்சிகளில் அன்னதான வைபவங்களை முன்னின்று நடத்தலாம். அல்லது அன்னதான கைங்கரியங்களில் நீங்களும் சேர்ந்து கொள்ளலாம். பசி தீர்ந்த மக்களின் வாழ்த்துகள் உங்கள் வாழ்க்கைப் பாதையை வசந்தமாக மாற்றும்.

### வாட்டத்தை போக்குமா வக்ர குரு

ரிஷப ராசிக்குள் சஞ்சரிக்கும் குரு 12.10.2012 முதல் 6.2.2013 வரை வக்ர கதியில் இயங்குகிறார். உங்கள் ராசியை பொறுத்தவரை 8, 11 இற்கு அதிபதியாக குரு விளங்குவதால் வக்ர காலதந்தில் சில நல்ல பலன்களையும் வாரி வழங்குவார்.

அஷ்டமாதிபதி வக்ரம் பெறும் பொழுது 'கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜயோகம்' என்பதற்கேற்ப திட்டமிடாது செய்யும் காரியங்களில் வெற்றி கிடைக்க வைப்பார். திறமை மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாக இருந்து உதவி செய்ய முன்வருவர்.

அரசு வழியில் நீண்ட நாட்களாக எதிர்பார்த்த கடனுதவிகள் கிடைக்கும். வீடு கட்ட, வேறு முக்கிய நிகழ்வுகளுக்காக கடன் கேட்டு விண்ணப்பித்திருந்தவர்களுக்கு வங்கிகளின் ஒத்துழைப்பும் கிடைக்கலாம். வளமோடு வாழ்பவர்களின் ஒத்துழைப்பும் கிடைக்கலாம். அவற்றை வாங்கி சுப விரயமாக்க செய்த ஏற்பாடுகள் பலன் தரும்.



அதே நேரத்தில் பதினொன்றுக்கு அதிபதியாகவும் குரு விளங்குவதால் வக்ர இயக்கத்தில் ஒரு சில இடையூறுகளும் வரலாம். அலைச்சல்கள் கூடும், கடல பயண வாய்ப்புகள் கை நழுவிப் போகலாம். பொதுவாக இளைய சகோதரத்தோடும், இணைந்திருக்கும் மாற்றினத்தவரோடும் அனுசரித்து செல்வது நல்லது.

வாகன பழுது செலவுகள் அதிகரிக்கும். பழைய வாகனங்கள் பலமுறை செலவு வைக்கிறதே என்று சொல்லி, அதை விற்றுவிட்டு, புதிய வாகனங்கள் வாங்கலாமா? என்ற சிந்தனை மேலோங்கும். இது போன்ற கிரகங்களின் வக்ர இயக்க காலங்களில் சுப விரயங்களை மேற்கொண்டால், வீண் விரயங்களிலிருந்து விடுபடலாம். புதிய வாகன சேர்க்கை அனுகூலம் தரும்.

### ரிஷப ராசியில் பிறந்த பெண்களுக்கு...

இந்த குருப் பெயர்ச்சி, பயணங்களை அதிகரிக்கச் செய்யலாம். பண வரவு எவ்வளவு வந்தாலும், வந்த மறு நிமிடமே செலவாகலாம். இனம் புரியாத கவலை, உள்ளத்தில் இடம் பிடிக்கும். மனக்குழப்பங்கள் அகல எதையும் ஒருமுறைக்கு பலமுறை மறு பரிசீலனை செய்வது நல்லது. குருவின் பார்வை பலத்தால் பிள்ளைகளின் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். கல்வியில், கலைத்துறையில், விளையாட்டு துறைகளில் முதன்மையாக வந்து மகிழ்ச்சி கடலில் ஆழ்த்துவர்.

கல்யாண வாய்ப்புக்காக காத்திருக்கும் ரிஷப ராசிப் பெண்களுக்கு திடீர் யோகம் வந்து சேரும். உடன் பிறப்பு களின் ஒத்துழைப்போடு ஒரு தொழில செய்யவும் முன்வருவீர்கள்.

(தொடரும்)

---

சர்வதேச தாதியர் தினம் 12 வைகாசி 2012

# தாதிய மரபின் மகத்துவம்

உலகத்தில் இறைவன் படைத்த மனித வாழ்க்கை முழுமை பெறுவதற்கு மனிதன் பிறக்கும் போது பணககாரனாகவோ, ஏழையாகவோ பிறப்பதில்லை. இறைவன் படைப்பில் கூட வேற்றுமை இல்லை. மானிடருக்கு பல வேறு வகையான பொருளாதார அரசியல், போர்ச்சுழல், சமூகக் காரணிகள் மூலம் உடல்உள ரீதியாக பாதிக்கப்பட்டவர்கள் போன்றோர்களே பெரும்பாலும் நோயாளிகளாக உருவெடுக்கின்றனர்.

தாதியத்தின் விடிவிற்காய் விளக்கேற்றிய பெருமாட்டியார் தாதியத்தின் தாயாக உருவெடுத்தார். அந்த பொனனான நாளினை இன்று சர்வதேச தாதிதினமாக உலகியல் ரீதியாக கொண்டாடப்படுகின்றது.

இம் மகத்தான சேவையை சகல வழியிலும் பின்பற்றும் தாதியரே இன்று பெருமை சேர்க்கின்றனர்.

இறைவன் மீது நாம் கொள்ளும் நம்பிக்கை நம்மை



புனிதமடையச்செய் கிறது. இன்று உலகில் எந்த வகை நோயினால் அல்லது வியாதிகளினால் பாதிக்கப்பட்டவர்களாக காணப்படினும், அதி நவீன தொழில்நுட்ப உதவி கொண்டும் பிரபல வைத்திய நிபுணர்கள் நிறைய உலகில் காணப்படுகின்றார்கள். அவர்கள் மூலம இந் நோய்களிற்கான மாற்று மருந்து வகைகள் நோய் எதிர்ப்புச் சக்திகளை கொடுத்து மனிதனை மருத்துவத்துறை பூரணமான ஆளாக மாற்றுவதற்கு மருத்துவத்தின் தாயாக காணப்படுகின்ற நபர் "தாதி". தாதிமார்கள் தாய்க்கு ஒப்பிடப்படுகின்றனர்.


இன்றைய உலகில் பெரிதும் மனித வாழ்வில் பங்காற்றிக்கொண்டு இருக்கும், மருத்துவத்துறைக்கு "தாதியமே" அடித்தளம் என்று கூறலாம். இறைவனால் படைக்கப்பட்ட மனித உயிரினங்களாகிய ஆண்,பெண் இருவரில் ஆண் தந்தையாகவும் பெண் தாயாகவும் இவ்வுலகத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளனர். புளோரன்ஸ் நைற்றிங்கேல் அம்மையார்

மருத்துவத்துறையில் இருக்கின்ற ஒவ்வொருவரும் மருத்துவ நிபுணர்கள், தாதிமார்கள், மருத்துவர்கள், மருந்தாளர்கள், மருத்துவ உதவியாளர்கள், ஊழியர்கள், சகல வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் ஒவ்வொருவர் மனதிலும் அதாவது தம்மிடம் அளவற்ற நம்பிக்கையை வளர்த்துக் கொள்ளவேண்டும். அந்த நம்பிக்கையுடன் சேவைகளைச் செய்யவேண்டும். நாமும் மற்றவர்களும் ஒருரிஷியாக மாற வேண்டும். என்ற தன்னம்பிக்கை மனதில் எழ வேண்டும். அப்படி இருந்தால் நாம் இந்த உலகையே இயக்க முடியும். எதற்கும் தளராத தன்னம்பிக்கை நம்மிடம் வேண்டும்

**செல்வி எஸ்.எம்.பிரியா**

**யாழ். பல்கலைக்கழக மாணவி.**

"தாதியத்தின் மகத்துவத்தை
தரணியிலே போற்றிட
மானிடனின் வினைதனைப்
மாண்புடனே போக்கிட
மருத்துவத்துறை மேலோங்க



மே பன்னிரெண்டில் சர்வதேச
தாதியர் தினமாகிய இந் நாளில்
பெருமை கொண்ட தாதியர்குலமாக
போக்கிடுவீர் - பிணியதனை
நாடெங்கிலும் உம் புகழ்
நாதமொலித்திடச் செய்திடுவீர் சேவை
நோயுறும் பொழுதினில் - நல்
தாதியாய் விளங்கிடுவீர்"

இம் மாதாவின் மகிமைக்கு ஈடு இணையாக விளங்கிடுவோம். சர்வதேச ரீதியாக அதி நவீன தொழில்நுட்பக் கருவிகளின் உதவியுடனும் நிபுணத்துவம் வாய்ந்த வைத்தியர்கள் உதவிகளுடனும் நோய் நிலைகளைக் கண்டும் ஆராய்ந்தும் பார்த்தும் அளப்பரிய சேவைதனை வழங்கிடும் வைத்திய நிபுணர்கள், தாதியர்கள், வைத்தியர்கள், வைத்தியசாலை சபை ஊழியர்கள் ஆகிய யாவரும் இத்தினத்தில் எம் "தாதிய குல விளக்கை" தாதியராகிய நாம் இவ்வுலகின் தெய்வங்களில் ஒன்றாக போற்றி அவர்களின் வழியில் வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு தாயவள் வழிகாட்டலில் அளப்பரிய சேவைதனை மன நிறைவுடனே வழங்கிடுவோம்.

# எரிபொருள் மானியம் வழங்கலுக்கு கடற்கலங்களின் பதிவு அவசியம்

(யாழ்ப்பாணம்)

கடற்றொழிலாளர்கள் தமது கடற்கலங்களின் பதிவினை உரிய முறையில் பதிவுசெய்து கொள்ளாதமை காரணமாகவே அவர்களுக்கான எரிபொருள் மானியம் வழங்குவது தாமதமடைந்து வருவதாக யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ந.கணேசமூர்த்தி தெரிவித்தார்.

தற்சமயம் தமது திணைக்களத்தில் பதிவினை மேற்கொண்ட கடற்றொழிலாளர்களது கடற்கலங்கள் சில இரட்டைப் பதிவிற்குட்பட்டிருப்பது கடற்றொழில் திணைக்களத்தினால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. சில கடற்றொழிலாளர்கள் தமது கடற்கலங்களினை உரிய முறையில் உரிமை மாற்றம் செய்யாமலும் பதிவுகள் மேற்கொண்டிருக்கின்றனர்.

இத்தகைய சிக்கல்களினால் அவற்றுக்கான எரிபொருள் மானியம் கிடைப்பது தடுக்கப்படுகிறது. எனவே இதுவரை எரிபொருள் மானியம் கிடைக்காதவர்கள் தமது கடற்கலத்திற்குரிய அனைத்து ஆவணங்களையும் உரிய முறையில் பதிவுசெய்து கொள்வதன் மூலம் இந்த மானியத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.

தற்சமயம் சுமார் 500 வரையான கடற்றொழிலாளர்களது பதிவுகள் கடற்றொழில் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அவை உறுதிப்படுத்தப்பட்டு வந்ததும் அதற்கான மண்ணெண்ணெய் முத்திரை வினியோகிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

தற்சமயம் மே மாதத்திற்கான எரிபொருள் மானிய முத்திரைகளும், யாழ். மாவட்ட கடற்றொழில் திணைக்களத்திற்கு வந்து சேர்ந்துள்ளது. ஏப்ரல் மாத முத்திரை விநியோகிக்கப்பட்டதும் மே முத்திரை விநியோகிக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (பா)

# மின் தடை பற்றிய தகவல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்புப் பணிகளுக்காக உயர்அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதாலும் கட்டமைப்பு வேலைகள் செய்ய வேண்டியிருப்பதாலும்

14.05.2012 திங்கட்கிழமை, 16.05.2012 புதன்கிழமை, 18.05.2012 வெள்ளிக்கிழமை மற்றும் 20.05.2012 ஞாயிற்றுக்கிழமை ஆகிய தினங்களில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரையும் கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர் பிரதேசம், தீவகப் பிரதேசம், அராலி, கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, முடமாவடிப்பகுதி, பாற்பண்ணைப்பகுதி, திருநெல்வேலி நகரம், மருத்துவபீடப் பிரதேசம், ஆடியபாதம் வீதி கொக்குவில் சந்தி வரையான பிரதேசம், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம் ஆகிய இடங்களிலும்,

15.05.2012 செவ்வாய்க்கிழமை, 17.05.2012 வியாழக்கிழமை மற்றும் 19.05.2012 சனிக்கிழமை ஆகிய தினங்களில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரையும் கோணடாவில் பிரதேசத்தின் மேற்குப் பகுதி, குளப்பிட்டிப் பிரதேசம், கொக்குவில் பிரதேசத்தின் ஒரு பகுதி, நாச்சிமார் கோவிலடி, புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம், சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர்பாதுகாப்பு வலயப் பகுதி, மல்லாகம், தெல்லிப் பளை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான் ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

# இந்தியாவின் பங்களிப்பு ஜெனிவாவுடன் முடியவில்லை

## பாரதீய ஜனதா மாநாட்டில் தீர்மானம்

(மதுரை)

ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஜெனிவாக் கூட்டத் தொடரில் கொண்டு வரப்பட்ட இலங்கைக்கு எதிரான தீர்மானத்துக்கு ஆதரவு வழங்கியதுடன் இந்தியாவின் பங்களிப்பு முடிந்து விடவில்லை என பாரதீய ஜனதாக் கட்சி தெரிவித்துள்ளது.

அத்துடன், இலங்கை விவகாரங்கள் தொடர்பில் இந்தியா இன்னமும் நிறைய செய்ய வேண்டியுள்ளதாக மதுரையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பாரதீய ஜனதாக் கட்சியின் மாநில மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இம் மாநாட்டில் இலங்கை விவகாரம் உள்ளிட்ட 13 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இலங்கையில் தமிழர் தாயகப் பிரதேசத்தில் சிங்கள மக்களைக் குடியேற்றும் இலங்கை அரசாங்கத்தை மத்திய அரசு கண்டித்து, அப்பிரதேசங்களில் தமிழ் மக்களை மீளக்குடியேற்ற உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இலங்கையில் இடம்பெற்ற போரின் போது இடம்பெயர்ந்த தமிழ் மக்களின் புனர்வாழ்வுக்குரிய அனைத்து நடவடிக்கைகளையும் மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும்.

இலங்கைக்கு விஜயம் செய்திருந்த சுஷ்மா சுவராஜ் தலைமையிலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், இடம்பெயர்ந்த தமிழ் மக்களின் புனர்வாழ்வுக்கும், தமிழக மீனவர்களின் உரிமையை நிலைநாட்டவும் இலங்கை அரசாங்கத்துக்கு மத்திய அரசு அழுத்தம் கொடுக்க வேண்டும் என தாமரைச் சங்கமம் என்ற பெயரில் இடம்பெற்ற இம்மாநாட்டில் இலங்கை விவகாரம் தொடர்பில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

# நீதிமன்ற ஊழியரின் வீட்டில் திருடர்கள் கைவரிசை

(யாழ்ப்பாணம்)

யாழ். மேல் நீதிமன்ற ஊழியர் ஒருவரின் வீட்டில் அண்மையில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் பொலிஸாருக்கு தண்ணி காட்டிவிட்டு தப்பி ஓடியுள்ளார். அவரிடமிருந்து மோட்டார் சைக்கிள் மீட்கப்பட்டுள்ளது.

கடந்த ஒரு வாரத்திற்கு முன்பு குறித்த வீட்டில் கணவன், மனைவி, மகள் மூவரும் இரவு உறங்கிக் கொண்டிருந்த நேரம் வீட்டில் உள்நுழைந்த திருடர்கள் மகளின் கழுத்தில் இருந்த சங்கிலியை அறுத்துக்கொண்டும் வீட்டின் வெளியிலிருந்து ஹொண்டா பிளசர் மோட்டார் சைக்கிளையும் திருடிச் சென்றுள்ளனர்.

வீட்டின் உரிமையாளர் யாழ். பொலிஸ் நிலையத்திற்கு முறைப்பாடு செய்துள்ளார்.

மேற்படி வழக்கினை யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராஜா விசாரணைக்கு எடுத்துக்கொண்ட போது குறித்த நபர் மோட்டார் சைக்கிள் அனுமதிப் பத்திரத்தினை பொலிஸாருக்கு காண்பிக்க முற்பட்ட வேளை அனுமதிப் பத்திரத்தினையும், மோட்டார் சைக்கிளையும் விட்டு தப்பி ஓடிவிட்டனர் என்று மாங்குளம் பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர்.

பொலிஸாரினால் திருடினைப் பிடிக்க முடியாத அளவிற்கு பயிற்சி அளிக்கப்படாதவர்கள் பொலிஸ் தரப்பில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளாரா என சட்டத்தரணி நீதவானிடம் கேள்வியெழுப்பியுள்ளார்.

அதேவேளை, குறித்த பொருளை 2 இலட்சம் பெறுமதியான பிணை முறியில் உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டின் இக்காலப் பகுதியில் ஒரு அலுவலகத்தில் கடமையாற்றும் ஊழியர்கள் வீட்டில் தொடர் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெறுவது திட்டமிட்ட செயலாக இருக்கலாம் என்றும் பலர் சந்தேகிக்கின்றனர். (எஸ்)

## யாழ். நகரில்...

விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது மோட்டார் சைக்கிளைத் திருடிச்சென்று விற்பனை செய்தவர் இராணுவ வீரரென மோட்டார் சைக்கிளை கொள்வனவு செய்தவர் தெரிவித்தார்.

இதனையடுத்து மோட்டார் சைக்கிளை கொள்வனவு செய்தவரை ஒரு இலட்சம் பெறுமதியான 2 ஆட்பிணையில் செல்ல அனுமதித்த நீதிபதி மா.கணேசராஜா விற்பனை செய்தவரை எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும், மோட்டார் சைக்கிளை உரியவரிடம் ஒப்படைக்குமாறும் உத்தரவிட்டார். (எஸ்)

## ஈ.பி.ஆர்.எல்.எவ்...

எமது சமூகம் கடந்த கால இழப்புக்களில் இருந்து எமது சமூகத்தை கட்டியெழுப்புவதற்காகவும் ஒரு தீர்வுத்திட்டத்தை நோக்கி நகர்த்துவதற்காகவும் கிழக்கில் தமிழர் ஒருவரை முதலமைச்சராக்குவதற்கும் அதிகாரப்பரவலாக்கலை உறுதியாக செயல்படுத்தவதற்கும் நானும் எங்களது கட்சியும் தமிழர்களின் ஒற்றுமையை பலமடையச் செய்வதற்கு சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையில் செயற்படும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஊடாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் மக்களின் ஒற்றுமையைப் பலப்படுத்த முடிவெடுத்துள்ளோம் என அவர் தெரிவித்தார்.

## ரணில் சந்திப்பு...

மாவட்டத்தின் தற்போதைய நிலைமை குறித்து கேட்டறிந்தார்.

மாலையில் மட்டக்களப்பு நகரிலுள்ள விருந்தினர் விடுதியொன்றில் மற்றுமொரு சந்திப்பொன்றில் அவர் கலந்து கொள்ள விருந்ததாகவும், அவ்விடுதியின் கட்டடத் தொகுதியிலேயே குண்டு கண்டுபிடிக்கப்பட்டதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் தயா கமகே தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் பாதுகாப்பு உத்தியோகத்தினர்களினால் கைக்குண்டு கண்டுபிடிக்கப்பட்டு சிறப்பு அதிரடிப் படையினருக்கு அறிவிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன் பின்னனி பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்று தயா கமகே தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்திற்கான விஜயத்தை முடித்துக் கொண்ட ரணில் விக்கிரமசிங்க நேற்று மாலையே கொழும்பு திரும்பினார். குண்டு கண்டெடுக்கப்பட்டது தொடர்பாக விசாரணை நடைபெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## பரந்தன்...

கீழ் உள்ளது. கடந்த வாரம் நடந்த இந்தக் கொலை குறித்து ஒரு முழுமையான புலனாய்வு நடத்தப்பட வேண்டும் என்றும், அதனை கனடா தொடர்ச்சியாக அவதானித்துவரும் என்றும் தான் முறைப்படியான ஒரு குறிப்பை அரசாங்கத்துக்கு அனுப்பியுள்ளதாக லெவி கூறியுள்ளார்.

## புலிகளுக்கு...

கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்த வழக்கு விசாரணை நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டபோதே அதிக பட்ச தண்டனை வழங்கப்படலாம் என கூறப்பட்டுள்ளது.

இவர் 2000 ஆம் ஆண்டு நடுப் பகுதியில் புலம்பெயர் தமிழர்களிடமிருந்து விடுதலைப் புலிகளுக்காக நிதி சேகரித்ததாக குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

## விசுவமடு...

சிப்பாயை 2 இலட்சம் ரூபா பெறுமதியான 2 பேரின் ஆட்பிணையில் செல்ல அனுமதித்ததுடன், வழக்கினை எதிர்வரும் ஆறாம் மாதம் 16 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

மதவாச்சி ரம்பாவை என்ற இடத்தைச் சேர்ந்த அமில சம்பத் பிரேமசிறி (வயது - 22) என்ற படைச் சிப்பாயே கைதாகி பிணையில் விடுவிக்கப்பட்டவராவார். (கே)

## நீதிமன்றில்...

விசாரணை மேற்கொண்ட பதில் நீதவான் விஜயராணி சிப்பாயை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இது குறித்த வழக்கு நேற்றைய தினம் பருத்தித்துறை நீதிமன்ற நீதவான் ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது நீதிமன்றில் வைத்து களவாடியமை, நீதிமன்றை அவமதித்தமை ஆகிய குற்றத்திற்காக குறித்த சிப்பாய்க்கு 6 மாத சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

## இலங்கையை...

உறுதியாகக் கூறியிருந்தோம்.

இலங்கையில் இடம்பெற்ற போரின் போது இடம்பெயர்ந்து இன்னும் முகாம்களில் தங்கியுள்ள மக்களைச் சந்தித்த போது, அவர்கள் தங்களின் துயரங்களை எம்மிடம் விளக்கியிருந்தனர். இலங்கையில் வாழ்கின்ற தமிழ் மக்களின் உணர்வுகள் என்பது தமிழகத்தின் உணர்வு மட்டுமல்ல, மொத்த இந்திய மக்களின் உணர்வு என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் நாம் தெரிவித்திருந்தோம்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நிலையான அரசியல் தீர்வொன்று கிடைக்கும் என்பதில் நாம் உறுதியாக இருக்கிறோம். இலங்கை அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதமை குறித்து ஜனாதிபதியிடம் நாம் கேள்வி எழுப்பினோம்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்குபற்றி இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பதற்கு ஏன் முயற்சிக்கக் கூடாது என தமிழ் பிரதிநிதிகளிடம் தெரிவித்தோம்.

தமிழர் பிரச்சினைக்கு தமிழீழம் தான் தீர்வு என்று கூறி இலங்கையைப் பிளவுபடுத்த தமிழக தலைவர்கள் முயற்சிக்கின்றனர். ஆனால் இலங்கையில் வாழ்கின்ற தமிழ் மக்கள் தமிழீழத்தை கேட்கவில்லை. ஐக்கிய இலங்கைக்குள் உட்பட்ட ஒரு அரசியல் தீர்வையே அவர்கள் விரும்புகின்றனர்.

அதேவேளை, எமது இலங்கை விஜயம் தொடர்பில் பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இலங்கைக்கு நாம் சுற்றுலாச் சென்றதாகவும் ஜனாதிபதியிடம் பரிசுகளை வாங்கியதாகவும் சிலர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இத்தகைய ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்கள் வருத்தத்தை ஏற்படுத்துகின்றது. இந்திய அரசின் சார்பில் நாம் இலங்கைக்கு விஜயம் செய்ததால், மரியாதை நிமித்தமாக ஜனாதிப்தி மகிந்த ராஜபக்ஷ வழங்கிய பரிசுப் பொருளைப் பெற்றுக் கொண்டேன். அப்பரிசுப் பொருளை நான் வீட்டுக்கு எடுத்துச் செல்லாமல் நாடாளுமன்றத்தில் ஒப்படைத்துள்ளேன்

இலங்கைக்கு நான் சென்ற பயணத்தின் நோக்கத்தை உண்மையாக நிறைவேற்றிவிட்டேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வாழ்வாதாரத்தை மேம்படுத்த கைத்தொழில்துறை அபிவிருத்தி

## அமைச்சர் டக்ளஸ் தலைமையில் ஆராய்வு



(கொழும்பு)

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சினூடாக முன்னெடுக்கப்பட்டு வரும் செயற்திட்டங்கள் மற்றும் எதிர் காலத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய செயற்திட்டங்கள் தொடர்பான உயர்மட்டக் கலந்துரையாடலொன்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று முன் தினம் இடம்பெற்றது.

இதன்போது பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழான பனை அபிவிருத்திச் சபை, தேசிய வடிவமைப்பு நிலையம் தேசிய அருங்கலைகள் பேரவை, கைத்தொழில் அபிவிருத்திச் சபை மற்றும் வடகடல் நிறுவனம் ஆகிய நிறுவனங்களினது நடப்பாண்டு செயற்திட்டங்கள் தொடர்பில் தெளிவுபடுத்தப்பட்டது.

மகிந்த சிந்தனைக்கமைவாக நாடளாவிய ரீதியில் மக்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் முன்னெடுக்கப்பட்டு வரும் சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில் துறைகளை வாழ்வெழுச்சித் திட்டத்தினூடாக எதிர்காலங்களில் அபிவிருத்தி செய்வது உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் அமைச்சர் விசேட கவனம் செலுத்தினார்.

இதன்பிரகாரம் ஒவ்வொரு நிறுவனங்களும் ஜனாதிபதியின் சிந்தனைக்கமைவாகவும் மக்களினதும் நாட்டினதும் பொருளாதார மேம்பாட்டைக் கருத்திற் கொண்டும் தமது பணிகளை ஆற்ற வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

அமைச்சின் கீழான குறிப்பிட்ட நிறுவனங்களினது தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள் உள்ளிட்ட துறைசார்ந்தவர்கள் ஊடாக அவர்களது தேவைகள் கோரிக்கைகள் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டன.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர்களான விக்ரர் அன்ரனி பெரேரா மற்றும் ஆர்.யோகராஜன் ஆகியோரின் கருத்துக்களும் கேட்டறியப்பட்டன.

இந்நிகழ்வில், பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி மற்றும் மேலதிகச் செயலாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# பாதுகாப்பு வலயம் இப்போது காடுகளில்

ஏழு மாவட்டங்களைச் சேர்ந்த 17 வனப்பகுதிகளை பாதுகாப்பு வலயங்களாக பிரகடனப்படுத்த சுற்றாடல் துறை அமைச்சு தீர்மானித்துள்ளது.

இவ்வனப் பிரதேசங்களை அரசாங்க வர்த்தமானி மூலம் பாது காப்பு வலயங்களாக பிரகடனப்படுத்தப்பட தீர்மானிக்கப் பட்டுள்ளதாக அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

இதன்படி மன்னார் மாவட்டத்தில் இரண்டு வனப்பகுதிகள், முல்லைத்தீவு மாவட்டத்தில் 3 வனப்பகுதிகள், கிளிநொச்சி மாவட்டத்தில் 4 வனப்பகுதிகளும் பாதுகாப்பு வலயங்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

இத்துடன் பொலன்நறுவை மாவட்டத்தில் 3 வனப்பகுதிகள், திருகோணமலை, கொழும்பு மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் தலா ஒவ்வொரு வனப்பகுதிகளும் பாதுகாப்பு வலயங்களாக பிரகடனப் படுத்தப்பட்டுள்ளன.

# அடையாள அட்டை விநியோகம் அமுலாகிறது விசேட திட்டம்

இம்முறை கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கு தேசிய அடையாள அட்டைகளை விநியோகிப்பதற்கான விசேட திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பரீட்சார்த்திகள் அநாவசிய மன அழுத்தங்களுக்கு உள்ளாவதைத் தடுக்கும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக ஆட்பதிவு ஆணையாளர் ஜகத் விஜேவீர தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அதிபர்கள் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர்களை தெளிவூட்டும் வகையில் சுற்றுநிருபம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இம்முறை சாதாரண தரப் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களில், இந்த வருடம் ஒக்டோபர் 31 ஆம் திகதி 16 வயது பூர்த்தியாகும் அனைவரும் தேசிய அடையாள அட்டைக்கான விண்ணப்பங்களை ஜூன் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னதாக சமர்ப்பிக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய அடையாள அட்டைக்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும்போது பிறந்த மாதத்திற்கு அமைவாக வெவ்வேறான கோவைகளை சமர்ப்பிக்குமாறு ஆட்பதிவு ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

விண்ணப்பங்களை உறுதிப்படுத்தி உரிய ஆவணங்களுடன் சமர்ப்பிப்பதன் மூலம் அசௌகரியங்களை தவிர்த்துக்கொள்ள முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒக்டோபர் 31 ஆம் திகதி 16 வயது பூர்த்தியாகாத பரீட்சார்த்திகளுக்கு தபால் அடையாள அட்டைகளை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு அதிபர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் ஆட்பதிவு ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பாக ஏதேனும் பிரச்சினை இருப்பின் 0112 583 122 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு ஆட்பதிவுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

# பணிப் புறக்கணிப்புக்கு தடை மருத்துவர் போராட்டம் பிசுபிசுப்பு

(கொழும்பு)

பல்வேறுபட்ட கோரிக்கைகளை முன் வைத்து அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் நேற்றுக் காலை முதல் மேற்கொண்ட சேவைப் புறக்கணிப்புப் போராட்டம் கைவிடப்பட்டது.

இந்தத் தகவலை, அரச மருத்துவ அதிகாரிகள் சங்க ஊடக குழு உறுப்பினர் நவின் சொய்சா வெளியிட்டுள்ளார்.

அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னரே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப் பட்டதாகவும், தமது பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு பெற்றுக் கொடுக்க இணக்கம் காணப் பட்டதாகவும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடகக் குழு உறுப்பினர் நவின் சொய்சா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அரச மருத்துவ அதிகாரிகள் மேற்கொண்ட சேவைப் புறக்கணிப்பு காரணமாக நாடளாவிய ரீதியில் மருத்துவமனை நடவடிக்கைகள் பெரும் பாதிப்புக்கு உள்ளாமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, அரச வைத்தியர்கள் மேற்கொண்டு வரும் பணிப் பகிஷ்கரிப்பை உடன் நிறுத்துமாறு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று தடை உத்தரவு பிறப்பித்தது.

# கல்வி வண்டில் அச்சாணியை கழட்ட முயல்கிறது அரசாங்கம்

## ஐ.தே.க.குற்றச்சாட்டு

(கொழும்பு)

உயர் கல்விக்காக தேசிய பாடசாலைகளுக்கிடையில் மாணவர்கள் மாற்றப்படும் நடவடிக்கை தடை செய்யப்பட்டமையானது அரசியல் காரணங்களுக்காகவே என ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ் சுமத்தியுள்ளது.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அகில விராஜ காரியவசம் இவ்வாறு தெரிவித்தார்.

இதுமட்டுமல்லாது தேசிய பாடசாலைகளுக்கு கிடைக்கப் பெறும் உயர் பெறுபேறுகளையும் குறைக்கும் ஒரு நடவடிக்கையாகவுமே இது அமையும் என அவர் தெரிவித்தார்.

இதன் மூலமாக அரசு கல்வி எனும் வண்டிலின் அச்சாணியை கழட்ட முற்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

உயர்கல்விக்கென மாணவர்கள் தேசிய பாடசாலைக்கு மத்தியில் மாற்றப்படுவது கல்வி அமைச்சின் சுற்றறிக்கை மூலம் தடை செய்யப்பட்டுள்ளதாக நேற்று முன் தினம் அறிவிக்கப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தலைமையில் மாற்றம் வேண்டும் குவியும் குற்றச்சாட்டுக்கள்

வலி.மேற்கு தனியார் பஸ் போக்குவரத்துச் சங்கத்தின் தலைவராக கடந்த 27 வருடங்களாக பதவி வகிக்கும் சிங்க அரியரட்ணம் என்பவர் மீது அதன் அங்கத்தவர்கள் பல்வேறு குற்றச் சாட்டுக்களைச் சுமத்தி வருகின்றனர்.

தனியார் பேருந்துச் சங்கத்திற்கு நேர அட்டவணையைப் பின்பற்றாதவர்களிடம் இருந்து அறவிடப்படும் பணம், அங்கத்துவப் பணம் எனப் பல்வேறு வழிகளில் நிதி கிடைக்கின்றது. ஆனால் அவற்றுக்கு இன்று வரை எந்தவித கணக்கறிக்கையும் உறுப்பினர்களுக்கு வெளிப் படுத்தவில்லை எனவும், சங்க உறுப்பினர்கள் மத்தியில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு தனக்கு ஆதரவானவர்களுக்குச் சார்பாக இயங்குவது, தன்னுடைய பெயரில் இரண்டு பஸ்களை சேவையில் ஈடுபடுத்திக் கொண்டு ஏனையவர்களுக்கு குறைவான வழித்தட அனுமதியை வழங்குவது என குற்றஞ் சுமத்தும் அங்கத்தவர்கள், குறித்த சங்கத்திற்கு புதிய நிர்வாகத் தலைமையை வேண்டி நிற்கின்றனர்.

# கஞ்சாவுடன் கைது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பாரதிபுரம் பகுதியில் 29 கட்டு கஞ்சா வைத்திருந்த ஒருவர் நேற்றைய தினம் பொலிஸாரால் கைது செய்யப் பட்டார். கைதான நபரை கிளிநொச்சி நீதிமன்றில் பொலிஸார் ஆஜர்படுத்திய வேளை குறித்த நபரை எதிர்வரும் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

(கே)

# பரிந்துரைகளை நிறைவேற்ற நீதி அமைச்சுக்கு கடப்பாடு

## அமைச்சர் ஹக்கீம் கூறுகிறார்

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு முன்வைத்த பரிந்துரைகளை நிறைவேற்றுவதற்கு நீதி அமைச்சுக்கு பாரிய கடப்பாடு உள்ளதாக நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான நோர்வே உயர்ஸ்தானிகர் ஹில்ட் ஹரல்ஸ்டாவை சந்தித்துப் பேசும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்த வேண்டிய முறை குறித்து அரசிற்கு ஆலோசனை வழங்குவதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி குழு ஒன்றை அமைத்துள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

அரசினையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினையும் மீண்டும் பேச்சுவார்த்தையில் ஈடுபடுத்துவதற்கு மஸ்தியஸ்தம் வகிப்பதே சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் குறிக்கோள் எனவும் அமைச்சர் நோர்வே உயர்ஸ்தானிகரிடம் தெரிவித்தார்.


## உடனடி வேலைவாய்ப்பு

### அச்சகத்துறையில் ஆர்வமுள்ள இளைஞர்களுக்கு அரிய சந்தர்ப்பம்

தினமுரசுப் பத்திரிகையில் ஒப்செற் (Offset) அச்சு முறையை முழுமையாகப் பழகி பணிபுரிய ஆர்வமுள்ளவர்கள் (இரவு, பகல் வேலை. பயிற்சிக் காலத்தில் சம்பளமும் வழங்கப்படும்) ஆளணி முகாமையாளரை வேலை நாட்களில் காலை 9.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை காரியாலயத்தில் தொடர்பு கொள்ளவும்.

SORD, KORD இயக்கத் தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

தினமுரசு,
இல.373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 மே 12 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.